# ஆன்மீக ஆளுமை

அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர்



# காலமும் கருத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C Daml
18/02/23

# ஆன்மீக ஆளுமை

## தன்மன்பிள்ளை வண்ணக்கர்

# காலமும் கருத்தும்

தன்மன்பிள்ளை நினைவுப்பணி மன்றம்

களுதாவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரம்:**

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | ஆன்மீக ஆளுமை<br>தன்மன்பிள்ளை வண்ணக்கர்<br>(காலமும் கருத்தும்) |
| வகை | : | வாழ்வியல் |
| பதிப்பாசிரியர் | : | கவிக்கோ வெல்லவூர்க் கோபால் |
| வெளியீடு | : | தன்மன்பிள்ளை<br>நினைவுப்பணி மன்றம்,<br>களுதாவளை. |
| பதிப்பு | : | 1ம் பதிப்பு 2022 |
| பிரதிகள் | : | 500 |
| நூல் வடிவமைப்பு | : | மணிவண்ணன் அருண். |
| நூல் சரவைபார்த்தல் | : | பொ. திருச்செல்வம் (ஆசிரியர் ) |
| பக்கங்கள் | : | 172 |
| அச்சுப் பதிப்பு | : | மாருதி அச்சகம், களுதாவளை. |

( கட்டுரைகளில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் கட்டுரைகளை ஆக்கியவர்களின் சொந்தக்கருத்துகளாகும். )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளடக்கம் :**


பதிப்புரை V

ஆசிச்செய்தி vii

சைவப்பெரியார் தன்மன்பிள்ளை

வாழ்வியலூடான பார்வையும் பதிவும் 01

சமயப்பணிகள் 06

கல்விப்பணிகள் 28

சமூகப்பணிகள் 44

வெற்றிலையூரானே ... வேழமுக நாயகனே

**க. கருணாகரன்** 59

தன்னடக்கமிக்க தலைவர் அமரர் தன்மன்பிள்ளை

**சி. சண்முகம்** 60

களுதாவளை வரலாற்றில் நிலைபேறான மாமனிதம்

**க. பாஸ்கரன்** 66

புகழ்மிக்க பெருந்தகை

**கா. வேலாயுதபிள்ளை** 75

மறைந்தும் மறையாத மாமனிதர்

**ஞா. யோகநாதன்** 77

என்றென்றும் நினைவுகூரத்தக்க உத்தம புருஷர்

**வே. குணாளன்** 79

அன்பும் அமைதியும் நிறைந்த கௌரவ வண்ணக்கர்

**வ. கனகரெத்தினம்** 83

என்றும் மக்கள் மனதில் நிறைந்த பெருமகனார்

**சி. பத்மநாதன்** 85

ஆன்மீக ஆளுமைமிக்க கௌரவ வண்ணக்கர் .....

**க. நாராயணபிள்ளை** 89

இறைபணியில் மாமனிதராக விளங்கிய கௌரவ.....

**இ. சசிகரன்** 101

மட்டக்களப்புப் பிரதேச நிலவுடமை முறைமை

**கலாநிதி ச. ஜெயராஜா** 103




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சி. தன்மன்பிள்ளை தொடர்பான எனது நினைவுகள்
**ப. குணசேகரன்** 108
எங்கள் வழிகாட்டி பற்றி
**க. இராசலிங்கம்** 111
ஆர்ப்பரிப்பில்லாத அமைதியான தலைவர் .......
**க. வேதநாயகம்** 114
நித்திய நினைவில் அமரர் சி. தன்மன்பிள்ளை......
**க. தங்கவேலாயுதன்** 117
மக்கள் மனதில் நிறைந்த மகான்
**இ. கோபாலபிள்ளை** 121
தன்னலம் கருதாத்தந்தை
**த. சுந்தரலிங்கம்** 126
கவிதாஞ்சலி ....
**ப. சிவலிங்கம்** 136
உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்துள் எல்லாம்.....
**ஆ. அரசரெத்தினம்** 141

களுதாவளை பிள்ளையார் ஆலயத்தில்
அமரர் சி. தன்மன்பிள்ளை அவர்களுடனும் அதற்குப்
பின்னரும் வண்ணக்கர்களாக பணிசெய்த அமரர்கள் 149

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் பணிசெய்த
வண்ணக்குமார்கள் 153

பிற விடயங்கள் 156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இலங்கையின் தென்கிழக்காக வங்கக் கடலின் அலைக்கரத்தில் வாவிமகள் கட்டிய அழகான தொட்டிலென திகழ்வது நமது களுதாவளைக் கிராமம். மட்டக்களப்பு மாநிலம் எனும் நமது சரித்திர பூமியில் என்றுமே பெயர்த்தெடுக்க முடியாத குன்றாக நிலைபெற்ற பலநூறு ஆண்டுகால சிறப்பான வரலாறு அதன் பெருமை பேசும். நுழை வாயிலில் குடிகொண்டு எம்மையெல்லாம் ஆக்கும் கடவுளாகவும் என்றுமே காக்கும் கடவுளாகவும் நாளாந்தம் வருவோரையும் போவோரையும் மனதார வாழ்த்தும் கடவுளாகவும் அருள்பாலிக்கும் ஆனைமுகவனே எங்களது மூலமுதல்வன்.

மிகுந்த உணர்வுபூர்வமான மாந்தர்கள் வாழ்ந்து மறைந்த இதன் அகண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினூடே தலையாய ஒரு ஆன்மீக ஆளுமையாக மிளிர்பவர் அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள். இளமைக் காலம் முதலே பொதுவாழ்வில் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட அவர் களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தலைமை வண்ணக்கராக பதவியேற்றது முதலாக ஆற்றிய பணிகள் இன்றுவரை அனைவரது உள்ளங்களிலும் அவரை நீக்கமற நிலைநிறுத்தியிருப்பதை பார்க்கின்றோம்.

நமது கிராமத்தின் காலக் கொடையாக வந்துதித்த அவரது பணிகள் அனைத்துமே தீர்க்கதரிசனம் மிக்கவையாகவும் தூரநோக்குக் கொண்டவையாகவுமே நின்று நிலைப்பதை நம்மால் உணரமுடிகின்றது.

சாமானியருள் சாமானியராக வாழ்ந்து மறைந்த அவரது சாதனைகளும் உயர்வும் பிறர்கையால் வந்தவையல்ல. அது அவரது உழைப்பையும் விடாமுயற்சியையும் உரமாக்கி உயிர்த்தவை.

அத்தகைய பெருமைசார்ந்த ஒருவரை நினைவுகூருவது நமது பெரும் கடமையாகவும் காலத்தின் கட்டாயமாகவுமுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நூலில் எமது கடந்தகால சூழலில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகளையும் அச்சேற்றி ஆவணப்படுத்தியுள்ளோம். இது எமது வருங்கால சந்ததியினருக்கு எமது கிராமத்தின், ஆலயத்தின் வரலாற்றை அறிய உதவுமென நம்புகின்றோம்.

இந்நூல் வெளிவர நமக்குப் பக்கபலமாகவிருந்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகொள்கின்றோம். இதில் பதிவான ஆக்கங்களையும் புகைப்படங்களையும் மனநிறைவாகத் தந்துதவிய நல்லுள்ளங்களுக்கு எமது பணிவான நன்றிகள். மிக முக்கியமாக இதில் இடம்பெற்றிருக்கின்ற அனைத்து அம்சங்களையும் பார்த்தும் படித்தும் பதிப்பித்தும் உதவிய நமது கிராமத்தின் மிகுந்த பற்றாளர் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


மேலும் மிக அழகாக அச்சிட்டு உதவிய களுதாவளை மாருதி அச்சக உரிமையாளர் பா. மணிவண்ணன் அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளுக்கு அர்ப்பணிப்பான சேவைக்கும் நன்றிக்கடனுடையவராயிருக்கின்றோம். அவர்கள் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

**அமரர் தன்மன்பிள்ளை நினைவுப்பணி மன்றம்**
களுதாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை :



## கவிக்கோ வெல்லவூர்க் கோபால்

தேசியக் கலைஞர்
கலாபூஷணம் எஸ். கோபாலசிங்கம்

கடலோரம் இளமுருகன் பள்ளி அண்ணன்
கணபதியோ ஊரெல்லாம் ஞானப்பள்ளி
வடபுறத்தே குடியிருக்கும் அவனை வாழ்த்தி
வந்தால்தான் தென்புறத்தே சீறிநிற்கும்
விடம்கொண்ட நாகத்தாள் வழிவிடுவாள்
வேண்டுமெனில் களுதா வளையினுக்கு
படையோடு வாருங்கள் வெற்றி கொண்டால்
பாடுவதை நான்விடுவேன் கோடியுண்மை

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் களுதாவளைக் கிராமம் குறித்து நான் பாடிய பாடலிது. பச்சை போர்த்திய பசிய வயல் பரப்பும் வட்டுநிறைத்து மதாளித்த தென்னைகளும் பசிய காய்கறித் தோட்டங்களும் வளைந்து வளைந்து படர்ந்து கிடக்கும் வெற்றிலைக் கொழுந்துகளைத் தொட்டுத்தழுவி மிதந்துவரும் சீதளத்துத் தென்றலும் என்றும் நம் நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளும். இக்கிராமத்தின் பாரம்பரிய மரபுவழிப்பட்ட பண்பாட்டு அம்சங்களும் கள்ளம் கபடமற்ற பாமரத் தன்மை கொண்ட அம்மக்களது சமூகக் கட்டமைப்பும் வாழ்க்கை முறைகளும் என்றுமே தனித்துவமானவை. இக்கிராமத்து வரலாற்றுடன் இந்துப் பண்பாடும் இரண்டறக் கலந்தேயுள்ளது. அங்கு கோவில்கொண்டு அருள்பாலிக்கும் தும்பிக்கையோனில் நம்பிக்கை கொண்டவர்கள் எதிலுமே தோற்றுப்போனதாக வரலாறில்லை. சுருங்கக் கூறின் இன்று கல்வியால் கலைச்சிறப்பால் கற்றோர் வாழ் பெருமதிப்பால், சொல்லால் செயலால் தூய செந்தமிழ் மரபால், வல்லோர்கள் வாழுகின்ற வளமார்ந்த திருப்பதி என்ற பெருமையை கிழக்கு மண்ணில் நிலைநிறுத்தி தலைநிமிர்ந்து நிற்கும் பெருமையுடையது இக்கிராமம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் பெருமைபேசும் அமரர் சின்னத்தம்பி தன்மன் பிள்ளை அவர்கள் இக்கிராமத்துக் கொடைகளில் மிக்க முதன்மை யானவர். தொட்ட பணிகள் அனைத்தையும் துலங்கச் செய்த பெருமையால் தனது பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர். அத்தகைய பெருந்தகையாளரின் சிறப்புக் குறித்து வெளிவரும் இந்நூலின் ஆக்கங்களையும் ஏனைய பதிவுகளையும் பார்த்துச் செம்மைப்படுத்தி தொகுத்துப் பதிப்பிக்கக் கிடைத்த வாய்ப்பானது நான் முழுமனதாக நேசிக்கும் களுதாவளைக் கிராமத்திற்குச் செய்த ஒரு நல்ல பணியாகவே கொள்ளவேண்டும். பெரியார் தன்மன்பிள்ளை அவர்களின் நனவிடை தோய என்னைப்போல் உங்களையும் இருகரம் கூப்பி அழைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கழுதாவளைப் பிள்ளையார் ஆலய
முன்னாள் பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள்**

மனிதர்கள் மாணிக்கம்

இஃது கழுதாவளைப் பிள்ளையாரின் திருத்தொண்டர்க்கு
சிவத்தம்பி. தன் மனையாளுடன் வைரவிழாக் காண்கின்ற
அறங்காவலர் அன்னாரின் நினைவாக.

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்தன
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே
ஆம்.

கழுதாவளைப் பிள்ளையார் எழுந்தருளி அடியவர்கள்
புரியும் தானம் அன்னியபூசையாகும் நலமும் நெய்தல்
இணைந்த கிராமம் வளர்ந்தோங்கப் பரிவோடு
வெற்றியுடன் வளர்ச்சியுடன் செழிப்புற்றோங்கும்
கல்வியும் செல்வமும் குன்றாது வேளையும் செழித்து
விளங்குவது இக்கிராமம். பக்கத்துக் கிராமங்களுடன்
ஆலயங்களும் ஆறும் செய்யும் பக்தியும் அமைந்த பண்
பாளர்களும் வாழும் தேசம் அவை.

ஐதீகிய கிராமத் திருவாக்கல் தெய்வத்தாபனம் செய்து
வழிபாடு செய்து வந்தால் அக்கிராமத்தின் பூரணத்தையும்
அரசும் ஏககிராமாதி காரியங்கள் தெய்வத்தாபனம் செய்தால்
கிராமாதி காரியங்கள் எல்லாவற்றையும் பரிபாலிக்கும்.

ஒரு அரசனும் தெய்வதாபனம் செய்து வழிபட்டால்
அவ்வரசனது ஆட்சியில் உள்ளவர்கள் நிலைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஆதலினால் வந்துவிட்டதால் தான் தோன்றியாக
வெளிப்பட்டிருக்கும் தலம் [illegible]
[illegible] உண்டாம்

இப்படியான மகா சக்தி [illegible] விநாயகரை
[illegible] ஆலயக் கிரியைகளைக் கொண்டு [illegible]
வந்தவர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் [illegible] 5 [illegible]
[illegible] உபயகாரர்களாய்
ஆலயத்தில் [illegible] அன்புடன் [illegible] வேண்டிய
உதவிகள் செய்து [illegible] இக்காலகட்டத்தில்
1970 [illegible] 85 வருடம் [illegible]
[illegible] அவன் [illegible]

[illegible] தன்மன்பிள்ளை வண்ணக்கர் [illegible]
[illegible] கடவுள் [illegible]
[illegible]
வேண்டாமோ? எங்கள் [illegible] என்று [illegible]
[illegible] அதன்படி [illegible]
தான் [illegible] ஆலயம் [illegible]
[illegible]
[illegible] ஆலயத்தில் [illegible]
[illegible] தன் [illegible]
செய்யவே [illegible] 15 வருடம்
[illegible] ஆலயத்தின் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(வாழ்க வையகம்) [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பெரியார் தன்மன்பிள்ளை

## வாழ்வியலூடான பார்வையும் பதிவும்

**- மலர்க்குழுவினர் -**



"தன்னை நன்கு படைத்தனன்
இறை பணி செய்வதற்கே"

என்ற அமுத வாக்கிற்கிணங்க சைவப் பெரியார் தன்மன்பிள்ளை அவர்கள் சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப் பணி எனப் பல்வேறு பணிகளையும் செவ்வனேயாற்றி களுதாவளைக் கிராமத்திற்கும் இப் பிரதேசத்திற்கும் பெருமையினை ஈட்டித்தந்துள்ளார். அவருடைய காலத்தில் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் அடைந்த துரித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவர் ஆற்றிய மகத்தான பணியே உந்துசக்தியாக திகழ்ந்தது எனலாம்.

### தோற்றுவாய் :

மட்டக்களப்பின் வரலாற்றுப் பெருமைமிக்க பழம்பதி களுதாவளை. வங்கக் கடலின் அலைதொட்டு வாவிமகள் கட்டிய அழகான தொட்டில். கடலோரம் இளமுருகன் பள்ளிகொள்ள கணபதியோ ஊரெல்லாம் ஞானப்பள்ளிகொள்ளும் ஆன்மீக பூமி. அங்கு பேரோடும் புகழோடும் வாழ்ந்தவர்கள் சின்னத்தம்பி கண்ணம்மை தம்பதியினர். சின்னத்தம்பி போற்றினாச்சி குடியைச் சேர்ந்தவர்.தாயார் பெத்தாக்கிழவி குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்களது அருந்தவப் புதல்வராக மண்ணில் உதித்தவர் தன்மன்பிள்ளை அவர்கள். 22.07.1907 ஆம் திகதி அவரது மண்ணின் வரவாகப் பதிவாகியுள்ளது. இவருக்கு மூன்று சகோதரிகள். இதில் இருவர் இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டனர். இவர்களுடைய குடும்பம் சைவக்குடும்பம். கிராமத்தில் மக்களோடு இணைந்து பண்பாகவும், அன்பாகவும், பக்குவமாகவும் பழகும் பண்பாடு அவர்களிடம் நிறையவே காணப்பட்டது. சைவச்சூழலில் வளர்ந்த அமரர் தன்மன்பிள்ளைக்கு உரிய காலத்தில் சைவ சமய தீட்சையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழங்கப்பட்டது. இதே கிராமத்தைச் சேர்ந்த கந்தப்பர் காளியம்மை தம்பதியின் இரண்டாவது புத்திரியாகிய வாலயப்பிள்ளையை தனது இல்லறத் துணையாக தன்மன்பிள்ளை இணைத்துக்கொண்டார். கந்தப்பர் தம்பதியருக்கு இக்கிராமத்தில் மிகுந்த செல்வாக்கிருந்தது. வெற்றிலை செய்கையில் அதி உச்சத்தை அடைந்தவர் கந்தப்பர். தன்மன்பிள்ளை தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள். மூத்தவர் கனகசபை - விவசாயத் திணைக்கள கிழக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றியவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பரமேஸ்வரி கார்த்திகேசு - ஓய்வுநிலை ஆசிரியை (முதலாம் தரம்), சுந்தரலிங்கம் - ஓய்வுநிலை அதிபர் (முதலாம் தரம்), சிவநேசம் வீரபத்திரன், அமரர் அருள்மாணிக்கம் - அதிபர் (முதலாம் தரம்), மகேஸ்வரி சதாசிவம், மங்கையர்க்கரசி சோமசூரியம், இராஜேஸ்வரி சௌந்தரராஜன் - ஆசிரியை (முதலாம் தரம்), சுகுணா தில்லைவாசன் அனைவரும் இல்லற வாழ்க்கையில் இனிதே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அமரருக்கு மூன்று சகோதரிகள். மூத்தவர் பெரியபிள்ளை. இவர் வீரபத்திரன் பரிகாரியாரை திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு இராசம்மா, தெய்வானை என இரு புதல்விகள். இரண்டாவது சகோதரி பார்வதி. இவர் முத்துக்குமார் என்பவரை திருமணம் செய்திருந்தார். இளைய சகோதரி கனகம்மா அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதர் சின்னத்தம்பி (கீப்பர்) அவர்களை திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களின் புதல்வி பார்பதி ஆசிரியை ஆவார். இவர் பெரியபோரதீவைச் சேர்ந்த காணி அபிவிருத்தி அலுவலர் குமரப்போடி கணபதிப்பிள்ளை அவர்களை மணம்முடித்தார். இவர்களுக்கு ஆறு பிள்ளைகள். மூத்தவர் பாஸ்கரன்-ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் களுதாவளை பிள்ளையார் ஆலய பரிபாலனசபை தலைவரும் வண்ணக்கரும். திருமதி சிவகுமாரி கனகரெத்தினம்-ஆசிரியை, திருமதி. உதயகுமாரி மகேஸ்வரன்- பிரதிப் பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொழும்பு. திரு.கருணாகரன் - இலங்கை நிருவாக சேவை மூத்த அதிகாரி, கிழக்குமாகாணத்தின் பல அமைச்சுகளில் செயலாளராகவும் தற்போது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராகவும் கடமையாற்றுபவர், திருமதி. ஜெயக்குமாரி தியாகராசா-ஆசிரியை, திருமதி. ஆனந்தகுமாரி நிர்மலன்-மக்கள் வங்கி முகாமையாளர். அனைவரும் அரசாங்க சேவையில் இணைந்து சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கஷ்டப்படுகின்ற மக்களுக்கு தங்களால் இயன்ற உதவியை வழங்கி வருகின்றார்கள்.

அமரர் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரிகள், குழந்தைகள், பேரப்பிள்ளைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோவில்கள், பாடசாலைகளுக்கு பல உதவி களையும் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டப்படும் மக்களுக்கும் தங்களால் இயன்ற உதவியை வழங்கி வருகிறார்கள்.



அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் மனைவியும்
இளைய சகோதரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்களின் இளைய சகோதரியின் ஒரே மகளும் களுதாவளைக்கிராமத்தின் போற்றத்தகு ஆசிரியையுமான திருமதி பார்பதி கணபதிப்பிள்ளை.**

## இளமைக்காலம்:


தனது ஆரம்பக்கல்வியை களுதாவளை மெதடிஸ்த பாடசாலையில் தொடங்கிய தன்மன்பிள்ளை படிப்பில் மிகவும் திறமைசாலியாக இருந்தும் கூட அதனைத் தொடராது சுய தொழிலில் ஈடுபட்டார். எதையும் விரைவில் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் மிகுந்தவராக காணப்பட்டார். எந்த பொறுப்பையும் சவாலையும் துணிச்சலோடு எதிர்கொள்ளக்கூடிய சுபாவம் உடையவராக அவர் விளங்கினார். கல்வியில் ஆர்வம் உள்ளவராகவும் திறமைசாலி யாகவும் திகழ்ந்தார். ஆனாலும் அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டங்களினால் அவர் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும் நோக்கில் மேற்கல்வியைத் தொடரவில்லை. அவருடைய ஆளுமை, தலைமைத்துவம் அவரை அவர்களின் குடும்பத் தலைவராக மாற்றியது. அவர் கிராமஅபிவிருத்தி, சமயவிருத்தி, ஏழை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற நற்காரியங்களில் ஈடுபட்டார். அத்தோடு இளைஞர்களை ஒன்றிணைத்து நற்கருமங்களில் ஈடுபடச்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் குடும்ப உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக மக்களிடையே நல்லபிப்பிராயமும் செல்வாக்கும் ஏற்பட்டது. அந்த நாட்களில் பிள்ளையார் கோவில் வண்ணக்கர் என்றால் அதற்கு நிகரான பதவி எதுவும் இருக்கவில்லை என்றே கூறலாம். அக்காலத்தில் இந்தியாவில் இருந்து வெளிவந்த பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகளை ஆர்வத்தோடு படித்து ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். தனக்காக மட்டும் வாழாமல் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு உடையவராகத் திகழ்ந்தார். பல இழப்புக்கள் குடும்பத்தில் ஏற்பட்டதன் காரணமாக கடினமாக உழைக்க உந்தப்பட்டார். வெற்றிலைச் செய்கை, நெல் வேளாண்மைச் செய்கைகளிலுள்ள நுணுக்கங்களை அறிந்து சிறந்த விவசாயியாக திகழ்ந்தார். தந்தையாரின் பெற்றோர்களுக்கு "துரையினுடைய காடு" என்னும் இடத்தில் மேட்டுக் காணிகள் இருந்தன. இங்குதான் வெற்றிலை செய்கை பண்ணப்பட்டது. அதிக வருமானம் கிடைக்காவிட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைத்தது. இங்குதான் அமரர் அவர்களுக்கு வெற்றிலைத் தோட்டங்கள் இருந்தன. ஸ்ரீ முருகன் ஆலயமும் அருகில்தான் உள்ளது.

## சமயப்பணிகள் :

### வண்ணக்கராக நியமனம்:

அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் 1938 ஆம் ஆண்டு வண்ணக்கராக தெரிவு செய்யப்பட்டு மாசிமகத் தினத்தன்று தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். அக்காலப் பகுதியில் இருந்த வண்ணக்குமார்களின் விபரம்:

| | |
|---|---|
| திரு.சி.வ. தன்மன்பிள்ளை | பெத்தாக்கிழவி குடும்பம் |
| திரு.க.வ. கண்ணமுத்து | பேனாச்சி குடும்பம் |
| திரு.க.வ. கார்த்திகேசு | சுரக்கா மூர்த்தி குடும்பம் |
| திரு.சி.வ. செல்லப்பிள்ளை | போற்றினாச்சி குடும்பம் |
| திரு.க.வ. கணபதிப்பிள்ளை | செட்டி குடும்பம் |

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய நிருவாகத்திற்கு மாத்திரமின்றி கிராமத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஊர்க் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கும் சைவசமய மேம்பாட்டுக்கும் பொறுப்பானவர்களாக இவ் வண்ணக்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டு செயற்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணக்குமார்களிடையே நல்லுறவு, ஐக்கியம், சொந்தபந்தம் என்பவை ஒற்றுமையாக நல்ல தீர்மானங்களை எடுத்து செயல்பட ஏதுவாகயிருந்துள்ளது, சிறந்த நிருவாகம் நிலவியது. துரித அபிவிருத்தி ஏற்பட்டது. சகல வண்ணக்குமார்களும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினர்.

## நிருவாகக் கட்டமைப்பு:

வண்ணக்குமார்களே கோவில் நிருவாகத்திற்கும், ஊர் சம்பந்தமான சகல விடயங்களுக்கும் பொறுப்பாளர்களாக இருந்தார்கள். வண்ணக்குமாரின் அனுமதி இன்றி எதுவும் கிராமத்தில் செயற்படாது. சட்டரீதியாக தலைவர், செயலாளர், பொருளாளர், என்று நியமிக்கப்படாத போதிலும் சம்பிரதாய ரீதியாக காசுப்புத்தகம், கூட்டக் குறிப்பு, பற்றுச்சீட்டுகள், பணம், பொருட்கள் என்பன அனைத்தும் பெத்தாக்கிழவி குடி வண்ணக்கரிடமே இருக்கும். கூட்டங்களுக்கு அழைப்பு விடுப்பதற்கும் நடாத்துவதற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார்.

இவருடன் இவர் குடியைச் சேர்ந்த ஒருவர் "திறப்புக்காரர்" என்ற ஒரு பதவியை வகிப்பார். அத்தோடு வண்ணக்கருக்கு நேரடி உதவியாளராகவும் செயற்படுவார். வண்ணக்குமார் அனைவரினதும் சம்மதத்துடன்தான் எந்தத்தீர்மானமும் செயற்படுத்தப்படும். கருத்தொற்றுமையின்படியே அனைத்தும் தீர்மானிக்கப்படும். கையொப்பம் இடும்பொழுது அனைவரும் வண்ணக்கர் என்றே கையொப்பம் இடுவார்கள். தற்பொழுது புதிய யாப்பு செயற்படுகின்றது.

## திரு. பொன்னுச்சாமி வன்னியனார்:

இக் காலப்பகுதியில் எமது பிரதேசத்துக்குரிய வன்னி மையாக திரு.பொன்னுச்சாமி அவர்கள் கடமையாற்றியுள்ளார். பொலிஸ் அதிகாரம் உட்பட சகல அதிகாரங்களும் அவருக்கிருந்தது. இவர் வாழ்ந்த இடம் வன்னியனார் வீதி என அழைக்கப்படுகின்றது. நாம் அறிந்த வரையில் அவர் 1939 ஆம் ஆண்டு வரை இங்கு இருந்துள்ளார். ஆனால் கோவில் நிருவாகம் தனிமையாகவும் சுதந்திரமாகவும் இயங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியனார் ஒரு சிறந்த இறைபக்தன். அவரிடம் வலம்புரி சங்குகளும் மற்றும் சங்குகளும் இருந்தன. அவற்றை உரிய வேளைகளில் கோவிலுக்கு கொடுத்து உதவுவார். சைவ சமய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டார். அவர் குதிரை, யானை, கார், மோட்டார் சைக்கிள் போன்றவற்றை தனது தேவைக்காக வைத்திருந்தார்.

அவர் ஓய்வு பெற்று கிரான் கிராமத்தில் ஒரு தோட்டத்தில் வாழ்ந்து வந்தார். அக்காலப் பகுதியில் களுதாவளைக் கிராம மக்கள் அவரை நல்லெண்ண நோக்கில் சென்று சந்தித்து வந்துள்ளனர்.



அமரர் கு. கணபதிப்பிள்ளை, அமரர் க. கந்தையா
(செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வண்ணக்கர்).
ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ. சந்திரசேகர சர்மா
ஆகியோருடன் அமரர் தன்மன்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவில் புனருத்தாரணம் - 1945 ஆம் ஆண்டு :


கோவில் கட்டடம் பழமையானது. மிகவும் பதிவான கட்டடம். அதன் அருகு வளையின் உயரம் ஐந்து அடி மட்டும்தான். உயரமானவர்கள் குனிந்துதான் உள்ளேசெல்ல வேண்டும், ஓடுகள் எல்லாம் சரிந்து எங்கும் ஒழுக்கு. மழை நாட்களில் கோவிலைச் சுற்றி வெள்ளம் சூழ்ந்திருக்கும். கோவில் பக்கம் மக்கள் நடமாட்டம் குறைவு. சரியான பாதை இல்லை. கோவில் பூசை வாரத்தில் ஒரு நாள் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இடம்பெறும். கோவில் பூசை முடிந்ததும் சகலரும் திரும்பி விடுவார்கள். அடுத்து வரும் வெள்ளிக்கிழமையில் பூசை இடம்பெறும். அதுவரை கோவில் பூட்டி இருக்கும். அயல் கிராமங்களில் இருந்து அதிகமான அன்பர்கள் கூடுவார்கள். பூசை முடிந்ததும் உடனடியாக திரும்பி விடுவார்கள். இவ்வாறான சூழ்நிலையில் கோவிலும் சுற்றுபுறமும் துரிதமாக புதுப்பிக்கப்பட்டு, புனருத்தாரணம் செய்யப்பட வேண்டி இருந்தது.

இந்நிலையில் மக்களின் ஆர்வம் மேலோங்கி இருந்தது. அதனால் உடனடியாகவே சுவர்கள், உடைக்கப்பட வேண்டிய கட்டடங்கள் உடைக்கப்பட்டன அத்துடன் கூரையும் கழட்டப்பட்டது. புதிதாக கூரை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வேளையில் பணம் மற்றும் தேவையான கட்டடப் பொருட்கள் யாவும் பெறப்பட்ட நிலையில் மரம் மட்டும் பெறுவதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டது. பலரிடம் மரத்திற்காக முற்பணம் வழங்கியும் மரம் கிடைக்கவில்லை. இதன் காரணமாக வேலைகள் ஸ்தம்பிதம் அடையத் தொடங்கியது. இது பற்றி பலரிடமும் ஆலோசிக்கப்பட்டது. திக்கோடையைச் சேர்ந்த சின்னாங்குட்டி என்பவர் தன்னால் மரங்களை அடையாளங்கண்டு காட்ட முடியும் என்றும் "அறுவைக்காரர்களை ஒழுங்குசெய்தால் நான் சகல உதவிகளையும் செய்வேன்" எனவும் கூறினார். அதன்படி சகல செயற்பாடுகளும் இடம்பெற்று மரம் அறுப்புவேலை ஆரம்பமானது. இதன்போது மரத்தேவை அதிகமாயிருந்தது. இது பற்றி பழுகாமத்தைச் சேர்ந்த திரு. கந்தப்பன் விதானையாருடன் ஆலோசித்த பொழுது வேலையை துவங்கும் படி கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1945 ஆம் ஆண்டு ஆலய புனருத்தாரணம் செய்யப்பட்டபோது கட்டுமானத்திற்கான மரங்கள் பெறப்பட்ட விதம் தொடர்பாக அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பு - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1945 ஆம் ஆண்டு ஆலய புனருத்தாரணம் செய்யப்பட்டபோது கட்டுமானத்திற்கான மரங்கள் பெறப்பட்ட விதம் தொடர்பாக அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பு - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாங்குட்டி மரங்களைக் காட்டுவார். மரத்தை வீழ்த்தி அறுப்பதற்கு ஆறு பேர். சமையலுக்கு ஒரு பெண். மரம் அறுக்கும் வேலை ஆரம்பித்தது. அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் ஓரிருவரை தன்னுடன் அழைத்துச் செல்வார். மரம் களுதாவளைத் துறையால் கொண்டுவரப்படும். மதிய சாப்பாட்டுக்குப் பின் கால்நடையாக செல்லும் அமரர் அதிகாலைதான் கோவிலுக்குத் திரும்புவார். மரமேற்றிய வண்டில்கள் கோவிலுக்கு அதிகாலை வந்து சேரும். இவ்வாறு அரிந்த மரம் 27 வண்டில்களும் அரியாத மரம் மூன்று வண்டில்களும் கொண்டுவரப்பட்டது. இதில் மூன்று வண்டில் அரியாத மரங்கள் ஏற்றி வந்ததைத் தவிர மற்ற 27 வண்டில் மரங்களையும் ஏற்றிவர அமரர் தன்மன்பிள்ளை உதவி ஆட்களுடன் சென்று வந்துள்ளார். இவருடன் கனகர், சீனித்தம்பி, குருநாதர், முருகப்பர், நா.கனகரெத்தினம் மற்றும் கனகரெத்தினம் போன்றவர்கள் இணைந்து செயல்பட்டுள்ளனர். இவ்விடயத்தை குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் எமது ஊர் மக்கள் எவ்வளவு சிரமமும் அவஸ்தையும் பட்டிருப்பார்கள் என்பதை தெரிவிப்பதற்காகவே ஆகும். திரு.கந்தப்பன் விதானையார் வழங்கிய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பற்றி பலரிடம் அமரர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தார் என்பதையும் அனைவரும் நன்கு அறிவார்கள். விதானையார் ஒரு சிறந்த சிவபக்தர் ஆவார்.

## கடலில் மரம் அடைந்த அற்புதம் :

கோவிலுக்கு தேவையான மரங்கள்யாவும் காட்டில் இருந்து பெறப்பட்டது. ஆனாலும் தம்பமண்டபத்திற்கு தேவையான மரம் பெறுவதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. தேவையான மரம் தம்பமண்டப உலாத்தலுக்குரியது. ஒரே மரமாக 22 அடிக்குக் குறையாத நீளம் உள்ள மரம் தேவைப்பட்டது. பலரிடம் முற்பணம் கொடுத்தும் மரம் கிடைக்கவில்லை. இத்தருணத்தில் கடலில் மூன்று மரங்கள் அடைந்துவந்தன. இவைகளின் நீளம் 25 அடியுடன், கூடிய விட்டமுள்ள மரங்கள். இதனை மக்கள் ஒரு அற்புதம் என்று கருதினார்கள். ஊர்மக்களின் முயற்சியினால் மரங்கள் கரை சேர்க்கப்பட்டன. மண்டபத்திற்கு மிகப் பொருத்தமாக அமைந்தது. மண்டப வேலைகளும் துரிதமாக நிறைவு பெற்றது. கோவில் திருத்த வேலையில் வண்ணக்குமார் ஊர் மக்கள் அனைவரும் கடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகத்தோடு உழைத்தார்கள். புனருத்தாரண வேலைகள் சிறப்பாக நடைபெற்றது. 1945 ஆம் ஆண்டு ஆவணி மாதம் கும்பாபிஷேகம் அதிவிமர்சையாகவும் சிறப்பாகவும் இடம்பெற்றது. ஏராளமான மக்கள் திரண்டு வந்ததாக அறிய முடிகிறது. அன்றைய தினம் முதலே தினசரிப் பூசையும் ஆரம்பமானது.

## கோவில் வீதி புனரமைப்பு:

எமது ஆலயம் அமைக்கப் பட்டுள்ள இடம் வேளாண்மை வயல் நிலம். மழைகாலங்களில் கோவிலைச் சுற்றியுள்ள இடங்களில் நீர் தேங்கி நிற்பதுவும் நிலங்கள் சேறாவதும் பெரும் பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் "பிச்சைச்சம்பள வேலை" ஆரம்பிக்கப் பட்டது. எமது ஊர் மக்கள் அப்போதைய பாராளுமன்ற



கௌரவ சோ. உ. எதிர்மனசிங்கம்

உறுப்பினர் கௌரவ சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்களிடம் இவ்வேலை மூலம் கோவில் முற்றத்தை திருத்தி தரும்படி கேட்டனர். அவர் இதற்குப் பொறுப்பான அமைச்சரை அழைத்து வந்துகாட்டி வேலையை ஆரம்பித்தார்கள். நாளொன்றுக்கு சுமார் 100 பேரென ஊர் மக்கள் ஆறு மாதங்கள்வரை இதில் வேலை செய்தார்கள். கிழக்குப்பக்கம் ஒரு கட்டும் மற்ற மூன்று பக்கமும் வீதி உயர்த்தியும் விஸ்தரிக்கப் பட்டது. இதனால் கோவில் வீதி செப்பனடைந்தது. இதில் வேலை செய்த மக்களும் நன்மை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிழாவும் தீர்த்தமும் ஆரம்பம்:
## ( 1956 ஆம் ஆண்டு )

கோவிலில் ஆண்டுதோறும் திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறவேண்டும் என்று எல்லா மக்கள் மனதிலும் பெரும் எதிர்பார்ப்பொன்று இருந்துவந்தது. இதில் அமரரும் பேரவா கொண்டிருந்தார். சிறிது சிறிதாக இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1956 ஆம் ஆண்டு நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இனக் கலவரமும் ஏற்பட்டது. இதனால் கதிர்காம தீர்த்தத்திற்கு செல்லவேண்டிய அடியார்களால் போக முடியாத நிலை ஏற்பட்டது. எனவே எமது கோவிலில் ஆடி மாதத் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தத் திருவிழா இடம் பெற வேண்டும் என மக்கள் ஆசைப்பட்டனர். இந்த வேளையில் வண்ணக்குமார், ஊர்மக்கள் ஒன்றுகூடி தீர்த்தம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. துரிதகதியில் அனைவரும் செயற்பட்டு களுதாவளை பிள்ளையார் திருவிழாவும் தீர்த்தமும் ஆவணி மாதத்தில் மிகவும் விமர்சையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. தீர்த்தம் மட்டக்களப்பு வாவியில் இடம்பெற்றது. அன்றைய சுவாமி ஊர்வலத்தில் அமரர். தன்மன்பிள்ளை கோவிலில் இருந்து வாவிக்கரைவரை அங்கப்பிரதட்சணை செய்தார். வீதி கிறவலும் கற்களும் நிறைந்திருந்ததால் உடலெல்லாம் சிறு காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கசிந்த காட்சி எல்லோர் மனதிலும் கவலையை அளித்தது. இது அவருடைய நேத்திக்கடன் என்பதை பின்னர் அறிந்துகொண்டோம். ஊர்மக்கள் சகலரும் இணைந்து மொத்தம் ஐந்து திருவிழாக்கள் நடத்தினார்கள். தொடர்ந்து 1957 ஆம், 1958 ஆம் ஆண்டுகளிலும் இவ்வாறு திருவிழா இடம்பெற்றது.

## கோவில் உரிமைப் பிரச்சனை:

1959 ஆம் ஆண்டு கோவிலில் நிருவாக உரிமையற்றவர்கள் தங்களுக்கு வண்ணக்கர் பதவி வேண்டும் எனவும் வழங்காவிட்டால் திருவிழா செய்யமாட்டோம் எனக்கூறி விலகிக் கொண்டனர். ஆறு வருடங்களுக்கு அவர்கள் திருவிழா செய்யவில்லை. கிராம மக்களிடம் சிறிது சிறிதாக பிரச்சினை கூடிக் கொண்டே வந்தது. இதேவேளை மக்களிடம் விழிப்பு ஏற்பட்டது. திருவிழாவில் கலந்து கொள்ளாதவர்கள் எமது உறவுகளே. அவர்களையும் சேர்த்துக் கொள்வோம் என்ற தீர்மானத்திற்கு மக்கள் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இவர்களுக்கும் வண்ணக்கர் பதவி வழங்கி திருவிழா பூசை வழங்கப்பட்டது. இத் தீர்மானத்தால் ஊர் மக்களிடம் ஏற்பட்ட உற்சாகத்திற்கு எல்லையே இல்லை. இதன் காரணமாக மக்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கப்பெற்று அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக செயற்பட வாய்ப்பும் மக்களிடம் ஐக்கியமும் ஒற்றுமையும் நிலவவும் ஆரம்பித்தது. இது எமது கிராமத்தின் வளர்ச்சியில் ஒரு மைல்கல் என்றால் மிகையாகாது. எல்லா மக்களும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர். எல்லோரும் தங்கள் பங்கு பற்றுதலையும் பங்களிப்பையும் வழங்க சந்தர்ப்பம் கிடைத்தது.

இதன்பின்னர் கிராமத்தின் வளர்ச்சி படிப்படியாக உயர்ச்சி அடைந்தது. கிராமத்தில் நிலவிய பாரிய பிரச்சனை இலகுவாக தீர்வுபெற்றது குறிப்பிடப் படவேண்டிய விடயமாகும். இவ்விடயத்தில் அயராது உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

## 1965 ஆம் ஆண்டில் கோவில் புனருத்தாரணமும் கும்பாபிஷேகமும்:

**கோவில் திருத்தம் பற்றிய ஆலோசனை :**


கோவில் புனருத்தாரணம் ஆரம்பிக்க முன்பு தூபி அமைப்பது பற்றியும் திருத்த வேலைகள் பற்றியும் ஆலோசனை பெறவும் ஆறு வண்ணக்குமாரும் யாழ்ப்பாணம் சென்றார்கள். அங்கு சென்று இராமகிருஷ்ணன் ஆச்சாரியாரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள். அப்போது அவர் கூறிய விவரங்கள்.

1. அந்தக் காலத்தில் உள்ள அறிவாளிகளால் நல்ல முறையாக மடாலயத்திற்கு இடம் வகுத்து கட்டப்பட்டுள்ளது.
2. தூபி அமைப்பதனால் கோவில் கட்டிடம் முழுவதும் உடைக்க வேண்டும்.
3. முற்பக்கம் கர்ப்பக்கிரகத்தை அடுத்து அர்த்த மண்டபம் மிகுதியாக கட்ட வேண்டிவரும்.
4. கோவில் இன்னும் நீண்டு வரும் சுயம்புலிங்க பிள்ளையார் ஆதலால் கோவிலை முன்பின் அரக்குவது சாத்தியமில்லை.
5. குறைந்தது ஒரு இலட்சம் காசு தேவைப்படும் இருந்தபடியே திருத்துவது நல்லது.

அதன்படியே கோவில் திருத்த வேலைகள் அனைத்தும் துரிதமாக நிறைவுசெய்யப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1965 ஆம் ஆண்டு ஆலய நடவடிக்கைகள் குறித்த
அமரரின் குறிப்பு - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1965 ஆம் ஆண்டு ஆலய நடவடிக்கைகள் குறித்த
அமரரின் குறிப்பு - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிலுக்கு மின்சாரம்: (1967 ம் ஆண்டளவில்)

அரசாங்கம் கோவில்கள் மின்சாரம் பெறுவதற்கு மானியம் வழங்கியது. இதை அறிந்த நமது கிராமத்தை சேர்ந்த மின்சார சபை ஊழியர்கள் வண்ணக்குமாரை இவ்விடயத்தில் உற்சாகப்படுத்தினர். கோவில் பிரதேசம் எப்போதும் இருட்டாகவே இருக்கும். இதனால் மக்கள் நடமாட்டம் குறைவு. கோவில் உற்சவங் களை நடத்த முடியாத நிலை. மின்சாரம் பெறுவதற்கு கிராமச் சங்க அக்கிராசனரின் அனுமதி அவசியம். அப்போதைய கி. ச. அக்கிராசனரும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த கௌரவ சி.மூ.இராசமாணிக்கம் அவர்களைச் சந்தித்து பேசினார்கள். இதற்காக அப்போதைய மின்சார சபை முகாமையாளர் திரு. செந்தில்நாதன், திரு. பரமசிவம் பொறியியலாளர், திரு. ஜீவரத்தினம் போன்றவர்களுடன் பேசி இருந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சீ.மூ. இராசமாணிக்கம் அவர்கள் தன்னுடன் கொழும்புக்குச் செல்ல வண்ணக்குமாரை அழைத்திருந்தார்.



**கௌரவ சீ. மு. இராசமாணிக்கம்**


அதன் பிரகாரம் திரு.சி.வ.தன்மன்பிள்ளை வண்ணக்கர், திரு. சி. சிவசுப்பிரமணியம் வண்ணக்கர், திரு. கு. வைரமுத்து சமாதான நீதவான், திரு.த. கனகசபை போன்றோர் கொழும்பு சென்றார்கள். அங்கு எல்லா விடயங்களும் வெற்றிகரமாக முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலிருந்து டிரான்ஸ்பார்மர் உடனடியாக அனுப்பப்பட்டது. மின்சார சபையினரின் ஊக்கமும் ஒத்துழைப்பும் காரணமாக வேலைகள் துரிதகதியில் இடம்பெற்றது. சில மின்சார ஊழியர்கள் லீவு எடுத்து சம்பளமின்றி வேலை செய்தார்கள். உரிமைப் பிரச்சனை தீர்ந்த உற்சாகம் மக்களிடையே ஏற்பட்ட ஒற்றுமை கிராமமே விழாக்கோலம் பூண்டது. ஒரு பக்கம் கும்பாபிஷேக வேலைகள் மறுபக்கம் மின்சார வேலைகள். காலை தொடக்கம் மாலை வரை கோவிலில் மக்கள் கூட்டம். ஒரு கிழமைக்குள் மின்சாரம் வழங்குவதாக கூறி இருந்தார்கள். அதற்கு முன்பே மின்சாரம் கிடைத்தது. எல்லோரும் சந்தோசத்தில் மூழ்கினார்கள். கோவிலுக்கு மின்சாரம் கிடைத்து சுமார் 10 வருடங்களுக்கு பின்பே கிராமத்திற்கு மின்சாரம் கிடைத்தது. கும்பாபிஷேகமும் சிறப்பாகவும் அதிவிமரிசையாகவும் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றி பிள்ளையாரின் அருளைப் பெற்றனர்.

## மண்டல பூசையும் முதன்முறையாக சங்காபிஷேகமும்:



திரு. அருணாசல தேசிகர்

கும்பாபிஷேகம் நடைபெற்று 45 நாட்கள் மண்டலாபிஷேக பூஜை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து முதன்முதலாக சங்காபிஷேகம் நடைபெற்றது. திரு.பொன்னுச்சாமி வன்னியனார் சங்குகளை தந்து உதவிய துடன் மின்சாரசபை அதிகாரிகளுடன் ஊழியர்களும் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். புகழ்பெற்ற பாடகரும் கதாப்பிரசங்கியுமான திரு. குழந்தைவேல் உட்பட ஏராளமான பக்தர்கள் பல இடங்களிலிருந்தும் பங்குபற்றி சிறப்பித்தார்கள். அன்றைய தினம் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இது வரலாற்று நிகழ்வாகும். மட்டக்களப்பிலிருந்து வைத்திய அதிகாரிகள் மற்றும் அருணாசல தேசிகர் உட்பட ஏராளமான அடியார்கள் பங்குபற்றி விழாவை சிறப்பித்தார்கள். திரு. பொன்னுச்சாமி வன்னியனார் அவர்கள் தன்னிடம் உள்ள சங்குகளையும் வலம்புரிச்சங்கையும் தேவை ஏற்படும்பொழுது தான் கொண்டு தருவதாகவும் கூறி அன்னதான நிகழ்விலும் பங்கேற்று சென்றார்.




பிள்ளையார் ஆலய வசந்தமண்டப பூசையின்போது
அமரர் தன்மன்பிள்ளை

## தீர்த்தக் குளம் அமைத்தல் (பழையது):

தீர்த்தம் ஆடுவதற்கு ஒரு தீர்த்தக் குளம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றதன் காரணமாக இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. பின்னர் ஆறு வண்ணக்கர்களும் திருக் கேதீஸ்வரம் சென்று அங்குள்ள குருகுலமட ஆதீனகுரு சங்கம் ஸ்ரீலஸ்ரீ கயிலைநாதக் குருக்கள், நவாலியூர் ஸ்ரீலஸ்ரீ விசுவநாத குருக்கள் இவர்களோடு சம்பாசித்துக் கொண்டார்கள். அவர்களின் கூற்றுப்படி கோவிலுக்கு அடக்கமாக குளம் அமைய அகலம் 56 அடி நீளம் 72 அடி எடுக்கலாம் என தெரிவித்தார்கள். சென்ற ஆறு வண்ணக்குமாரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்தக்குளம் அமைக்கப்பட்டமை தொடர்பான
அமரரின் குறிப்பு - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரருடன் ஆலயத்தில் பணிசெய்தோர் சிலருடன்
அமரர். தன்மன்பிள்ளை



அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்களின்
ஓய்வின் பின்னர் ஆலயத்தில் பணிசெய்தோரில் சிலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேக நிகழ்விலும் கலந்து சுவாமி தரிசனம் செய்து ஊர் திரும்பினார்கள்.

பின்னர் திரு.ஐ.முருகேசு ஆச்சாரி (சூரன் ஓடாவி) அவர்களினால் நிலையம் எடுக்கப்பட்டு கல்வைத்தல் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. பின்னர் சிறப்பாகக் கட்டி முடிக்கப் பெற்றது. இப்பொழுது இது ஒரு தாமரை தடாகம் ஆக காட்சியளிக்கின்றது.

திரு. முருகேசு ஆச்சாரியார் அவர்கள்:

**இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சிறந்த ஓடாவி, சிற்பக்கலைஞர், ஆகம விதிகளை நன்கு கற்றறிந்தவர். பல வருடகாலம் நமது கோயிலோடு இணைந்து செயற் பட்டுள்ளார். இவரால் உருவாக்கப்பட்டவற்றில் நமது கோவிலில் உள்ள வாகனங்கள், மயில், குதிரை மற்றும் திருவாசி போன்ற வைகளும் அடங்கும். ஒரு சிறந்த அறிவாளி, அனுபவசாலி. இவர் பெரியநீலாவணை கிராமத்தில் வாழ்ந்துவந்தவர். எல்லாவற்றையும் விட பிள்ளையார் மீது அளப்பரிய பக்தியும் எமது கிராம மக்கள் மீது பாசமும் கொண்டிருந்தார்.**



களுதாவளைப்பிள்ளையார் ஆலய அபிவிருத்திப் பணிகளில் அமரர் தன்மன்பிள்ளை அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிய வணக்கத்துக்குரிய பிரம்மஸ்ரீ சந்திரசேகர சர்மா அவர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையார் ஆலய குருமார் தங்குமிடமும் காரியாலயமும் புனரமைப்பிற்கு முன்னர்



அமரர். தன்மன்பிள்ளை அவர்களின் ஆலய சேவைக்காலத்தின் ஒரு கட்டத்தில் அவருடன் சேவைக்காய் பயணித்த குருமார்களும் வண்ணக்குமார்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு வண்ணக்குமாரும் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. இரா. நாகலிங்கம் அவர்களும் பூசையின்போது.



தற்போது அமைந்துள்ள தீர்த்தக்குளம் அமைப்பதற்கான விசேடபூசை, ஊர்வலத்தின்போது.
(எமது கிராமத்தின் அபிவிருத்தியில் ஆர்வம்கொண்டவரும் ஆலயத்தின் பெரும்பாலான நற்காரியங்களில் தானும் இணைந்துகொண்டு தொண்டாற்றியவருமான அமரர் கிருஷ்ணபிள்ளை இராசரெத்தினம் (மண்வெட்டியுடன் காணப்படுபவர்) அவர்களும் இணைந்துகொண்டிருந்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முருகன் ஆலயமும் அமரரும் :

திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்துள்ளகாணி அமரர் அவர்களின் காணிக்கு அருகா மையில் இருந்தது. அத்தோடு ஸ்ரீ முருகன் ஆலய ஸ்தாபகர்கள் கந்தப்பர் சின்னத்தம்பி சகோதரர்கள் அமரரின் நெருங்கிய உறவினர்கள். இவர்களிடையே நட்பும் சினேகிதமும் இருந்தது. முருகன் கோவில் பிரதேசத்தில் எது நடப்பதாக இருந்தாலும் இவர்களுக்கு தெரியாமல் இருக்காது. இரு சகோதரர்களும் முருக பக்தர்கள். அவர்களுடைய முழு முயற்சியும் முருகனுக்கு கோவில் அமைப்பதும் அதைப் பராமரிப்பதுமாகவேயிருந்தது.


## முருகன் ஆலயத்திற்கு விக்கிரகம் பெற்றமை:

1925 ஆம் ஆண்டளவில் இக்கோவில் தீப்பற்றி எரிந்ததால் அதிலிருந்த விக்கிரகமும் மறைந்துவிட்டது. இது பற்றி அனைவரும் கவலை அடைந்தார்கள். இதன் பின்னர் ஒரு விக்கிரகம் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். பிள்ளையார் கோவில் பிரதம குருவாக பூசை செய்த சிவஸ்ரீ குழந்தைவேல் குருக்கள் அவர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக பூஜை செய்து கொண்டிருந்தார். அவர் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்தவர். அவரிடம் ஆலோசனை கேட்ட பொழுது முழுமனதோடு செயற்பட்டு கொக்கட்டிச்சோலை கோவிலில் சிவம் பண்ணிவைக்கப்பட்ட ஐம்பொன்னாலான விக்ரகம் ஒன்றை பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகளை செய்வதாக கூறியிருந்தார். அதன் பின்னர் ஒரு நாள் அமரர் திரு.தன்மன்பிள்ளையை அழைத்து அவ் விக்கிரகத்தை அவரிடம் கையளித்துள்ளார். அதனை ஊர் மக்களும் ஆலய தர்மகர்த்தாக்களும் பக்தியோடும் உணர்வுபூர்வமாகவும் ஏற்றுக் கொண்டார்கள். முருகப்பெருமானின் விக்கிரகத்தை பெறுவதில் அனைத்து வண்ணக்குமாரும் முருகன் ஆலய ஸ்தாபகர்கள் மற்றும் ஊர் மக்களும் தங்கள் முயற்சி வெற்றி பெற்றதை அடுத்து மகிழ்ச்சி அடைந்தார்கள். இது முருகப் பெருமானின் செயலேயென பேசிக்கொண்டார்கள். முருகன் கோவில் ஸ்தாபகர்கள் இருவரும் பல பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இவர்கள் அமரர் தன்மன்பிள்ளை போன்றவர்களால் அமைக்கப்பட்ட கணேசானந்தா வாசிகசாலை நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்பு செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சின்னத்தம்பி சுவாமிகள், சகோதரரின் இறப்பின் பின் துணிச்சலோடு தொழிற்பட்டு கோவிலுக்கு உரிய சகல சொத்துக்கள், பொருட்கள் அனைத்தையும் முறையாக கையளித்த பிறகே அவர் கண் மூடினார். அவருடைய கடின உழைப்பும் அவர் சிந்திய வியர்வையும் என்றும் வீணாகாது. அவர்கள் நாமம் என்றும் நிலைத்திருக்கும். மேலும் அமரர் பழனித்தம்பி கனகசுந்தரம் குருக்கள் ஸ்ரீ முருகன் ஆலய கௌரவ வண்ணக்கராகவும் பூசகராகவும் மிகச்சிறந்த பணியாற்றியுள்ளார். அவருடைய சேவை ஆலயவரலாற்றில் முக்கியமானதொன்றாகும்.



அமரர் சி. தன்மன்பிள்ளை வண்ணக்கருடன் எமது கிராமத்தின் பற்றாளர் அமரர் வே. முருகமூர்த்தி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப்பணிகள்:

### கணேசானந்தா வாசிகசாலை:-

மக்களிடையே சைவநெறியைப் பரப்பவும் சைவசமய கோட்பாடுகளை மக்கள் அறிந்து செயற்படவும் தூண்டும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. ஊர்ப் பற்றுள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் சமயம், கல்வி, பொருளாதாரம், கலை கலாசார, சமூக சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் ஈடுபாடுடையதாக இருந்தது. ஏழைகளுக்கு பல வகையிலும் உதவினார்கள். கிணற்றுக்கு மடு வெட்டுதல், கிடுகு வேய்தல், வேலி அடைத்தல், கொழுந்து நடுதல் போன்ற வேலைகளை சிரமதான அடிப்படையில் தேவையானவருக்கு செய்து கொடுத்தார்கள். அங்கத்தவர்கள் சமய தீட்சை பெற்று மதுபானம் போன்றவற்றைத் தவிர்த்து ஒழுக்க சீலர்களாக திகழ்ந்தார்கள்.


இவ் வாசிகசாலையின் ஆரம்ப கர்த்தாக்களில் முக்கியமான ஒருவராகவும் அதன் செயலாளராகவும் அமரர்.தன்மன்பிள்ளை அவர்கள் செயற்பட்டுள்ளார்கள். இவர் கிராமத்தில் மிக்க மதிப்பு பெற்றிருந்தார். மக்களும் உரிய கௌரவம் அளித்தார்கள். களுதாவளை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வளர்ச்சியிலும் உதவிகளைச் செய்தார்கள். களுதாவளைக் கிராமத்தில் ஒரு சைவப் பாடசாலையின் முக்கியத்தை அறிந்து அதை உருவாக்குவதில் முன்னோடிகளாக திகழ்ந்தார்கள்.

### சைவப் பாடசாலை ஆரம்பம்:-

களுதாவளை கிராமத்தில் பெரியபாடசாலை இருந்த பொழுதும் இது கிறிஸ்தவ பாடசாலை என்ற காரணத்தினால் ஒரு சைவப் பாடசாலை அமைக்க வேண்டும் என மக்கள் கருதினர். தங்கள் பிள்ளைகள் சைவசமய சூழலில் கல்விகற்க வேண்டும் என விரும்பினார்கள். இவர்கள் பிள்ளையார் ஆலய வண்ணக்கு மாருடன் இணைந்து மக்களையும் ஒன்று சேர்த்து பாடசாலையை உருவாக்கும் நோக்கில் சுவாமி விபுலாநந்தர் போன்றவர்களுடன் கலந்துரையாடினார்கள். ஊர் மக்களிடம் நிதி திரட்டி 1938 ஆம் ஆண்டு பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. படிப்படியாக கட்டட வேலைகள் முடிவடைந்து கொண்டு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பாக
அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் எழுதிவைத்திருந்த
குறிப்பு -06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர். இ.வடிவேல்

கல்லடி உப்போடையில் இருந்து கல்முனை வரையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரே ஒரு சைவப்பாடசாலை இதுவேயாகும். மக்களுக்கு தங்கள் சமயத்தின்மேல் இருந்த தணியாத பற்றுறுதியை இது எடுத்துக் காட்டுகின்றது. அமரர் திரு. வடிவேல் இப் பாடசாலையின் முதல் அதிபராகச் சேவையாற்றியுள்ளார். தொடர்ந்து திரு. சி. வ. கண்ணமுத்து அவர்கள் அதிபராகவும் பிள்ளையார் ஆலய வண்ணக்கர் ஆகவும் செயற்பட்டு அரும்பெருஞ்சேவை ஆற்றியுள்ளார். அவர் தமிழும் சைவமும் மேம்பட அதிக சிரத்தையுடன் நீண்டகாலம் சேவையாற்றியுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும். கிராம மக்களின் ஒற்றுமை ஒத்துழைப்பு, கடின உழைப்புமே இப்பாடசாலை யின் ஆரம்பத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாகும்.

பாடசாலை ஆரம்பிக்கின்ற காலகட்டத்தில் திரு.சி.வ. கண்ணமுத்து ஆசிரியர் அவர்கள் ஆனைப்பந்தி இராமகிருஷ்ண சங்க சைவப் பாடசாலை அதிபராக பணியாற்றியுள்ளார். எமது பாடசாலை ஆரம்பிப்பதற்கு அவருடைய ஆலோசனையும் அனுபவமும் அர்ப்பணிப்பான சேவையும் நிறையக் கிடைத்துள்ளது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடசாலை கட்டடத்தை முடிப்பதற்கு நிறைய நிதி தேவைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். சி. வ. கண்ணமுத்து


அப்போது பொன்னையா சுவாமிகள் திருகோணமலையில் கடற்படை முகாமில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் ஆலோசித்த பொழுது அவர் இங்கிருந்து இருவரை அனுப்பி வைக்கும்படியும் தன்னாலான உதவிகளை செய்வதாகவும் உறுதி அளித்தார்.

அதன் பிரகாரம் திரு.சி.வ.தன்மன்பிள்ளை அவர்களும் திரு. தம்பியப்பா விதானையார் அவர்களும் திருகோணமலைக்கு சென்று சீனன்குடா, நிலாவெளி, கோபாலபுரம், திருகோணமலை போன்ற இடங்களில் தங்கி நிதி சேகரித்து வந்தார்கள். இதற்கான ஒழுங்குகள், தங்குமிடம், பிரயாணம், அறிமுகப்படுத்தல் அனைத்தையும் செய்தவர் சுவாமி பொன்னையா அவர்கள் ஆவார். அப்பொழுது கடற்படையில் ஓவர்சியராக கடமையாற்றிக் கொண்டிருந்தவர்.

பாடசாலை வேலைகள் அனைத்தும் முடிவடைந்து 1943 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 5 ஆம் திகதி பாடசாலை திறப்பு விழா நடைபெற்றது. இராமகிருஷ்ண சங்க துறவிகள் இருவர், ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிகர், பாடசாலையின் அதிபர் இ.வடிவேல் இன்னும் பல பெரியார்களும் கலந்துகொண்டனர். ஆலய வண்ணக்குமார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமரர். பொன்னையா சுவாமிகள்**

பொன்னையா சுவாமிகள் களுதாவளைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறு வயதிலேயே ஊரைவிட்டு தேசாந்திரியாகச்சென்றவர், ஆங்கிலக் கடற்படையில் இணைந்து அதில் ஓவசீயர் பதவியில் இருந்தவர். தன் இறுதிக்காலத்தில் சொந்த ஊருக்கு வந்து பெருமுயற்சியால் திருஞானசம்பந்தர் குருகுலத்தை ஆரம்பித்தவர்.

விழாவை நடாத்தி முடித்தார்கள். இந்நிகழ்வில் திரு.கனகசபை அவர்களும் மாணவராக இணைந்து கொண்டார். ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிகர் அவர்களும் அதிபர் இ.வடிவேல் அவர்களும் ஏடுதுவக்கி வைத்தனர். எமது பிள்ளைகள் சமய சூழலில் கல்விகற்க பெரும் வாய்ப்பு ஏற்பட்டது.

சைவப்பாடசாலை எமது கிராமத்தின் மத்தியில், கொம்புச்சந்திக்கு அருகாமையில் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் அதற்கான இடவசதி குறைவாகவே இருந்துவந்தது. மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதாமலிருந்தது. மேலும் இருந்த கட்டடங்களும் சுனாமியினால் பாதிக்கப்பட்டன. அப்போது அதிபராக இருந்த திரு.க.துரைராசா அவர்களின் அயராத முயற்சியினால் முற்றுமுழுதாக மூன்று மாடிகளைக் கொண்ட தற்போதுள்ள கட்டடத்தொகுதி பாடசாலைக்குக்கிடைத்தது. பாடசாலையின் இடப்பிரச்சனை முற்றாகத் தீர்க்கப்பட்டதுடன் பாடசாலையின் அனைத்து கல்வி நடவடிக்கை களும் மிக விரைவாக வளர்ச்சியடைந்தன. திரு.க.துரைராசா அதிபரின் அர்ப்பணிப்பும் சேவையும் அனைவராலும் போற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிபர் சி. வ. கண்ணமுத்து , இரா. பத்மநாதன் ஆகியோருடன்
சைவப் பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர் குழாமும் மாணவர்கள் சிலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவப்பாடசாலை நிகழ்வொன்றில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணாநந்தஜி மஹராஜ் அவர்களை தற்போதைய ஆலய பரிபாலன சபையின் தலைவர் திரு. க. வ. பாஸ்கரன் அவர்கள் வரவேற்கும்போது.



சைவப்பாடசாலையின் முதல் ஆசிரியரும் முதல் மாணவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலப்பாடசாலை** (GOVT JUNIOR SCHOOL) :

1950ஆம் ஆண்டளவில் அரசாங்கத்தின் கல்வித் திட்டத்திற்கு அமைய ஆங்கிலப் பாடத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஒவ்வொரு தேர்தல் தொகுதி தோறும் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை அதிபராக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது தொகுதியில் பெரியகல்லாறு, பட்டிருப்பு, பழுகாமம், முதலைக்குடா போன்ற பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதனை அறிந்த பொதுமக்கள் வண்ணக்கு மாருடன் இணைந்து அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்களை சந்தித்து விளக்கினார்கள். அவர் அதனை ஏற்றுக் கொண்டார். பின்னர் கல்வி அமைச்சராக இருந்த உயர்திரு. ஈ. ஏ. நுகவெல என்பவரை அழைத்து வந்தார். அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. அவர் களுதாவளைக்கும் ஒரு பாடசாலை அமைத்து தருவதாக உறுதி அளித்துச் சென்றார்.

காலம் சென்றது ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுபற்றி எம்பியிடம்முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்கள் திரு தன்மன்பிள்ளை அவர்களை அழைத்து உடனடியாக கொழும்பு செல்லவேண்டும் நீங்களும் திரு. தம்பியப்பா விதானையாரும் வர வேண்டும் என அழைத்தார்கள். தம்பியப்பா விதானையார் சுயநலமற்ற ஓர் ஊர்ப்பற்றாளன், தொண்டன். இருவரும் பாராளுமன்ற உறுப்பினருடன் கொழும்பு சென்றார்கள்.

## பதில் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.கனகரெத்தினம் அவர்களது பாரிய பங்களிப்பு:

கொழும்பு சென்றபோது அமைச்சர் வெளிநாடு சென்றிருப்ப தாகவும், வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கனகரத்தினம் அவர்கள் பதில் கடமைபுரியும் அமைச்சர் என்றும் எம்.பி கூறினார். இந்த சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்தி அமைச்சரை சந்திக்க சென்றார்கள். அமைச்சர் ஒரு சைவபக்தர். அவர் அமரர் வண்ணக்கரை வேட்டி, சால்வை, திருநீற்றுப்பூச்சுடன் கண்டவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே எழுந்து நின்று வரவேற்று உபசரித்தார். அமைச்சர் அவர்களும் களுதாவளையைப் பற்றியும் பிள்ளையார் கோவிலை பற்றியும் அறிந்திருந்தார் என்பது பின்னர் தெரியவந்தது. அமைச்சர் அரசாங்கத்தில் முன்னர் (ஓடிட்டர் ஜெனரல்) கணக்காய்வாளர் நாயகமாக பணியாற்றி ஓய்வு பெற்ற உயர் அதிகாரி.

எங்கள் பாடசாலையை ஆங்கில பாடசாலையாக மாற்றி தருவதோடு நீங்களே வந்து திறந்து வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை பாராளுமன்ற உறுப்பினர் உடன் இணைந்து விடுத்தார்கள். அவர் இவர்களுடைய கோரிக்கையை ஏற்று பாடசாலை ஆரம்பிக்கும் திகதியையும் குறிப்பிட்டு அவர்களை வழி அனுப்பினார். உரிய அமைச்சர் வெளிநாட்டில் உள்ள பொழுது இது இடம்பெற்றது. குறித்த திகதியில் யூனியர் பாடசாலை (ஆங்கிலப் பாடசாலை) கௌரவ அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது. அவருடன் பட்டிருப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எதிர்மன்ன சிங்கம், நிந்தவூர் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கௌரவ இப்ராஹிம் ஹாஜியார் மற்றும் கல்விப் பணிப்பாளரும் சமூகமளித்திருந்தனர். புதிய பாடசாலை அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்வதற்கும் அமைச்சர் உத்தரவிட்டார். அவ்வாறு பெறப்பட்ட காணியில்தான் எமது களுதாவளை மகா வித்தியாலயம் ( தேசியப் பாடசாலை) தற்போது இயங்குகின்றது.

எமது கிராமத்தை சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்கள் சிவானந்தா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றி கொண்டிருந்தார். அவர் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்.

திரு. சி. தம்பியப்பா விதானையார் அவர்கள் அரச ஊழியராக இருந்தபோது கிராமத்தின் அனைத்து விடயங்களிலும் மிகவும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் செயற்பட்ட ஒரு பெரியார். தன்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியை பொதுத் தொண்டிற்காக செலவுசெய்தவர். சைவப்பாடசாலை ஆரம்பித்த பொழுது பாடசாலைக்கு தேவையான தளபாடங்களை தானே முன் வந்து அன்பளிப்பு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் கலந்துகொண்ட
அமரர் செல்வராசகோபால் அவர்களுக்கு கிராம மக்களால் அளிக்கப்பட்டபிரியாவிடை வைபவம்.
(பதிப்பாசிரியர் வெல்லவூர் கோபால் அவர்களும் கலந்துகொண்டார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அனைத்து பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்பித்தார். பட்டிருப்பு தொகுதியில் சகல பாடங்களும் ஆங்கிலத்தில் கற்பித்த பாடசாலையாக இது திகழ்ந்தது.



அமரர் வே. வைரமுத்து


அத்துடன் வளர்ந்தோருக்கான கல்வியையும் இரவு நேரத்தில் நடாத்தி மக்களுக்கு அறிவூட்டினார். கிராம இளைஞர்கள் ஆங்கிலம் கற்றதால் பிற்காலத்தில் அரச தொழில் பெறுவதில் அதிக கஷ்டமிருக்க வில்லை. அமரர் திரு.வைரமுத்து அவர்களின் கல்விச் சேவை என்றும் மறக்க முடியாததொன்றாகும். அவர் விதைத்த விதை இன்றும் இக்கிராமத்தில் (ஆங்கில அறிவு) காணப்படுவது விசேடமானது. அவரது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, ஊர் பற்றுறுதி என்பவை எல்லோர் மனதிலும் நிலைத்து இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய மாணவர் அமரர் பணிக்கர் கனகரெத்தினம் அவர்கள் ஜப்பான், எகிப்து, கனடா போன்ற தேசங்களில் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிகள் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் அரச சேவையில் வர்த்தகப் பணிப்பாளராக பதவி வகித்து அருஞ்சேவை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலை அமைந்ததன் காரணமாக எமது கிராமம் கல்வியில் முன்னேற்றம் அடைந்தது. இன்று இப்பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு தேசிய பாடசாலையாக செயற்படுகின்றது. அன்றைய முன்னோடிகள் தீர்க்கதரிசனத்துடன் திட்டமிட்டு செயற்பட்டதால் எமது மக்கள் இன்று பெரும் நன்மைகளை பெறுகின்றார்கள். இப்பொழுதும் பலர் சுயநலம் அற்ற முறையில் கிராம அபிவிருத்திக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு பாராட்டப்பட வேண்டியவர்கள். தானும் தன்பாடும் என்ற நிலை மாறி மற்றவர்களின் நன்மைக்காக நாமும் உழைக்க வேண்டும் என்று செயல்படுவோர் அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இதே காலத்தில் சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த திரு. சின்னத்தம்பி குழந்தைவேல் திரு. சிவசுப்பிரமணியம், திரு. வே.தருமரெத்தினம், திரு. த. கனகசபை ஆகியோருக்கு சொந்த ஊரிலே கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.



அமரர் ப. கனகரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Govt. Junior School

## KALUTHAVALAI

# ANNUAL INTER-HOUSE SPORTS MEET

The First Annual Inter-House Sports-Meet of the School will be held on Monday, 22nd June 1953 beginning at 3 P. M. at the Kaluthavalai grounds. K. S. Rajasingham Esqr., Circuit Inspector of Schools Kalmunai, has kindly consented to preside and distribute the prizes and certificates.

The parents, teachers and students of the School shall be pleased to have your presence on the occasion.

V. Vyramuttu
S. Kulandavel
P. Veerapathiran
C. Devasagayam
*Organising Committee.*

Kaluthavalai
18-6-53.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினர் கனிஷ்ட பாடசாலை
களுதாவளை

# வருடாந்த விளையாட்டுப் போட்டி
# 1957.

திரு. X. M. செல்லத்தம்பு.
(பிரிவுக் காரியாதிகாரி, மட். தெ. எ. போ.)

அவர்களின் தலைமையில், 17-10-57 வியாழக்கிழமை பி. ப. 3 மணி தொடக்கம் களுதாவளை பிள்ளையார் கோயிலுக்கெதிரே உள்ள மைதானத்தில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டியின்போது, தங்கள் நல்வரவையும் ஒத்துழைப்பையும் ஷை பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அன்புடன் வேண்டுகின்றனர்.

திருமதி X. M. செல்லத்தம்பு அவர்கள்
பரிசுகளை வழங்குவார்கள்.

களுதாவளை
10-10-57.

வே. வைரமுத்து
தலைமையாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



22.06.1953 இல் களுதாவளை அரசினர் கனிஷ்ட வித்தியாலயத்தில் ( தற்போதய களுதாவளை ம.வி - தே.பா ) நடைபெற்ற முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டியில் அமரர் தன்மன்பிள்ளைவர்கள் பரிசில்களை வழங்கியபோது.

இன்று எமது கிராமத்தில் முதல்தர தேசிய பாடசாலையுடன் ஏழு பாடசாலைகள் உள்ளன. கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கும் வெளிவாரி பட்டதாரிமாணவர்களுக்கும் ஆயத்த வகுப்புகள் இடம் பெறுவது எமது மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்.

## களுதாவளை கணேசா வித்தியாலயம்:

இவ் வித்தியாலயம் களுதாவளைக் கிராமத்தில் வாழும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்காக 1869 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனிஷ்ட வித்தியாலயமாகும். இப் பாடசாலை முன்பு மெதடிஸ்த மிசன் பாடசாலையாக செயற்பட்டது. 1961 ஆண்டு இப் பாடசாலை அரசினால் கையேற்கப்பட்ட பின்னர் அரசினர் பாடசாலையாக செயற் படுகின்றது. இக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலையாக கருதப்படுகிறது. தற்பொழுது ஏழு பாடசாலைகள் இக் கிராமத்திலுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வர் திரு. கனகசபை அவர்கள் புலமைப்பரிசில் பெற்று அமெரிக்கா செல்ல புறப்பட்டபோது உறவுகளுடன் அமரர் இரா. பத்மநாதன் (அமெரிக்கத் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் தகவல் அதிகாரி) அவர்களும் கலந்துகொண்டிருந்தார்.


## சமூகப்பணிகள் :

### கிராமசபைத் தலைவராக அமரர் வேதநாயகம் தெரிவு:



அமரர் . த. வேதநாயகம் J.P

மண்முனை தென் எருவில் பற்றுக்குரிய பிரதேசசபை களுதாவளையில் அமைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் களுதாவளையில் விதானையாராக பதவி வகித்த தம்பியப்பா அவர்கள். ஒரு முற்போக்குவாதி. மக்களுக்கு உதவுவதில் முன் நிற்பவர். அவருக்குச் சொந்தமான காணியை (மெயின் வீதிக்கு அருகில்) கிராம சபைக்கு நன்கொடையாக வழங்கி இருந்தார்.




அமரர் . ப. கிருஸ்ணபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளை கிராமத்தின் இரண்டு அங்கத்தவர்கள் உட்பட கிராம சபையில் மொத்தம் 17 பேர். பலமுறை முயற்சித்தும் களுதாவளைக் கிராமத்திற்கு அக்கிராசனர் பதவி கிடைக்கவில்லை. 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின் எவ்வாறாயினும் கிராம சபைத் தலைவர் பதவியை இம்முறை பெறவேண்டுமென எமது மக்களிடம் ஏகோபித்த கருத்து நிலவியது. ஆனால் கிராமத்தில் இரு பிரிவுகள் காணப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் காலஞ்சென்ற பரசர் கிருஷ்ணபிள்ளை (பொதுநலத்தொண்டர், சமாதானப்பிரியர்) அவர்கள் சில இளைஞர்களுடன் அமரர் தன்மன்பிள்ளை அவர் களை சந்தித்து இவ்விடயத்தில் நீங்கள் தலையிட வேண்டும் அத்தோடு நீங்களே இதனை தீர்த்து வைக்கவும் வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தார்கள்.



அமரர் • கண்டுமணி குழந்தைவேல்



அமரர் • வைரமுத்து மயில்வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கமைய அவர் இருசாராரையும் தனது வீட்டுக்கு அழைத்து அவர்களுடன் பேசி போட்டி தவிர்ப்பு ஏற்படுத்தினார். இரு பிரிவினரும் அமரரின் யோசனையை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். இதனால் உற்சாகமடைந்த ஊர்மக்கள் முழுமூச்சுடன் செயற்பட்டு அந்த வருடமே அமரர் திரு.த. வேதநாயகம் அவர்களை தலைவராக தேர்வு செய்தார்கள். பின்னர் மாவட்டரீதியாகவும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.


அவருடைய காலத்தில் நமது கிராமத்தில் அதிக அபிவிருத்தி வேலைகள் நடந்தன. குறிப்பாக பொது நூலகக் கட்டடம், விளையாட்டு மைதானம், சேர்மன் குளக்கட்டு, ஏழைகளுக்கு காணி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதே சந்தர்ப்பத்தில் சி.கந்தவனம் அவர்களும் கிராம சங்க உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். களுதாவளையில் பொதுநூலகம் அமைப்பதற்கு பொருத்தமான இடம் தேடிய பொழுது திரு.கந்தவனம் அவர்களின் காணியே எல்லோரையும் கவர்ந்தது. அவருக்கு காணி விற்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக்கில் அவரும், அவருடைய குடும்பத்தினரும் மிகவும் குறைந்த விலையில் காணியைக் கையளித்தனர். இதற்கான நிதியை சேகரிப்பதில் ஈடுபட்டவர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இதில் குறிப்பிடப்படக்கூடியவர்கள் திருவாளர்கள் கண்டுமணி குழந்தை வேல், கந்தப்பர் கணபதிப்பிள்ளை, வைரமுத்து மயில்வாகனம் (தம்பிப்பிள்ளை-தலைவர்), அம்பிளார் சீனித்தம்பி, கிருஷ்ணபிள்ளை இராசரத்தினம், தன்மன்பிள்ளை கனகசபை ஆவார்கள்.

இன்று இந்நூலகம் வளர்ச்சி அடைந்து புதுப்பொலிவு பெற்று புதுக்கட்டடத்தில் இயங்குவதை நாம் காணலாம். இக் கைங் கரியத்தில் ஈடுபட்ட அமரரின் புத்திரர் த.கனகசபை அவர்களின் சேவை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது நமது பிரதேசத்தில் சிறந்த ஒரு நூலகமாக இது திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்திய அதிகாரி திரு • இரத்தினசபாபதி அவர்களின் பிரியாவிடை வைபவத்தின்போது
கிராம மக்களுடன் அமரர் தன்மன்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மாரின் உருவச்சிலைகள் காட்சிப்படுத்துதல்:

நாயன்மாரின் சரித்திர வரலாறுகளையும் அவர்கள் ஆற்றிய தொண்டையும் சகல சைவ மக்களும் அறிந்து இருக்க வேண்டும் என்பது அமரர் அவர்களின் ஆசையும் அவாவும் ஆகும். கோவிலில் உள்ள தூண்களில் அவர்களுடைய படங்களை வரைய வேண்டும் என திட்டமிட்டிருந்தார். ஆனால் அது துரதிஷ்டமாக அவர்காலத்தில் கைகூடவில்லை. இருந்த பொழுதிலும் திரு. கணபதிப்பிள்ளை பாஸ்கரன் (ஓய்வுநிலை வலயக் கல்விப்பணிப்பாளர்) களுதாவளை பிள்ளையார் ஆலய பரிபாலனசபை தலைவராக இருந்த பொழுது ஏனைய வண்ணக்கு மாரின் உதவியோடும், மக்களின் ஆதரவோடும் நாயன்மாரின் கற்சிலைகள் சிறந்த சிற்பிகளால் செதுக்கப்பட்டு வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளது.

## துணைவியாரின் பங்களிப்பு:



அந்த நாட்களில் ஒரு வண்ணக்கரின் துணைவியாரின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்தது. பூஜைகள் நடத்துவது திருவிழாக்களை நடத்துவது மற்றும் ஏனைய விழாக்கள் நடத்துவது போன்ற விடயங்களில் பெண்களின் பங்கு அளப்பரியது. நெல் குற்றுவது, மா இடித்தல் மற்றும் ஏனைய பிரசாதங்கள் ஒழுங்கு செய்தல் இவைகள் அனைத்தும் பெண்களாலே செய்து முடிக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையால்தான் நெல் குற்ற வேண்டும் மா இடிக்க வேண்டும். இதற்கு ஆட்பலம் தேவை. இதனை ஒழுங்கு செய்வது இவர்களின் பொறுப்பு. இவற்றை அமரரின் மனைவியார் நேர்மையாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்தினார். எப்பொழுதும் மக்கள் வீட்டுக்கு வருவார்கள். கொண்டாட்டங்களுக்கு அறிவிப்பதற்கும் ஏனைய விடயங்களை அறிவிப்பதற்கும். அவர்களை அன்போடு வரவேற்று ஆதரிக்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கு உள்ளது.

அத்தோடு ஊரில் நடைபெறும் சமூக நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவேண்டும். இவற்றை செவ்வனே செய்தது மாத்திரமன்றி தனது கணவரின் ஆலோசகராகவும் செயல்பட்டார். வீட்டுக்கு வருபவர்களை ஆதரிப்பது செய்திகளை கவனமாக அறிவிப்பது மிக முக்கியமான விடயங்கள் ஆகும். அவரின் துணைவியார் அவர்கள் வரவேற்பதிலும் விருந்தோம்பு தலிலும் மிகச் சிறந்து விளங்கியவர். அதேவேளை அயலவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகி அவர்களு டைய சேவைகளை பெற்றுக் கொள்வார். அவர் பல வழிகளிலும் அமரருக்கு உறுதுணையாக இருந்தார். துரதிஷ்டமாக இளம் வயதிலேயே அவர் எம்மை விட்டு பிரிந்தார். அதனால் பாரிய இழப்பும் பாதிப்பும் ஏற்பட்டது. அமரருக்கு அதிக பொறுப்புகள் சுமத்தப்பட்டது. அவருடைய இறைபக்தியும் தன்னம்பிக்கையும் துணிச்சலும் அவரை மீட்டு எடுத்தது. அவர் தொடர்ந்தும் அவரது பணியை சிறப்பாக செய்தார். அவருடைய இளைய மகன் திரு. அருள்மாணிக்கம் (அதிபர்) அவருக்கு உறுதுணையாக நின்று செயற்பட்டவராவார்.

## கல்வி வளர்ச்சிக்கு கோவிலின் பங்களிப்பு:

மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானப் பாடங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இருந்தபொழுதும் விஞ்ஞானம் படிப்பதற்கான வசதிகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. பாடசாலை சமூகத்தினால் பிள்ளையார் ஆலயத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தங்களுக்கு ஒரு விஞ்ஞான கூடம் கட்டித் தருமாறு கேட்டார்கள். அக்காலப்பகுதியில் கோவிலில் நிதி மிகக்குறைவாக இருந்தது. இருந்தபொழுதும் எப்படியோ உதவ வேண்டும் என்பதற்காகவும் தேவையின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருதியும் அந்த வேண்டுகோளை செவ்வனே நிறைவேற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்தில் முன்னிருக்கும் மண்டபத்தை 20 X 10 அடியாக விஸ்தரித்தும் கொடுத்தார்கள். இதன் பிரதிபலனை மிக விரைவிலேயே மாணவர்கள் அடைந்தார்கள். ஆலய பரிபாலனம் செய்தவர்களின் தீர்க்கதரிசனமான செயற்பாட்டை மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். இவ்வாறான நிகழ்வுகள் இப் பொழுதும் நடைபெறுகின்றன. இது தொடர்ந்தும் நடைபெற வேண்டும். விஞ்ஞான பாடங்கள் பாடசாலையில் ஆரம்பித்ததால் நமது கிராமத்திலுள்ள வைத்திய அதிகாரிகள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றவர்கள் அப்பாடங்களைக் கற்க சிறந்த வாய்ப்பு ஏற்பட்டது.

## பதவியிலிருந்து ஓய்வு :

திரு. தன்மன்பிள்ளை அவர்கள் சுமார் 43 வருட அயராத உழைப்பின் பின்னர் தான் ஓய்வுபெற தீர்மானித்தார். அவருடைய இளைய மகன் அருள்மாணிக்கம் அவருக்கு பல வழிகளிலும் உதவி புரிந்துவந்தார். இருந்தபொழுதும் எல்லோருடைய நன்மைகளையும் கருத்தில்கொண்டு பதவியில் இருந்து விலகுவது தான் சரி என தீர்மானித்தார். இராஜினாமா கடிதம் சமர்ப்பித்து பொதுக்கூட்டம் ஒழுங்கு பண்ணப்பட்டது. திரு கணபதிபிள்ளை கந்தையா (செட்டி பாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய முன்னாள் தலைவரும், வண்ணக்கரும்) கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கூட்டத்தில் பல வேண்டுகோள் விடுக்கப்பட்டு பதவியில் தொடருமாறு கேட்டார்கள். சிலர் நாங்கள் சிறந்த உதவியாளர்களை தருகிறோம் நீங்களே இருக்கவேண்டும் என்றனர். சிலர் நீங்கள் பொல்லில் நடக்கும் வரை நீங்கள்தான் வண்ணக்கர் என்று கூறினார்கள். நீண்டநேரம் விவாதித்தார்கள். மிகவும் உணர்ச்சிபூர்வமான கூட்டமாக இருந்தது. இவை எல்லா வற்றையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அவர் இறுதியாக மிக சோகத்தோடும் கவலையோடும் எழுந்து நின்று அனை வருக்கும் வணக்கம் கூறினார். அதைத்தொடர்ந்து கண்கலங்க நாதழுதழுக்க கூறிய சில வார்த்தைகள் “எனக்கு உதவிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றி. இப்பொழுது கோவில் வருமானம் கூடிக்கொண்டு வருகின்றது. இதனை என்னால் பராமரிக்க முடியாது. எனது உடல் நிலையும் தளர்ந்து போகிறது. என்னை மன்னியுங்கள் என்னை விட்டு விடுங்கள்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறினார். வழமையில் மிக சுருக்கமாக பேசுபவர். வீணாக ஒரு வார்த்தையும் பேச மாட்டார். இதனை கேட்ட மக்கள் அமைதியாகினர். நிசப்தமாக இரண்டு மூன்று நிமிடங்கள் இருந்த மக்கள் அவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டனர்.


அமரர்
இ. வ. வேலுப்பிள்ளை

பின்னர் பெயர் பிரேரிக்கலாம் என கூறியதும், திரு இளையதம்பி வேலுப்பிள்ளை அவர்களின் பெயர் பிரேரிக்கப்பட்டது. ஒரேகரகோஷம் ஆரவாரம் யார் பிரேரித்தார் என்பதுகூட தெரிய வில்லை. மகிழ்ச்சி ஆரவாரமாகவே இருந்தது. இது பிள்ளையாரின் செயல் எனக்கூறிக்கொண்டார்கள்.

திரு. வேலுப்பிள்ளை அவர்கள் எவ்வளவோ மறுத்தார். ஆனால் மக்கள் விடவில்லை. அவர் பதவியைப் பொறுப்பேற்றார். மிக்க உற்சாகத்தோடும் உணர் வோடும் செயற்பட்டார். முன்னைய வண்ணக்கரிடம் எந்த விடயம் என்றாலும் ஆலோசனை பெற்று செயற்பட்டார். குறைந்த காலத்தில் கூடிய திட்டங்களை செயல்படுத்தினார். அவருடைய புத்திரர் திரு. முருகமூர்த்தி அவருக்கு உறுதுணையாக இருந்தார். சிலகாலம் மிகத் துணிச்சலுடன் செயற்பட்டார். இப்படியான அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பெரியார்களை நினைவுகூருவது எமது பாரிய கடமையாகும்.

தன் வாழ்வின் பெரும் பகுதியை தான் வாழ்ந்த கிராமத் திற்காக அர்ப்பணித்த அமரர். தன்மன்பிள்ளை அவர்களுக்கு தனது கிராமத்தில் ஓர் அடையாளமில்லை என்பதை பலரும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவர் மறைந்த காலப்பகுதி நாட்டில் குழப்பகரமான காலப்பகுதியாகும். அதன் காரணமாக நினைவுச் சின்னம் எதுவும் அமைக்கப்படவில்லை எனினும் இக் கோரிக்கை நினைவு மன்றத்தினால் பரிசீலிக்கப் படுமென்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்திக்காக அனைவரும் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அமரர் சின்னத்தம்பி விநாயகலிங்கம்**

**பாடவிதான உத்தியோகத்தர் - விவசாயத் திணைக்களம்**

அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கரோடு இளம் வயதிலிருந்து இணைந்து செயலாற்றிய அமரர் விநாயகலிங்கம் அவர்கள் வண்ணக்கருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. அவர் என்றென்றும் வண்ணக்கரின் குடும்பத்தினரால் நினைவுகூரப்படுவார் என்பதில் ஐயமில்லை. அத்துடன் கல்வி அபிவிருத்திக்காக அவர் ஆற்றிய பணி அளப்பரியது. அவரும் அவரின் துணைவியாரும் அவர்கள் வீட்டையே கல்விக் கூடமாக்கி வேண்டியவர்களுக்கெல்லாம் வேண்டிய உதவிகளையெல்லாம் எந்தவித எதிர்பார்ப்புமின்றிச் செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே பலநூறு பட்டதாரி மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய ஆசான் அமரர் வசந்தராசபிள்ளை (வசந்தன்) அமரர் விநாயகலிங்கத்தின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.



**அமரர்**
**த. கணபதிப்பிள்ளை**

அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கரின் பெருமதிப்புக்குரியவர்களில் ஒருவர். "லோவர்" என மக்களால் அன்பாக அழைக்கப்பட்ட இவர் களுதாவளை ஸ்ரீ முருகன் ஆலய வண்ணக்கராக இருந்து ஆலயத்திற்கு பெருந்தொண்டாற்றியவர். அத்துடன் மிகச்சிறந்த விஷவைத்தியரும் ஆவார். விஷக்கடிக்குள்ளான பலருடைய உயிரைக் காப்பாற்றி களுதாவளைக் கிராமத்திற்கே பெருமைசேர்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சி.வ. தன்மன்பிள்ளை
ஓய்வுக்குப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

களுதாவளைப் பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கர்

## சி.வ.தன்மன்பிள்ளை அவர்கள்

**இன்று மாலை 6.12 1988. இறைபதம் எய்திவிட்டார்கள்.**

அன்னார் காலஞ் சென்ற திருமதி வாலையப்பிள்ளையின் அன்புக்கணவரும், திருமதி சுனகம்மா சின்னத்தம்பியின் அன்புச் சகோதரரும் திரு.கனகசபை விவசாய உத்தியோஸ்தர், திருமதி.பரமேஸ்வரி கார்த்திகேசு ஆசிரியை,திரு.சுந்தரலிங்கம் அதிபர்,திருமதி.சிவநேசம் வீரபத்திரன் திரு. அருள்மாணிக்கம் ஆசிரியை, திருமதி. மகேஸ்வரி சதாசிவம், செல்வி மங்கையர்க்கரசி, செல்வி இராஜேஸ்வரி ஆசிரியை, செல்வி. சுகுணம் திரு. பொ. தம்பிராசா ஆசிரியர் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

திரு. க. கார்த்திகேசு ஆசிரியர் திரு. பெ. வீரபத்திரன் அதிபர், திரு. மா. சதாசிவம் தபால் அதிபர்-II திருமதி. சாந்தகுணம், திருமதி, மனோன்மணி, திருமதி. செல்வநாயகி திருமதி. பார்பதி கணபதிப்பிள்ளை ஆசிரியை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் களுதாவளை பொது மயானத்தில் **7- 12- 88 புதன்கிழமை பி. ப. 4. 00 மணியளவில் நடைபெறும்.**

மலர்வு: 22- 07- 1906

உதிர்வு: 6- 12- 1988

இவ் அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்
களுதாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது
# கண்ணீர் அஞ்சலி

களுதாவளை பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கர்

அமரர் **திரு. சி. தன்மன்பிள்ளை** அவர்கள்

**தாயின் மடியில்:- 1906.07.22 இறைவனடியில்:- 1988.12.06**

களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் களுதாவளைப் பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கருமாகிய அன்னார் திரு.சி. தன்மன்பிள்ளை அவர்கள் விண்ணுலகு எய்துவிட்டார். இவர் களுதாவளை பெத்தாச் கிழவி குடும்பத்தின் வண்ணக்கராக பல வருடங்கள் கடமையாற்றி சமயப் பணியை மேற்கொண்டவராவார்.

இவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவரை இழந்து வருந்தும் குடும்பத்தினர், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவிப்பதோடு, அவர்களது துயரில் நாமும் கலந்து அவரது ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

குறிப்பு:- தகனக்கிரியைகள் 1988. 12. 07 புதன்கிழமை களுதாவளையில் நடைபெறும்.

**விபுலாநந்தா இந்து கலாசார பொதுப்பணி இயக்கம்**

**1988.12.07 களுதாவளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளை பிள்ளையார் ஆலயத்தில் எமது பெத்தாக் கிழவி குடும்ப வண்ணக்கராக

1938 மாசி மாதம் தொடக்கம் 13 - 07 - 1980 வரை கடமையாற்றி

06 - 12 - 1988 ல் இறைபதம் அடைந்த

## திரு. சி. தன்மன்பிள்ளை அவர்களுக்கு

## பெத்தாக்கிழவி குடும்ப மக்களின்

# அனுதாபச் செய்தி

கடந்த 1938ம் ஆண்டு மாசி மாதத்தன்று எமது குடும்ப வண்ணக்கராக சுவாமி விபுலாநந்த அடிகளினதும் சுவாமி நடராஜாநந்தஜி அவர்களினதும் ஆசியுடன் பதவியேற்று ஐந்து அடி உயர அமைப்பில் இருந்த எம் ஆலயம் அடைந்திட்ட பல கட்ட வளர்ச்சிகளில் பெரும்பங்கு கொண்டு உழைத்த பெருந்தகையே,

1943ம் ஆண்டுகளில் களுதாவளை இராம கிருஷ்ண வித்தியாலயத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கிக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட எம் மண்ணின் மகனே,

சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் முன்னோடியாக விளங்கிய மதிப்புடையோனே,

1932ம் ஆண்டிலே ஸ்ரீ கணேசானந்தா வாசிகசாலையை ஆரம்பித்து இளைஞர்களின் தலைவராக விளங்கி கல்வி, கலை, கலாசார, பொதுச் சேவை என்பவற்றில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திய எம் தலைவரே எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே வந்திட்ட போதிலும் அத்தனையும் தாண்டிக்காலை வைத்திடுவாயே எம் குடும்பத்தில் ஒற்றுமை காத்திட்டாய். தெளிந்த சிந்தனை அமைதியான சுபாவம் சைவ நெறி கொண்ட கொள்கையில் உறுதி உமது தனித்துவ முத்திரைகளாகக் கொண்ட எம் குடும்பக் குலவிளக்கே.

**உம்பிரிவுத் துயரால் ஆறாத்துயர் கொண்டுள்ளோம்.**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.**


இவ்வண்ணம்,

**பெத்தாக்கிழவி குடும்ப மக்கள் சார்பாக**

**இ. வ. வேலுப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஞானசிரோன்மணி சைவப் புலவர் பண்டிதர் ஆர். வடிவேல் அவர்களின் மட் / களுதாவளை இ.கி.ச.தமிழ் வித்தியாசாலை 55 ஆம் ஆண்டு பூர்த்தி பரிசளிப்பு விழா வாழ்த்துச்செய்தி.

வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பற்றாளர்கள், மாணவ மாணவிகள் அனைவரையும் அடியேன் களுதாவளைப் பிள்ளையாருடைய திருவடிகளை தியானித்து திரிகரண சுத்தியோடு மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன் ஆசிர்வதிக்கின்றேன்.

55 வருடங்களுக்குமுன் 1943ஆம் ஆண்டு களுதாவளையில் இ.கி சங்கத்தின் அடித்தளத்தில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்து வைத்த முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜி அவர்களையும் களுதாவளைக் கிராமத்தின் மதிப்பார்ந்த பெரியார்கள் திரு.சி.தன்மன்பிள்ளை வண்ணக்கர் திரு.சி.கண்ணமுத்து ஆசிரியர் அவர்களையும் களுதாவளை மக்களையும் இந்த மகிழ்ச்சி விழாவில் நினைவு கூர்ந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக வீடுதோறும் எண்ணெய்சிந்து பாடியும் வேறு வழிகளிலும் நிதி சேர்ப்பதற்கு அடியேனுக்கு உறுதுணையாயிருந்து உழைத்த நண்பர்களினதும் உத்தமர்களினதும் அன்பை பருகும் இன்பத்தை நினைந்து இறைவனாகிய களுதாவளைப் பிள்ளையாரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வித்தியாலயத்தின் முதல் மாணவனாகிய செல்வன்.த. கனகசபைக்கு (மா/உதவி விவசாயப் பணிப்பாளர்) வித்தியாரம்பம் செய்து அடியேன் களுதாவளைப் பிள்ளைகளுக்கு கற்பிக்கும் அரிய சந்தர்ப்பத்தினை கையளித்த இறைவனை நினைந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சென்ற வருடம் எனக்களித்த வரவேற்பு உபசாரங்களை நன்றிப் பெருக்கோடு நினைந்து "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற இலட்சியத்தோடு இங்கு இறைபணியில் இச் சந்தர்ப்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால் பரிசளிப்பு விழாவில் பங்கு பற்ற முடியாமைக்கு வருந்துகின்றேன். மானசீகமாக எல்லோரையும் எல்லாவற்றையும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.


இன்பமே சூழ்க ..... எல்லோரும் வாழ்க.....

இவ்வண்ணம்
என்றும் நினைவுடன்
பண்டிதர் இ.வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலையூரானே... !
# வேழமுக நாயகனே...!!



கவி:

**கணபதிப்பிள்ளை கருணாகரன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
மட்டக்களப்பு

**பல்லவி:**
வெற்றிலை யூரானே வேழமுக நாயகனே
போற்றுகிறோம் போற்றுகிறோம்
ஆற்றங்கரை ஐங்கரனே தினம்
போற்றுகிறோம்! போற்றுகிறோம்!!

**அனுபல்லவி:**
கல்விச்செல்வம் சுரந்தருளும் களுதாவளைப் பிள்ளையாரே
வெற்றிலை யூரானே வேழமுக நாயகனே ......
ஆற்றங்கரை ஐங்கரனே தினம்
போற்றுகிறோம்! போற்றுகிறோம்!! ஆற்...

**சரணம்:**
மாறும் உலகினில் மாறா அருள் தருவாய் - நீ
தீராக் குறைகளைக் கரங்குவித்தால் தீர்த்திடுவாய்
பேசா மழலைகள் பேசவைத்தும் சிரிக்கவைப்பாய்
பேதலிக்கும் பெற்றோரை பிள்ளைவிற்று வாங்கவைப்பாய் - உன்
சன்னிதியில் சன்னிதியில் பிள்ளைவிற்று வாங்கவைப்பாய்
(கல்விச் செல்வம்)

ஆனி உத்தரத்தில் ஆடிடுவோம் உன்தீர்த்தம்
பாவங்கள் தீர்த்திடுவோம் பாசத்தை வளர்த்திடுவோம்
பார்ப்போமுன் பொன்னூஞ்சல் பாடலெம்மை ஈரமாக்கும்
காணும் எம்தன் பேறையெண்ணி பரவசத்தால் உருகிநிற்போம்! -
(கல்விச் செல்வம்..)

**( களுதாவளைப் பிள்ளையார் இறுவட்டில் இடம்பெற்ற பாடல் )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னடக்கம் மிக்க தலைவர்
# அமரர் தன்மன்பிள்ளை



**சி. சண்முகம்** (BA(Hons), M.BA., LL.B.)
மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களின்
முன்னாள் அரசாங்க அதிபர்
மற்றும் சட்டத்தரணியும் பிரசித்தி நொத்தாரிசும்.
கோட்டைக்கல்லாறு.

கிழக்கிலங்கை மக்களுக்குக் “களுதாவளை” என்றால் முக்கியமாக இரண்டு விடயங்கள் உடன் நினைவுக்கு வரும். ஒன்று, பிரசித்திபெற்ற களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், மற்றது “வெற்றிலை.” இலங்கையில் ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக வடக்கில் வாழும் மக்களும் களுதாவளை பற்றித் தெரிந்திருந்தாலும், மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் பற்றிய பிரபல்யம் அவர்களிடம் குறைவாகவே காணப்படும். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலை சேர்த்து தாம்பூலம் சுவைப்பது இலங்கைவாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் உட்பட சகல இன மக்களிடமும் காணப்படும் பழக்கமாகும். ஆயினும், இப்பழக்கம் இக்காலங்களில் அருகிவரு வதையும் கடந்த காலங்களில் வயது வந்த மக்களில் அதிகமானவர்கள் தாம்பூலம் சுவைப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தமையும் நாம் அனைவரும் அறிவோம். தவிரவும் வெற்றிலை ஒரு புனிதப் பொருளாக சைவ சமய வைபவங்களில் இன்னமும் பாவிக்கப்பட்டு வருகின்றது. இந்த வெற்றிலையை விளைவிக்கும் வெற்றிலைத் தோட்டங்கள் நிறைந்த பிரதேசமாகக் களுதாவளை விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த களுதாவளைக் கிராமத்தில் 1907ம் ஆண்டில் பிறந்து அக்கிராமத்துக்குத் தனியான மதிப்பையும் அங்கீகாரத்தையும், பிரசித்தத்தையும் பெற்றுக் கொடுத்த தன்னடக்கமும், தாராள சிந்தனையும் கொண்டு வாழ்ந்த தலைவர் அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்களின் நினைவாக அவ்வூர் மக்களாலும் அவரின் குடும்பத்தினராலும் மற்றும் உறவினர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற நினைவு மலருக்கு எனது இக் கட்டுரையைச் சமர்ப்பிப்பதில் மன நிறைவும் பெருமையும் அடைகின்றேன். இவருடனான எனது அறிமுகமும் தொடர்புகளும் 1960களில் ஆரம்பித்து அவர் அமரத்துவம் அடையும் வரை இருந்தமையே எனது மன நிறைவுக்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே நான் குறிப்பிட்டுள்ள இரண்டு விடயங்களுடனும் தொடர்புபட்டவர்தான் அமரர் சி.தன்மன்பிள்ளை அவர்கள். களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றிய பதிவுகளில் திரு.தன்மன்பிள்ளை அவர்கள் அவ்வாலயத்தின் தலைமைத் தர்மகர்த்தாவாக (தலைமை வண்ணக்கர்) இருந்து தொடர்ச்சியாக 46 ஆண்டுகள் ஆற்றிய பணிகள் தனியான ஒரு சகாப்தமாக நோக்கத் தக்கது. களுதாவளை மக்கள் ஆறு பாரம்பரியக் குடும்பக் குழுக்கள் (குடிகள்) இணைந்து இவ்வாலயத்தைத் திறம்படப் பராமரித்து ஆண்டு தோறும் திருவிழாக்களையும் தினப் பூஜைகளையும் நடாத்தி வருவது கிழக்கிலங்கை மக்கள் யாவரும் அறிந்த விடயமாகும். இந்த ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்புத் தலைவராகவே அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் இருந்து 1938 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை 46 ஆண்டுகள் தொடச்சியாகத் தனது முதுமைக் காலம்வரை செயற்பட்டு அதனை இன்று மிகுந்த பிரசித்தி பெற்ற ஆலயமாகவும் நாலா பகுதிகளிலும் இருந்து சைவ அடியார்கள் தினமும் வருகை தந்து வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்யும் இடமாகவும் அமையும் வகையில் வழிநடாத்தி நிர்வகித்த பெருமை இவரையே சாரும்.

எனது தந்தையாரின் தொழில் ரீதியான தொடர்பு மூலமாகவே எனக்குத் தலைமை வண்ணக்கர் அமரர் தன்மன்பிள்ளை அவர்களது அறிமுகம் கிடைத்தது. களுதாவளைக்கு அண்மையில் உள்ள கிராமமான கோட்டைக்கல்லாறு எனது ஊர். எனது தந்தையார் தனது தொழிற்துறை முயற்சிகளை களுதாவளை உட்பட இன்னும் பல அயற் கிராமங்களில் மேற்கொண்டிருந்தார். அதனால் எனது தந்தை யாருக்கும் களுதாவளைத் தலைமை வண்ணக்கர் அமரர் தன்மன் பிள்ளை அவர்களுக்கும் நீண்டகாலமாகவே நல்லுறவு இருந்து வந்தது. எனது தந்தையாருக்கு அவரின் தொழிலில் உதவும் முயற்சியில் எனது இளமைக் காலத்தில் மாணவப் பருவத்திலிருந்தே களுதாவளை மக்களுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளேன். குடும்ப வருமானக் குறைவு காரணமாக உழைத்துக் கொண்டே உயர் படிப்பில் அக்கறை காட்டி உயர்நிலைக்கு வரக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பாடசாலை விடுமுறைக் காலங்களை நான் வீணாகக் கழிக்காமல் குடும்ப வருமானத்தைக் கூட்டுவதற்காகத் தந்தையாரின் தொழில் முயற்சிக்கு உதவினேன். அந்த வகையில் அந்தக் கிராமத்தில் பலரின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. பாடசாலைப் படிப்பை முடித்த பின்னர் ஆரம்பத்தில் அரச எழுதுவினைஞராகவும் பின்பு இலங்கை நிருவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையிலும் நான் இணைந்து உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் அரசாங்க அதிபர் போன்ற பதவிகளில் நீண்ட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவை ஆற்றியபோது களுதாவளையைச் சேர்ந்த அனேக உயர் அதிகாரிகளின் அறிமுகமும் எனக்கு ஏற்பட்டது. ஆயினும் எனது இளமைக்காலத்தில் அறிமுகமாகி இருந்த சிலரின் தொடர்புகளை நான் தொடர்ந்து பேணி வந்தேன். அவர்களுள் அமரர் தன்மன்பிள்ளை அவர்களுடனும் அவர்களது ஆண் மக்களுடனும் நான் மிகவும் அன்னியோன்யமாகவும் அன்புடனும் தொடர்புகளைப் பேணி வந்தேன்.

அமரர் தன்மன்பிள்ளை அவர்களிடம் காணப்பட்ட பண்புகளில் என்னைக் கவர்ந்த பல விடயங்களுள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம் எனக் கருதுகின்றேன். குறிப்பாக அவரிடம் காணப்பட்ட தன்னடக்கம், அறிவாற்றல், காந்தீயக் கொள்கையும் அதில் அதீத ஈடுபாடும், சமய வழிபாடுகள், அறிவார்ந்த சம்பாசணை, இங்கிதமான உபசரிப்பு, தலைமைத்துவப் பாங்கு, கண்ணியம் மிக்க செயற்பாடுகள், எளிமையான நடத்தை, எச்செயலையும் ஆழமாகத் திட்டமிட்டு மற்றவர்களின் ஆலோசனைகளையும் பெற்று கச்சிதமாகச் செய்து நிறைவேற்றும் ஆளுமை மிக்க நிர்வாகத் திறன் போன்றவை இன்னும் பல சிறப்பான நற்பண்புகளை நான் அவரிடம் கண்டேன். அவருடன் பேசும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே எனக்குக் கிடைத்தாலும் அவரின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் குறிப்பாக நான் உயர்கல்வியில் ஊக்கம் செலுத்தவேண்டும் என்ற உபதேசம் என்பன எனக்கு மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன. அவரின் மக்களான திருவாளர்கள் கனகசபை, சுந்தரலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அடக்கமான போக்கும் அன்பான உரையாடல்களும், மற்றவர்களை மதிக்கும் மனப்பாங்கு என்பனவும் தந்தையின் குணவியல்புகளுக்கு ஏற்ற வகையில் சிறப்பாக அமைந்திருந்தமை என்னை மிகவும் கவர்ந்ததோடு, அவர்களைப் பின்பற்றியே நானும் கல்வியில் அதிக கவனம் செலுத்தும் ஊக்கத்தைக் கடைப்பிடித்தேன். முக்கிய அரசியல் பிரமுகர்கள், ஊரில் வாழும் பல முக்கியஸ்தர்கள், அயல் கிராமங்களில் இருந்து வரும் அன்பர்கள், நண்பர்கள் எனப் பலரும் தலைவர் தன்மன்பிள்ளை அவர்களின் இல்லம் வந்து அவரின் அறிவுரை, ஆதரவு மற்றும் ஆலோசனை களைக் கோருவதை நான் அவதானித்திருக்கிறேன். அவ்வேளைகளில் குறித்த பிரச்சனைகள் பற்றி அவர் ஆறுதலாகக் கேட்டு அவற்றின் சிக்கல் நிலைமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு புரிந்து கொண்டு தனது ஆலோசனை களையும் தருவார். அவை பெரும்பாலும் பொருத்தமானவையாகவும் ஏற்கக் கூடியவையாகவும் அமைவதோடு, பிரச்சினைகளுக்குரிய தீர்வாகவும் அமையும். அவர் மிகவும் அடக்கமான தொனியிலேயே எப்போதும் பேசுவார். ஆத்திர மடைந்தோ, சத்தமாக அதட்டியோ அவர் பேசியதை நான் காணவில்லை. எப்பொழுதும் பிரகாசமான, புன்சிரிப்பு முகத்துடன் மற்றவர்களை வரவேற்பதும் உபசரிப்பதும் அளவளாவுவதும் வந்தவர்கள் தமது நோக்கம் நிறைவேறிய திருப்தியோடும் மகிழ்வோடும் அவரிடமிருந்து விடைபெற்றுச் செல்வதையும் நான் அவதானித்துள்ளேன். இவற்றுக்கெல்லாம் அவரிடமிருந்த ஆளுமையும், அறிவுப் புலமையும், தன்னடக்கமும், தயவும், எதிர்க் கருத்துடையவர்களுடனும் இன்முகத்துடன் பேசும் மனிதநேயமும் காரணமாக இருந்தன.

இவரின் குடும்ப வாழ்வைப் பொறுத்தவரை, அவர் ஒரு சிறந்த விவசாயி, சுறுசுறுப்பான தோட்டக்காரன், குழந்தைகளைச் சரியான பாதையில் வழிநடத்தும் தந்தை, ஆளுமை மிக்க குடும்பத் தலைவர் எனப் பலவிதத்தில் அவரைக் குறிப்பிடலாம். பொழுது புலர்வதற்கு முன் எழுந்து தனது வெற்றிலைத் தோட்டங்களுக்குச் சென்று துரவில் இருந்து குடத்தில் நீர் எடுத்து தோளில் சுமந்து தனது வெற்றிலைத் தோட்டங்களுக்கு நீர் ஊற்றுவதோடு தோட்டங்களைச் சிறப்பாகப் பராமரித்து அதன்மூலம் வருமானத்தையும் பெற்று வந்தவர். அவரின் மூன்று ஆண் மக்களும்கூடத் தந்தையின் தோட்டத் தொழிலுக்கு உதவியும் ஊக்கமும் தந்து குடும்பத்தை வழிநடத்த ஒத்தாசை புரிந்துள்ளனர். அவர்களும் தந்தையின் நற்பெயரையும் நன்மதிப்பையும் காப்பாற்றும் வகையில் கல்வியிலும், சமூக சேவையிலும் ஊக்கம் செலுத்தி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள். இவரின் மூத்த புதல்வர் திருவாளர் கனகசபை அவர்கள் விவசாயத் துறையில் மேற்படிப்புக்களைப் படித்து மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளராகச் செயற்பட்டு இளைப்பாறிய பின்பு அரசியலுக்குள் மக்களால் ஈர்க்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினராகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகி அரசியல் பணியாற்றினார். அதுபோலவே அடுத்த இரண்டு புதல்வர்களான திரு.சுந்தரலிங்கம், திரு.மகாலிங்கம் ஆகியோர் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் பணியாற்றி நன்மதிப்புடனும், சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பெண் குழந்தைகளும்கூட கல்வித் துறையில் முன்னேற்றமடைந்துள்ளதோடு, சிறந்த குடும்பத் தலைவிகளாகவும் இருக்கின்றனர். திருமதி தன்மன்பிள்ளை அவர்களையும் எனக்கு நன்கு தெரியும். வீட்டுக்கு வரும் விருந்தினர்களைச் சிறப்பாக உபசரிக்கும் நற்பண்பு கொண்டவராக அவர் விளங்கினார். பக்தனுக்கு ஏற்ற பதிவிரதையாகவும், சிறந்த தாயாகவும் அவர் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.

இக்கட்டுரையை நிறைவு செய்யுமுன்னர் திரு.தன்மன் பிள்ளை அவர்களின் சமூக, சமயப் பணிகள் பற்றியும் நான் அறிந்த சில விடயங்களைக் குறிப்பிடுவது பொருத்தம் என எண்ணுகிறேன். சமூகத்தின் உயர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான கல்வியை ஊக்குவிப்பதே அவரின் முக்கிய பணியாக இருந்தது. இதற்காகக் களுதாவளைக் கிராமத்தில் 1940ல் இராமகிருஷ்ண மிஷன் உதவியுடன் பாடசாலையொன்றை அமைத்து முதல் மாணவனாகத் தனது புத்திரனைப் பதிவுசெய்து மற்றவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். அத்துடன் ஏனைய பிள்ளைகளையும் பாடசாலைக்குச் செல்ல உதவியும் ஒத்தாசையும் புரிந்து மாணவர்களைச் சேர்த்தார். அக்காலத்தில் கல்வியில் பலரும் ஊக்கம் காட்டாத நிலைமை இருந்தது. இந்த நிலைமையை மாற்றியமைத்து கல்வித் துறையில் களுதாவளை முன்னேற்றமடைய அவர் காட்டிய அந்த அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமாக அமைந்தது. இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை கல்வித்துறையில் உயர்நிலையில் இருப்பதற்கு அமரர் தன்மன்பிள்ளை அவர்களும் அவருடன் சேர்ந்த பல நல்ல மனிதர்களின் உதவியும் காரணமாக அமைந்தன. அத்துடன் நின்றுவிடாமல், பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குச் செல்லும் ஏழைக் குடும்ப மாணவர்களுக்கு நிதி உதவி உட்பட இன்னும் பல உதவிகளையும் இவரும் இவருடன் சேர்ந்த பரோபகாரிகள் பலரும் அன்று உதவியுள்ளனர்.

கல்விச் செயற்பாடுகளுக்கு வாசிகசாலையொன்றின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட அமரர் தன்மன்பிள்ளை அவர்கள், களுதாவளைக் கிராமத்தில் ஒரு வாசிகசாலையை அமைத்து அதன் செயலாளராக இருந்து அதனை நடாத்தி வந்துள்ளார். பத்திரிகைகள், புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக இவரது சொந்த நிதியும் ஊரில் இருந்த பல பரோபகாரிகளின் நிதியுமே செலவிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட மேலும் பல சமூகப் பணிகளையும் இவர் ஆற்றியுள்ளமையை என்னால் அறிய முடிந்தது. குறிப்பாக, ஏழைகளின் இல்லங்களில் நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு சிரமதான அடிப்படையில் குடிநீர்க் கிணறுகள் தோண்டிக் கொடுத்தல், ஓலை வீடுகளில் வாழும் ஏழைகளின் வீடுகளுக்குக் கூரை வேய்ந்து கொடுத்தல், மரண வீடுகளுக்குச் சென்று வேண்டிய உதவி, ஒத்தாசைகள் செய்தல் போன்ற பல சமூகப் பணிகளில் இவரும் இவரது குழுவினரும் ஈடுபட்டதாகவும் அறிகின்றேன். அக்காலத்தில் இருந்த ஏழ்மை நிலைமைக்கு இத்தகைய பணிகள் அவசியமாக இருந்தன.

நிறைவாக, அவரின் காந்தீயக் கொள்கை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் எப்போதுமே உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கதர் ஆடையையே (வேட்டி) அணிவார். 'சேர்ட்' என்று கூறப்படும் மேலங்கிப் பயன்பாடு அப்போது மிகவும் குறைவு. அதனால் அவர் தோளில் சால்வை மட்டுமே அணிவார். வெளியில் செல்லும் வேளைகளில் சால்வையினால் தனது மேலுடலைப் போர்த்திக் கொள்வார். அவரின் நீளமான தாடி அவருக்கு ஒரு கவர்ச்சியையும் முகத்திற்குப் பிரகாசத்தையும் கொடுத்து, அவரை ஓர் ஆன்மீக வாதியாகக் காட்டியது. தனது இறுதிக்காலம் வரை அவர் அந்தத் தாடியை மழிக்கவில்லை. இளமைக் காலத்தில் தலையில் முடி (மயிர்) இருந்ததோ தெரிய வில்லை. நான் அறிந்த காலம் தொடக்கம் அவரின் தலை வழுக்கையாகவே இருந்தது. அதுவும் அவருக்கு முகக் கவர்ச்சியையும் ஆன்மீகத் தோற்றத்தையும் அளித்தது. நாகரிக மாற்றத்துக்கேற்ப அடிக்கடி தமது உடை, நடை, பாவனையை மாற்றுகின்ற இன்றைய சமுதாயச் செயற்பாடுகளில் இருந்து அவர் வேறுபட்டிருந்தார். தனது காந்தீயக் கொள்கையில் இருந்தும் எளிமையான நடத்தையில் இருந்தும் அவர் எப்போதுமே மாறவில்லை. செல்வங்களைச் சேர்த்தாலும், செல்வாக்கு அதிகரித்த போதும் குழந்தைகள் படித்து உயர் பதவிகளை வகித்தபோதும் அவர் தனது நடத்தைக் கோலத்தை மாற்றியமைக்கவில்லை. அன்று போலவே என்றும் வாழ்ந்தார். அதனால் யாவரையும் கவர்ந்தார். சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து 1988 ஆம் ஆண்டில் இறைபதம் எய்தினார். அவரின் நினைவுகள் இன்னும் என் மனதில் இடம்பிடித்துள்ளன.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"** (திருக்குறள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களுதாவளையின் வரலாற்றியலில்

# நிலைபேறான மாமனிதம்

### சின்னத்தம்பி தன்மன்பிள்ளை
### தலைமை வண்ணக்கர் பற்றிய ஒரு பார்வை



**க. பாஸ்கரன்**

தலைவர் - சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு

**முன்னுரை:**

காலஞ்சென்ற திருவாளர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் ஒரு ஆளுமைமிக்க வழிகாட்டி. இவரது சேவையை, வாழ்க்கைமுறையை பல கோணங்களில் இருந்து பார்க்கலாம். இவர் வண்ணக்கராகக் கடமையேற்றது 1938ம் ஆண்டு. இதற்குமுன்னர் இவரது வாலிபப்பருவத்திலேயே சமூகசேவைகளை ஆரம்பித்து விட்டார் என்பதை அவரது நண்பரும் மைத்துனருமான எனது பாட்டனார் கூறியவற்றை நினைவு படுத்தவேண்டியுள்ளது. அதன் பின்னர் எனது அம்மாவிடம் அறிந்தவை பின்னர் நான் கண்டு கொண்டவை என காலங்களை ஒழுங்கு படுத்தித்தர விளைகின்றேன்.

முதலில் 1940 களில் களுதாவளை எப்படி இருந்தது என்ற சில தரவுகளை தரவேண்டியுள்ளது ஏனெனில் இக்கட்டுரையை வாசிப்போர் தற்போதைய வசதிவாய்ப்புக்களை வைத்து எடைபோடக் கூடாது என்பதற்காக.

அக்காலத்தில் கல்லால் கட்டப்பட்ட வீடுகள் இருக்கவில்லை. இருந்தும் வன்னியனார் வீதியில் வன்னியனாரின் வீடும் 1ஆம் குறிச்சியில் இருந்த உடையார் வத்தை என்று எங்களால் அறியப்பட்ட மல்லிகைத்தீவு உடையாரின் வீடும் கல்லால் கட்டப்பட்ட வீடுகளாக இருந்திருக்கலாம் என அறிய முடிகின்றது. இதே போல் கற்களால் அமைக்கப்பட்ட மதில் வேலிகளே இல்லை. பிரதான வீதியுடன் இணைக்கும் மூன்று வீதிகள் மட்டுமே காணப்பட்டன. அவை கூட குறுகிய தூரம் வரையுமே காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியடி வீதி (தற்போது தேவாலய வீதி)
வன்னியனார் வீதி
கண்ணமுத்து வாத்தியார்வீதி (தற்போது கடற்கரை வீதி)
ஏனைய குறுக்கு வீதிகள் எதுவும் அப்போது காணப்படவில்லை. எல்லாமே மணலால் ஆன ஒழுங்கைகள்தான் காணப்பட்டது. (மழைநீர் வழிந்தோடும் வடிகால்கள்)

துவிச்சக்கர வண்டிகள் மொத்தமாகக் கூட்டினாலும் பத்தாவது இருந்திருக்குமா என்பதும் கேள்விக்குறியே. துவிச்சக்கர வண்டி தவிர வேறு எந்த வாகனமும் இல்லை. சிலரிடம் மாட்டு வண்டிகள் காணப்பட்டன.

அரச உத்தியோகத்தர்கள் என்ற வகையில் நான்கு அல்லது ஐந்து பேர் இருந்திருப்பார்கள்.

திரு. தம்பிராசா வாத்தியார் (திரு.குணநாயகம் ஆசிரியரின் தகப்பனார்)
திரு. தம்பாப்பிள்ளை வாத்தியார் (திரு.வேதநாயகம் Chairman அவர்களின் தகப்பனார்)
திரு. கண்ணமுத்து வாத்தியார் (திரு. பாக்கியராஜா நிருவாக உத்தியோகத்தரின் தகப்பனார்)
திரு. சோமசுந்தரம் வாத்தியார் (திரு.திருநாவுக்கரசு கிராம உத்தியோகத்தரின் தகப்பனார்)
திரு. கார்த்திகேசு வாத்தியார்

அத்தோடு மின்சாரம் இல்லை, தொலைபேசி இல்லை, வானொலி இல்லை, ஒலி பெருக்கி வசதி கூட இல்லை. பொது அறிவிப்புகள் பறையறைதல் மூலமே பிரசித்தம் செய்யப்படும். டும்..... டும்....... சத்தம் கேட்டதும் நாங்கள் ஓடிச் சென்று என்ன பிரசித்தம் என்று கேட்டால் பறை அறிவிப்பவர் விடயத்தை கூறுவார். போக்குவரத்து வசதிகூட மிகக் குறைவு, அரச பேருந்து எப்போதாவது ஒன்று வீதியில் செல்லும். அநேகமாக பிரயாணங்கள் கால் நடையும், மாட்டுவண்டிப் பயணமும் தான். பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லும் வீதி கூட செப்பனிடப்பட்டிருக்கவில்லை.

முருகன் ஆலயம் காலத்தால் பிந்தியது. அதன் அருகில் எனது பாட்டனாரின் வெற்றிலைத்தோட்டம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சிறு பராயத்தில் தினமும் அங்கு செல்வது வழக்கம். அப்போது கூட ஆலயத்திற்குச் செல்லும் வீதி மணலாகவே காணப்பட்டது. ஆலயம் ஓலையினாலேயே சுவர் அமைக்கப்பட்டு ஓலையினா லேயே கூரையும் வேயப்பட்டிருந்தது. பாடசாலை என்று ஒரேயொரு பாடசாலையே இருந்தது. அது மெதடிஸ்த மிசன் பாடசாலை ஆகும். இது பள்ளியடி வீதியில் இருந்தது (தற்போது வாசன் குடியிருக்கும் வளவில்) இங்கு விடுதி வசதி இருந்ததாகவும் வேறு கிராமத்தவர்களும் கல்வி கற்றதாகவும் அறியமுடிகின்றது. குறிப்பாக மண்டூரைச்சேர்ந்த பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள், களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு.செல்வரெத்தினம் வைத்தியர் அவர்கள், திரு.இராசரெத்தினம் ஆசிரியர் அவர்கள், திரு.பாக்கியம் ஆசிரியர் அவர்கள் (பிற்காலம் CEO)

பஞ்சமும், பட்டினியும் தலைவிரித்தாடிய காலம். இக்காலத்தில் களுதாவளைக் கிராமம் சனத்தொகை கூடியதாகவும், பிரபல்யமானதாகவும் இருந்ததால் மெதடிஸ்த மிசன் பாதிரிமார் இங்கு தேவாலயத்தினையும் பாடசாலையினையும் அமைத்தனர்.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில்தான் திரு.தன்மன் பிள்ளை அவர்கள் வண்ணக்கர் பொறுப்பையும் கிராமத் தலைவர் பொறுப்பையும் ஏற்றிருக்கின்றார். இன்றும் களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு வண்ணக்கராக ஒவ்வொரு குடும்பத்திற்கும் பலர் இருந்திருக்கிறார்கள். இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றும் வண்ணக்கர் என்றதும் அல்லது வண்ணக்கர் குடும்பம் என்றதும் எல்லோர் மனதிலும் இயல்பாகவே இவரையும் இவரது குடும்பத்தையுமே அனைவரும் நினைப்பர். அந்தளவுக்கு இவரின் பணியும், சேவையும் நிலைத்துள்ளது.

இவர் ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு மேலாக வண்ணக்கராக தொண்டாற்றியுள்ளார். களுதாவளைக்கென்று ஒரு வழித்தடத்தையே பதித்துள்ளார். இதனால் ஏனைய கிராம மக்கள் களுதாவளைக் கிராமத்தில் தனி மரியாதையையே வைத்துள் ளனர். களுதாவளைக் கிராமத்தையும் சுயம்புலிங்கப் பிள்ளையா ரையும் வேறுபடுத்திப்பார்க்க முடியாதபடி கிராமத்தையும், ஆலயத்தையும் இரண்டறப் பிணைத்துவிட்டவர் அமரர் அவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது சேவைகள்:

### 01. வாசிகசாலை அமைத்தல்:

வண்ணக்கர் தன்மன்பிள்ளை அவர்கள் கற்றறிந்த அறிஞர் இல்லை. ஆனால் நூலகத்தின் அவசியம் உணர்ந்து அனைவரும் வாசிக்க வேண்டும் நூலறிவு பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவரது தலைமையில் இளைஞர் குழுவொன்று சேர்ந்து வாசிகசாலை ஒன்றை அமைக்கின்றனர். இக்குழாத்திலே எனது பாட்டனார் திரு.கு.சின்னத்தம்பியும் ஒருவர். இவ்வாசிகசாலையில் உள்ள புத்தகங்களையும், பத்திரிகைகளையும் பாதுகாப்பது இவரது பொறுப்பாகும். இதனால் இவருக்கு Keeper என்று பதவிப்பெயர் கொடுத்திருந்தனர். இது தொடர்பாக பெத்தப்பா சில விடயங்களை என்னோடு பகிர்ந்துள்ளார்.



**திரு. கு. சின்னத்தம்பி**

இவர்கள் வாசிப்புடன் மட்டுமல்ல கலாசாரத்தினைப் பேண வேண்டும், சமயம் சம்பந்தமாக அறிவூட்டவேண்டும், நற்பழக்கங் களை பழக்க வேண்டும் என்று சிந்தித்து பல செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். இளைஞர்கள் குழுவாகச் சேர்ந்து தோட்ட ஆயத்தவேலைகள் செய்தல், தோட்டப் பராமரிப்புகள், வீட்டுக் கூரைகளுக்கு ஓலைவேய்தல் போன்ற வேலைகளைச் சிரமதான அடிப்படையில் மேற்கொண்டுள்ளனர். இது இப்பொழுதும் தொடர் வதைக் காணலாம். பாடசாலையையே கண்டிராத பலர் (பெத்தப்பா உட்பட) இந்த நூலகத்தினூடாக வாசிக்கப்பழகினர் என்றால் அதன் தேவை எப்படிப்பட்டது என்பதை அந்தக்கால சூழலை நினைத்து அதன் பயனை எடைபோடவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக வாசிகசாலைக்கென ஒரு துவிச்சக்கரவண்டி இருந்துள்ளது. இது கிராம மக்கள் துவிச்சக்கரவண்டி ஓடப் பழகுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான் பெயரை மறந்து விட்டேன். ஒருவர் பழகுவதற்காக துவிச்சக்கரவண்டியை உருட்டிக்கொண்டு சென்றவர் சிறிது நேரத்தில் கையிரண்டிலும் வண்டியை தூக்கிப்பிடித்தவாறு கொண்டுவந்தாராம். ஏனென்று விசாரித்தபோது அவ்வண்டி உருளுதில்லை என்று கூறினாராம். விடயத்தை ஆராய்ந்தபோது அவர் வண்டியின் தடுப்பை (Break) பிடித்தபடி வண்டியை மிதித்துள்ளார். வண்டி உருளவில்லை. பின்னர் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறார். ஏன் இதைச் சொல்கின்றேன் என்றால் அந்தக்கால சூழல் இவ்வாறுதான் காணப்பட்டது. இவ்வாறான அறியாமையில் வாழ்ந்த மக்களுக்கு சேவையாற்றுவதற்கென்றே வாசிகசாலை உருவாக்கப்பட்டது.

## 02. பாடசாலை அமைத்தல்:

இவ்வாறு வாசிகசாலை அமைத்து சமூகத்தொண்டாற்றிய இளைஞர்குழு இவரது தலைமையில் சுவாமி விபுலானந்தரை சந்தித்து ஒரு இந்துப்பாடசாலையை அமைப்பதற்கான விண்ணப்பத்தினை முன்வைத்தனர். பின்னர் அவரை ஊருக்கழைத்துவந்து 1944ஆம் ஆண்டு இராமகிருஷ்ணமிஸன் பாடசாலை அமைக்கப்பட்டது. இது இவரது தூரநோக்கினை எடுத்துக்காட்டுவதாக அமையும்.

ஆலயத்தொண்டு தொடர்பாக நான் அதிகம் எழுத வேண்டிய தில்லை. ஆலயத்தின் அனைத்துப் பொறுப்புக்களும் இவரிடமே காணப்பட்டது. ஊர்மக்களும், இவர்மேல் முழு நம்பிக்கை வைத்திருந்தனர். ஆலயக் கூட்டங்கள் நடக்கும் வேளையில் ஏதும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அவர் எல்லாவற்றையும் கவனத்திற்கொண்டிருந்துவிட்டு இறுதியாக தனது கருத்தினை முன்வைப்பார். அனைவரும் இதனை மறுப்பில்லாமல் ஏற்றுக் கொள்வர். இது இவரது தலைமைத்துவப் பண்பைக் காட்டி நிற்கின்றது. தோற்றத்தில் உயரம் குறைவானவராக இருந்தாலும் எண்ணத்தில், ஆளுமையில் உயர்ந்தவர். இவரது காலச் சூழலைப் பற்றி முன்னரே கூறியுள்ளேன். தற்போது ஆலயத்தின் நிதிவளம், தொலைத் தொடர்பு வசதி, போக்குவரத்து வசதி, எல்லாம் தாராளமாக உள்ளது. அப்போது இவர் கால்நடையாகவே சகல கடமைகளையும் மேற்கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்மக்களும் சிரமதான அடிப்படையிலேயே தொண்டாற்றி உள்ளனர். இப்போது ஆலயப்பணி ஆற்றுவது அந்தக்கால சூழலுடன் ஒப்பிடும்போது மிக இலகுவானது. இவரது நாளாந்த கடமையை கவனித்தால் இது தெளிவாகும். அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்து காலைக்கடன் முடித்து கால் நடையாகவே வயலுக்குச் செல்வார். வயலைச் சுற்றிப்பார்த்துவிட்டு மூன்றுகட்டு வம்மியடி ஊடாக 4ம் குறிச்சி பிரதானவீதிக்குச் சென்று திருநீற்றுக்கேணி முருகன் கோவிலுக்கருகில் துரையின்காடு என்ற பகுதியில் உள்ள தனது வெற்றிலைத் தோட்டத்தினை மேற்பார்வை செய்து நீர் ஊற்றிவிட்டு காலை 10.30 அல்லது 11.00 மணியளவில் கிராமத்தின் ஊடாக நடந்தே வீட்டுக்கு வருவார். அங்கு காலை உணவை உண்டபின்னர் கால் நடையாகவே பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்வார். வெயில் காரணமாக தான் கட்டிய வேட்டியின் ஒரு பகுதியினை சுருட்டி தலைப்பாகைபோல் தலையில் வைத்திருப்பார் இவ்வாறு குடுகுடுவென நடந்தே தனது கடமையை ஆற்றினார். பிற்காலத்தில் தனது மகன் அருள்மாணிக்கத்துடன் அல்லது வேறு சில இளைஞர்களுடன் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்ததை கண்டுள்ளேன். இவ்வாறு பிற்பகல் வேளையிலும், இவரது கடமை தொடரும். தினமும் ஏறக்குறைய 10 கிலோமீற்றர் தூரம் நடப்பார் என எண்ணுகின்றேன்.

ஆலயத்தின் உண்டியல் திறந்து பணம் எடுப்பதற்காக சிறுவனான என்னையும் அழைத்துச்செல்வார். அப்போது 1 சதம், 2 சதம் தான் அதிகமாக வரும். 5 சதம், 10 சதம் மிகக் குறைவு. ஒவ்வொரு நாணயத்தினையும், ஒவ்வொன்றாகவே எண்ணு வோம் (தற்போது நிறைபோட்டு அளவிடப்படுகின்றது) இவ்வாறு ஆலயத்தின் நிதிநிலைமை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அப்படி இருந்தும் ஊர்மக்களை ஒன்றுதிரட்டி சேவைகளை மேற்கொண்ட ஒரு சேவையாளன். இதேபோல் ஆலயத்துடன் மட்டுமல்ல பாடசாலை அபிவிருத்தியிலும் தன்னாலான சேவையை வழங்கியுள்ளார்.

இவரது வீட்டுக்கு முன் எங்களது வீடு இருந்ததால் இவரது நடவடிக்கைகளை என்னால் அவதானிக்க முடிந்தது. இவரது வீட்டிற்கு பலரும் வந்து செல்வார்கள். அதில் கொங்கமுத்துதுச் சாமி யார், திறப்புக்காரர் பழனித்தம்பி, பரசர் கிருஷ்ணபிள்ளை, சின்னத் தம்பி, காசிப்பிள்ளை போன்றவர்களை ஞாபகப்படுத்த முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவர் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து கிராம மக்களுக்கு மட்டுமல்ல தனது மக்களுக்கும் சிறந்த கல்வியினை வழங்குவதற்காக அனைவரையும் பாடசாலைக்கு அனுப்பி கற்பித்தார். ஆண்பிள்ளைகளை ஆங்கிலக்கல்வி பெறுவதற்காக மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, சிவானந்தா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு அனுப்பி கற்பித்தார். இவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்று திரு.த.கனகசபை அவர்கள் விவசாயத் திணைக்களத்தில் மாகாணப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்றார். ஏனைய இருவரும் அதிபர்களாக இருந்து ஓய்வு பெற்றனர். இதிலே கனகசபை அவர்கள் ஓய்வின்பின் மட்டக்களப்பு மாவட்டத்தின் அதிக விருப்பு வாக்குப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சேவை யாற்றியவர் என்பது சகலரும் அறிந்த விடயமாகும்.

அதுமட்டுமல்ல நான் நினைக்கின்றேன் 1969ஆம் ஆண்டு காலப்பகுதியில் அக்காலத்தில் அரச புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவுக்குச் சென்று உயர்பயிற்சி பெற்றவர் திரு.கனகசபை. இவற்றுக்கெல்லாம் காரணம் வண்ணக்கர் தன்மன்பிள்ளை அவர்களின் வழிகாட்டலே என்றால் மிகையாகாது. மேலும் கிராமத்தில் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற தன்னாலான உதவிகளையும், செய்துள்ளார். கிராமத்தில் ஏதாவது நன்மை தீமை என்று எந்த நிகழ்வாக இருந்தாலும் இவர் அந்த இடத்தில் பிரசன்னமாக இருப்பார். அதிகம் பேசமாட்டார். இவரது தாடியும், மீசையும் இவரது வாயை மறைத்துவிடும். ஓரிருவார்த்தைகளே பேசுவார். அவை பொருள் பொதிந்ததாக அமையும். அல்லது சிறந்த அறிவுறுத்தலாக இருக்கும். செயல்திறன் மிக்கவர், எந்த எதிர்ப்புகளுக்கும் அஞ்சமாட்டார்.

தனது பிள்ளைகளுக்கு களுதாவளை கிராமத்திலேயே திருமணம் நடாத்தி வைத்தார். ஆண் மக்களுக்கும் வெளியூர் திருமண வாய்ப்புக்கள் வந்தபோதும், விருப்பு வெறுப்புக்கள் இருந்த போதும், தனது கொள்கைப்படி கிராமத்திலேயே திருணம் செய்து வைத்தார். அவர்களும் தந்தை சொல் தட்டாது அவரது விருப்பத்தையே நிறை வேற்றினர். இது இவரது முன்னுதாரணமான செயற்பாடாகும். இது கிராமத்து மக்களுக்கும் ஒரு வழிகாட்டலாக அமையும். இவ்வாறு இவரது சேவையை கூறிக்கொண்டே செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. காலமும் கருத்தும்:

கடந்த 2000ஆம் ஆண்டு தேற்றாத்தீவைச் சேர்ந்த ஈழத்து பூராடனார் அவர்களுக்கு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கக்கோரி விண்ணப்பித்ததற்காக அவர் தொடர்பான தகவலைப் பெறுவதற்கு கனடாவில் வசிக்கும் அன்னாருடன் அடிக்கடி தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவேண்டியேற்பட்டது. அவ்வேளையில் மதிப்புக்குரிய ஐயா அவர்கள் ஒரு தகவலைத் தந்தார். அதாவது தான் கிழக்கின் புகழ்பூத்த மைந்தர்கள் என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுத இருப்பதாகவும், இது தொடர்பில் களுதாவளைக் கிராமத்தில் ஒருவரை சிபாரிசு செய்யுமாறும் கேட்டார். நான் உடனே வண்ணக்கர் தன்மன்பிள்ளை அவர்களின் பெயரைக் கூறினேன். அவரும் உடனடியாக ஆமோதித்து வேண்டிய தகவல் களை அனுப்புமாறு கூறினார். நானும் அவரது மகன்மாரிடம் விபரங்களைப் பெற்று தொகுத்து அனுப்பினேன். அவர் அந்த தகவல்களை ஒழுங்குபடுத்தி சிறப்பான கட்டுரையாக்கி நான் எழுதிய தலைப்பை மாற்றி பின்வரும் தலைப்பைக் கொடுத்திருந்தார். 'சமயக் காழ்ப்பற்ற ஒப்பற்ற தலைவன்' எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஒரு முழுமையான கிறிஸ்தவர் ஒரு இந்துக்கோயில் வண்ணக்கருக்கு இவ்வாறான ஒரு தலைப்பை இட்டிருக்கின்றாரே என்று. அந்தளவிற்கு பிறமதத்தவர் களுக்கு எந்தத் தடையும் இல்லாமல் மத அனுஸ்டானங்களை சுதந்திரமாக செய்வதற்கு வழிகாட்டியுள்ளார். இல்லாவிட்டால் அப்படி ஒரு தலைப்பை வழங்கியிருக்க முடியாது. இதனோடு தொடர்புபடுத்தி எனது சிறுவயது சில சம்பவங்களை மீட்டுப்பார்த்தேன்.

களுவாஞ்சிகுடி முதல் குருக்கள்மடம்வரை உள்ள கிராமங்களுக்கான மெதடிஸ்த தேவாலயம் களுதாவளையில்தான் அமைந்திருந்தது. அனைத்து மக்களும் ஞாயிறு ஆராதனைக்கு இங்குதான் வருவார்கள். அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்க வில்லை. தங்களது மதக்கடமைகளை தங்குதடையின்றி நிறைவேற்றினர். உதாரணமாக, விநாயகப்பெருமானின் திருவாதிரை தீர்த்தோற்சவம் முடிந்து இறை ஊர்வலம் பள்ளியடி வீதியால் (தேவாலயவீதியில்) வந்து நடுத்தெருவினால் சென்று கொம்புச்சந்தி ஆலயத்தின் முன்னால் இளைப்பாறி பின்னர் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தினை சென்றடையும். இவ்வேளையில் தேவாலயத்தை அண்மித்து ஊர்வலம் வந்ததும் ஒலிபெருக்கிகள் மேளதாளங்கள் நிறுத்தப்பட்டு ஒரு மௌன ஊர்வலமாகவே இது காணப்படும். இதேபோல் பிரேத ஊர்வலம் செல்லும்போதும் தேவாலயத்திற்கு அண்மையில் வந்தததும் தேவாலயத்தை கடந்து செல்லும்வரை பறையொலி, பட்டாசு ஒலி என்பன நிறுத்தப்படும். இன்றும் இவ்வாறு பேணப்படுகின்றது. இவையெல்லாம் தேவாலயத்திற்கு வழங்கப்பட்ட மரியாதையாகும். அத்துடன் வண்ணகரின் வீடும் தேவாலயத்திற்கு அருகிலேயே காணப் படுகின்றது. இவற்றையெல்லாம் வைத்துத்தான் கலாநிதி செல்வராஜகோபால் அவர்கள் மேற்படி பெறுமதிமிக்க தலைப்பைக் கொடுத்தார் என் நான் எண்ணுகின்றேன்.


இவ்வாறு வளமற்ற, வசதியற்ற, உலகவிபரம் அறிந்திராக ஒரு காலகட்டத்தில் சீரிய சிந்தனையுடன், கிராமம், மக்கள் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து வழிகாட்டிய பெருமகனாருக்கு கிராமத்தில் ஒரு அடையாளம் இல்லையே, இதனை ஊர்மக்கள் செய்யவில்லையே என்று கவலைப்பட்டதுண்டு. இது தொடர்பாக அவரது குடும்ப உறுப்பினர்களிடம் சில முன்மொழிவுகளையும் செய்திருந்தேன். ஆனால் அது செயல்வடிவம் பெறவில்லை. இன்றாவது இந் நினைவு நூலை வெளியிடுவதையெண்ணி மனம் கொஞ்சம் ஆறுதலடைகின்றது. என்றாலும் நிலையான ஒரு நினைவுச்சின்னம் அவசியம் என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி தனது வாழ்க்கையையே வழிகாட்டியாக அமைத்துக்காட்டிய அன்னாரது நினைவுகள் நிலைபெறப் பிரார்த்திப்பதோடு வாழ்க அவரது சமய சமூகத்தொண்டுகள் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**மேற்கூறப்பட்ட தகவல்களில் காலம், பெயர்கள் என்பவற்றில் ஏதேனும் தவறுகள் இருந்தால் தயவு செய்து திருத்திக் கொள்ளவும். இவை அவ்வப்போது செவிவழியாக பெற்றுக்கொள்ளப்பட்டவைகளாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்மிக்க பெருந்தகை



**கா. வேலாயுதபிள்ளை**
பெத்தாக்கிழவி குடும்ப
முன்னாள் கௌரவ வண்ணக்கரும்
சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய
முன்னாள் பரிபாலன சபைத் தலைவரும்,

களுதாவளைக் கிராமத்தின் புகழ்மிக்க பெருந்தகையாளரும், பெத்தாக்கிழவி குடும்ப முன்னாள் சிரேஸ்ட வண்ணக்கருமாகிய திரு.சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்களது வாழ்வியல் வரலாற்றுப் பெருமை பற்றி வெளிவருகின்ற இம் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன்.

எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும் அளப்பரிய தொண்டுகள் புரிந்த முன்னோடிகளில் ஒருவராக திருவாளர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்களைப் பார்க்கின்றேன். ஆன்மீக சிந்தனையும், ஆளுமையும், சிறந்த நிர்வாகத்திறனும் கொண்ட இவரது வாழ்வியல் நெறிகளும், பணிகளும் என்றென்றும் நினைவுகூரத்தக்கதாகும்.

இப்பெருமகனார் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பெத்தாக் கிழவி குடும்ப வண்ணக்கராக 1938 ஆம் ஆண்டு பதவியைப் பொறுப்பேற்று சுமார் நாற்பது வருட காலம் இறைபணியாற்றிய பெருமைக்குரியவர். இவர் சிரேஸ்ட வண்ணக்கராகவிருந்து பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்குவதற்கு உந்து சக்தியாக அமைந்தது என்றால் மிகையாகாது.

என்கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கமைய இவரது காலத்தில் பிள்ளையார் ஆலயத்தில் பல புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலய ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் என்பவை புனரமைக்கப்பட்டன. இவற்றோடு ஆலய சுற்றுச் சுவர், வைரவர் சந்நிதி, ஆலய மடம், கால தீர்த்த கங்கை என்பனவும் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனோடு எழுந்தருளி விக்கிரகங்கள், ஆலயத்திற்கான வாகனங்கள் பெறப்பட்டன. ஆலயத்தில் மின்னிணைப்பும் ஏற்படுத்தப்பட்டது. ஆலயத்தில் நித்திய பூசைகள் ஒழுங்குற இடம்பெற்றதுடன், ஆலயம் புனரமைக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. சங்காபிஷேகமும் இடம்பெற்றன. இவரது பெருமுயற்சியால் ஆலய வெளிவீதி விரிவுபடுத்தப்பட்டது. இவரது காலத்தில் முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு ஆலய வருடாந்த உற்சவத் திருவிழா நடைபெற்றமை இவரது பணிக்கு மகுடம் சூட்டுவதாகவுள்ளது.

இப்பெருந்தகையாளர் சமய வளர்ச்சிக்கு மட்டுமன்றி, சமூக மேம்பாட்டுக்கும் ஆற்றிய பணிகள் மகத்தானதாகும். எமது கிராம மக்களது கல்வி முன்னேற்றத்திற்கென கணேசானந்தா வாசிகசாலையின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டதுடன் இங்கு இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை அமைவதற்கும் இவராற்றிய பங்களிப்பு மனங்கொள்ளத்தக்கது. எமது கிராமமக்கள், வன்னிமைகள், பெரியோர்கள் அனைவரோடும் ஒன்றுபட்டு இக்கிராமத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெருமகனார் எல்லோராலும் மதிக்கத்தக்கவராகவும் திகழ்ந்தார்.

பெருமைக்குரிய இப்பெருந்தகையாளர் இம் மண்ணில் பிறந்து நூறாண்டைக் கடந்தும் எமது மனதில் நீங்காது நிறைந்துள்ளார். அவரது திருநாமம் காலமுள்ளளவும் ஞாலத்தில் நிலைபெற எல்லாம் வல்ல களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாமனிதர்

**ஞா. யோகநாதன்**

ம.தெ.எ.பற்று பிரதேச சபையின் தவிசாளரும்
களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய பாரிபாலன சபைத் தலைவரும்



இயற்கை எழில் கொஞ்சும் களுதாவளைப் பதியில் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை கௌரவ வண்ணக்கர் அவர்கள் பிறந்தார். அவர் வாழ்ந்த காலம் களுதாவளைக் கிராமத்தின் பொற்காலம் என்றால் மிகையாகாது. களுதாவளைக் கிராமத்தின் கண்களாக களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயமும் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகப் பெருமான் ஆலயமும் விளங்குகின்றன. இரண்டு ஆலயங்களும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்கள் உடையவை.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் அமரர்.சி.தன்மன்பிள்ளை அவர்கள் கௌரவ வண்ணக்கராக மிக நீண்ட காலம் சேவையாற்றியவர். சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் ஊடாக இறை பக்தியை வளர்த்தார். கிராமத்துக்கு பல கல்விப் பணிகளை முன்னெடுத்தவர். வண்ணக்குமார் சபையின் சிரேஸ்ட கௌரவ வண்ணக்கராக எல்லோராலும் மதிக்கப்பட்டவர். பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் முதலியவற்றை முன்னெடுத்தவர். ஆலயம் இறைவழிபாட்டிற்கு மட்டும் அல்லாது அது சமூகத்துக்கும் சேவை செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் ஆலயத்தின் ஊடாக கல்வி வளர்ச்சிக்குப் பல உதவிகள் செய்தவர். இதற்கு வண்ணக்குமார் சபையின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்தது.

களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் படிப்படியான வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. இவ்வாலய ஸ்தாபகர் அமரர் சின்னத்தம்பி சுவாமிகள் 1961 ஆம் ஆண்டு களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்தையும், அதன் ஆதனங்களையும் ஆறு குடும்ப மக்களிடம் தர்ம சாசனமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளித்தார். அவ்வாலயத்துக்கு 1961 ஆம் ஆண்டிலிருந்து ஆறு குடும்ப கௌரவ வண்ணக்குமார் தெரிவு செய்யப்பட்டு ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தனர். வள்ளி நாயகி குடும்பத்தின் சார்பில் மூத்ததம்பி குழந்தைவேல் என்பவர் கௌரவ வண்ணக்கராகத் தெரிவு செய்யப்பட்டார். வள்ளிநாயகி குடும்பத்துக்குரிய கோவில் உரிமை அந்தஸ்து முதலில் இங்கு வழங்கப்பட்டது. சில வருடங்களுக்குப் பின்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்திலும் வழங்கப்பட்டது. இந்தக் கைங்கரியம் இறைபதம் அடைந்த கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களின் காலத்தில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.மேலும் கௌரவ வண்ணக்கர் அவர்கள் சுறுசுறுப்பு உடையவராக விளங்கினார். நீர் வெற்றிலைச் செய்கையிலும், விவசாயத்திலும் சிறப்பாக ஈடுபட்டார். பழகுவதற்கு இனிமையானவர். சிறந்த பண்புடையவர் நல்ல காரியங்களை விரைவாக செய்து முடிப்பார். கல்வியை எமது கிராமத்தில் வளர்ப்பதில் அரும்பாடுபட்டுள்ளார். பாடசாலைகளை அமைப்பதிலும் கிராமத்து முன்னோடிகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளார். மறைந்தும் மறையாத மா மனிதராக விளங்குகின்றார். களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்தின் வளர்ச்சிக்கு இறைபதம் அடைந்த சின்னத்தம்பி சுவாமிகளுடனும், மற்றும் ஊர்ப் பெரியார்களுடனும் இணைந்து பல நல்ல காரியங்களைச் செய்தார். அவருடைய இறை தொண்டினால் அவரது குடும்பம் எல்லாச் செல்வங்களும் நிறைந்ததாக உள்ளது.

பிற்காலத்தில் அவரது மூத்தமகன் திரு.த.கனகசபை அவர்கள் விவசாயத்துறையில் மாவட்டப் பணிப்பாளரகச் செயல்பட்டார். பின்பு அந்த அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று மட்டக்களப்பு மாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். மாவட்டத்துக்கும், எமது கிராமத்துக்கும் இயன்ற சேவைகளை வழங்கியுள்ளார். களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய பரிபாலனசபை விடுத்த வேண்டுகோளின் பேரில் அப்பகுதிக்கு மின்மாற்றி ஒன்றையும் அமைத்துத் தந்தார். அதனால் மின்பாவனை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக பல நல்ல காரியங்களைச் செய்துள்ளார். எனவே இவ்வாறான நல்ல விடயங்களை மக்கள் அறிந்திருத்தல் வேண்டும். இவை எதிர்காலச் சந்ததியினருக்கும் பயனுடையதாக அமையும் என்பது திடமான நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் நினைவுகூரத்தக்க உத்தம புருஷர்



**வே. குணாளன்**

சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும், பேனாச்சி குடும்ப கௌரவ வண்ணக்கரும்.

செந்தமிழும் சைவமும் இலங்கும் களுதாவளைப் பதியானது பழமையும் பெருமையும் மிக்கதோர் கிராமம் ஆகும். கிழக்கிலங்கையின் முத்தெனப் போற்றப்படும் இப்பதிக்கு பெருமை சேர்த்த பெரியோர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் பலராவார். இத்தகைய பெருந்தகைகளில் களுதாவளைப் பிள்ளையார் ஆலய முன்னாள் கௌரவ வண்ணக்கர் திருவாளர் சின்னத்தம்பி தன்மன் பிள்ளை அவர்கள் முதன்மையானவராகப் போற்றத்தக்கவர் ஆவார். எனவே அப் பெருந்தகையாளரது வாழ்வியல் சிறப்புக்களை நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" எனும் கூற்றுக்கமைய களுதாவளை என்னும் இப் புண்ணிய பூமியில் சின்னத்தம்பி கண்ணம்மை தம்பதியினருக்கு மகனாக அவதரித்தவர் திரு.தன்மன்பிள்ளை அவர்கள் ஆவார். இத்திருமகனார் இக்கிராமத்திலே பேரோடும், புகழோடும் வாழ்ந்தவர். களுதாவளைக் கிராமம் என்றால் இவரது பெயரைச் சொல்லும் வகையிலே சிறப்புடன் வாழ்ந்த பெருமைக்குரியவர். தனது இளவயது முதல் இறை நம்பிக்கையுடன் வாழ்ந்தார் என்றும், மற்றவர்களை மதித்தொழுகும் உயரிய பண்பும், பொதுமக்களது உயர்விலே அவருக்கிருந்த ஈடுபாடும், சேவை மனப்பான்மையும் அவரது வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளது என்பதை அறியக் கூடியதாக உள்ளது. அவரது சீரிய வாழ்க்கை நெறியானது பிள்ளையார் ஆலய பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கர் என்ற பெருமைமிக்க பதவியைப் பெறவும், இறை பணியாற்றவும் துணையாக அமைந்தது எனலாம்.

களுதாவளைக் கிராமமானது இயற்கை எழில் மிக்கதும், நீர்வளம், நிலவளம் என்பன நிறைந்த தனித்துவமான பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பம்சங்களைக் கொண்டதும், வெற்றிலையின் விளைநிலம் எனவும் போற்றப்படும் கிராமமாகும். இவ்வூர் கல்வியிலும், கலைகளிலும், பண்பாட்டிலும் பெருமையோடும், புகழோடும் திகழ்கின்றது. முன்னர் இக்கிராமமானது வன்னியனாரின் நிர்வாக மையமாக விளங்கிய சிறப்பினையும் கொண்டது. இங்கு பொன்னுச்சாமி வன்னியனார் யானை, குதிரை என்பவற்றுடன் தங்கி வாழ்ந்ததுடன் இப்பிரதேசத்தின் நிர்வாகத்திலும் தமது பங்கினையும் செல்வாக்கினையும் கொண்டு விளங்கினார். இப்பெருமை மிக்க களுதாவளைப் பதியில் அவர்கள் வாழ்ந்த காலச்சூழலில் வாழ்ந்து இக்கிராமத்திற்கு மேலும் புகழ் சேர்த்தவர் திரு.சி.தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் ஆவார்.

இவர் பிள்ளையார் ஆலயத்தின் சிரேஸ்ட வண்ணக்கராக பணிதனைப் புரிந்ததுடன் ஏனைய குடும்ப வண்ணக்குமார்கள் மற்றும் திருப்பணியாளர்கள், பொதுமக்கள் அனைவருடனும் ஒற்றுமையாக இருந்து ஆலய நிர்வாகக் கடமைகளையும், ஆலயத் திருப்பணிகளையும் செவ்வனே நடாத்தி வந்ததாகவும் எமது பேனாச்சி குடும்ப வண்ணக்கர்பதவியினை வகித்த கணபதியார் கண்ணமுத்து வண்ணக்கர் மற்றும் சின்னத்தம்பி கண்ணமுத்து வண்ணக்கர் என்போருடன் ஒன்றுபட்டு ஆலயத் திருப்பணிகளை புரிந்தனர். இவர்களுள் சின்னத்தம்பி கண்ணமுத்து வண்ணக்கர் அவர்கள் களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமை புரிந்தவர் என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

மேலும் இவர்களுக்கு முற்பட்ட காலத்தில் பொலிஸ் தலைமை கி. கிருஸ்ணபிள்ளை வண்ணக்கருடனும் உறவுகளைப் பேணி வந்துள்ளார். இவை அனைத்தும் இவரது காலத்தில் பேனாச்சி குடும்பத்துடன் இருந்த நெருக்கமான தொடர்புகளைக் காட்டுகின்றது. அத்தோடு களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற திருவிழாவின்போது பேனாச்சி குடும்ப வண்ணக்கர் திரு.சி.கண்ணமுத்து அவர்கள் ஆலய அனைத்து வண்ணக்குமார்களுடனும் இணைந்து சிறப்பாக பணியாற்றியமை சிறப்பம்சமாகும். அந்த வகையில் கண்ணமுத்து வண்ணக்கரால் உருவாக்கப்பட்ட சைவ மகாசபை களுதாவளைப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக்களில் முன்னின்று திருப்பணிகள் ஆற்றி வந்திருப்பது என்றென்றும் மறக்க முடியாதவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணியே தனது உயர்வான பணியெனக் கொண்டு வாழ்ந்தவர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள். அவரால் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும். இவர் 1938 ஆம் ஆண்டு பிள்ளையார் ஆலய வண்ணக்கராக பதவியேற்றது முதல் தொடர்ந்து சுமார் நாற்பது வருடங்களுக்க மேலாக அயராது பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் இவ்வாலயத்திலே பல அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலய கட்டுமானப் பணிகள் மற்றும் புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வேளை அக்கால சூழ்நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது எனவும், குறிப்பாக மரங்கள் கட்டுமான வேலைகளுக்கு தேவைப்பட்டபோது அவை இறையருளால் கடலில் வந்தடைந்த தாகவும், மற்றும் தூர இடங்களில் இருந்து மாட்டு வண்டில்களில் மரமேற்றி வந்தவேளை பல சிரமங்களையும் எதிர்கொண்டதாக முன்னோர்கள் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இதன்மூலம் ஆலய வண்ணக்குமார்கள் தங்களை அர்ப்பணித்து இறைவனுக்கு தொண்டுகள் புரிந்துள்ளார்கள் என்பதை நினைத்து பெருமை கொள்கின்றேன்.

விநாயகப் பெருமானின் திருவருளும், இறையன்பர்களின் பங்களிப்பும் ஆலயத் திருப்பணிகளை மென்மேலும் மேற் கொள்வதற்குத் துணையாக அமைந்தன. அக்கால சூழ்நிலையில் பிள்ளையார் ஆலயத்திற்கு வருமானமோ, நிதி வசதிகளோ பெருமளவில் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் அவரால் ஆலயத் திருப்பணிகள் சிறப்பானவையாகவே மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஆலயத்தில் வைரவர் சந்நிதி, தீர்த்தக்குளம், ஆலயமடம், ஆலய வீதி, முற்றம் என்பவை அமைக்கப்பட்டன. ஆலயத்திற்கென சிவன், பார்வதி, விநாயகர், முருகன் என்னும் தெய்வங்களது எழுந்தருளி விக்கிரகங் கள், எருது, மயில், குதிரை வாகனங்கள் மற்றும் திருவாசிகள் என்பனவும் தருவிக்கப்பட்டன. மேலும் இவரது காலத்தில் ஆலயத்தில் மணிவசதிகள் ஏற்படுத்தப்பட்டமை முக்கியமானதோர் அம்சமாகும்.

மேலும் இவரது காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டதாகவும் இதனை சிவாச்சாரியார் களான உடுப்பட்டி ஸ்ரீ சிவசிதம்பரம் மற்றும் பழுகாமம் பரதேசிக் குருக்கள் முதலானோர் மேற்கொண்டமையும் குறிப்பிடத் தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இத்திருத்தலத்தில் வெள்ளிக் கிழமைகளில் மட்டும் இடம்பெற்று வந்த பூசை தினப்பூசையாக இடம்பெற்றமையும், திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெற்றமையும் என்றென்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானதாகும். இதற்கமைய களுதாவளையில் கணேசானந்தா வாசிகசாலை அமைவதற்கு அவரது பங்கு அளப்பரியதாகும். அதன் உருவாக்கத்திற்கு எமது கிராமத்தைச் சேர்ந்த திரு.கணபதிப்பிள்ளை (கீப்பர்), திரு.பழனித்தம்பி (திறப்புக்காரர்), பரசர் கிருஸ்ணப்பிள்ளை, பூபாலபிள்ளை (ஆக்கியோன்), ஆறுமுகச்சாமி, சி.கண்ணமுத்து போன்ற பெருந்தகையாளர்கள் பங்களிப்பை நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் சி.தன்மன்பிள்ளை வண்ணக்கரது ஒத்துழைப்பும் இக்கிராமத்தில் இராமகிருஷ்ண வித்தியாலயம் தோற்றம் பெறுவதற்கு காரணமாக அமைந்தது எனலாம். இதற்கமைய இராமகிருஷ்ண மிசன் ஆதரவுடன் 1943 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தோடு இப்பாடசாலையின் முதல் மாணவனாக அவரது மகன் திரு.தன்மன்பிள்ளை கனகசபை அவர்கள் கல்வி பயின்றமை மேலும் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. வண்ணக்கரது மகனாகிய கனகசபை அவர்கள் சிறந்த கல்விமானாகவும், மட்டக்களப்பு மாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தமைக்கு அவரது தந்தையாரின் தன்னலமற்ற சேவையும், இறைபணியுமே காரணமாக அமைந்தது எனலாம்.

இவ்வாறு எமது கிராமத்திற்கும், இச் சமூகத்திற்கும் அளப்பரிய தொண்டாற்றிய இப்பெருமகனாரின் புகழ் நூற்றாண்டைக் கடந்தும் இன்றும் சிறப்புடன் விளங்குகின்றதெனின் அவரது இணையிலாத உயர்ந்த இறைபணியேயாகும். எனவே அப்பெருமகனாரின் திருநாமம் காலமுள்ளளவும் ஞாலத்தில் நிலைபெற எல்லாம் வல்ல களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையாரை நெஞ்சாரப் பிரார்த்திக்கின்றேன்.

"வாழ்க பெருமகனார் திருநாமம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அமைதியும் நிறைந்த கௌரவ வண்ணக்கர்



**வ. கனகரெத்தினம்**
சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய
கௌரவ வண்ணக்கரும்
ஆலய பரிபாலன சபையின் பொருளாளரும்.

இயற்கை எழில் கொஞ்சும் பல வளங்கள் நிறைந்த களுதாவளைக் கிராமத்தில் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள் பிறந்தார். அமைதியும் ஆற்றலும் உடையவராகக் காணப்பட்டார். களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பெத்தாக்கிழவி குடும்பத்தின் வண்ணக்கராக நியமிக்கப்பட்டார். இல்லற வாழ்க்கையும் நல்லற வாழ்க்கையாக அமைந்தது. இறை பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டார். அவர் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் வண்ணக்கராக இருந்த காலத்தில் வண்ணக்குமார் சபையே நிருவாகம் நடாத்தி வந்தது. சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பூசைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவந்தன. ஆலயத்தில் அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்றன.

ஆலயம் காலத்துக்கு காலம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகங்களும் இடம்பெற்று இருக்கின்றன. பல வருடங்களுக்கு முன்பு ஆலயத்தின் புனருத்தாரணத்தின்போது மரங்கள் பற்றாக் குறையாக இருந்தன. அச்சந்தர்ப்பத்தில் எம் பெருமானின் அருளால் எமது கிராமத்தின் கடற்கரையில் பெரிய மரக்குற்றிகள் வந்து சேர்ந்தன. இவை கனடா அமெரிக்கா போன்ற நாட்டில் அறுத்த மரக்குற்றிகளாக இருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டது. இம் மரக்குற்றிகளால் ஆலயத்தின் புனருத்தாரணக் கட்டுமானப் பணிகள் பூரணமாக நிறைவு பெற்றன. இந்த அதிசயம் இவர் வண்ணக்கராக இருந்த வண்ணக்குமார் சபைக் காலத்திலே நடைபெற்றது. மற்றும் தீர்த்தக் கங்கை அபிவிருத்திகளும் இடம்பெற்றன.

கடந்த 1973 ஆம் ஆண்டு காலப்பகுதியில் களுதாவளை வட்டையில் சிறுபோக வேளாண்மை (காலபோகம்) செய்யப்பட்டது. அப்பொழுது வீ.ஜீ.லைபன் - 300 என்னும் நெல் அறிமுகமான காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்த ஒரு வாரத்தின் பின்பு வெள்ளம் வந்தது. வயல் வெள்ளத்தால் மூடப்பட்டுக் கிடந்தது. ஊரே சோகத்தில் மூழ்கியது. பின்பு ஒரு வாரத்தின் பின்னர் வெள்ளம் படிப்படியாக ஓடியது. வேளாண்மை அந்த முறை மிகவும் நன்றாக வந்தது. விளைச்சலும் அதிகமாக இருந்தது. கமக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் மிகப் பெரிய அன்னதான நிகழ்வையும் நடாத்தினார்கள். அன்னதானம் நடத்தப்படும் தினத்தை "பிரசித்தம்" மூலம் அறிவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


களுதாவளைக் கிராமத்தின் முக்கிய ஆலயங்களில் திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயமும் ஒன்றாக விளங்குகின்றது. அவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு ஏனைய வண்ணக்கு மாருடனும் இணைந்து வழிகாட்டினார். கல்வி மனிதனுக்கு அவசியம் அக்கல்வியை வளர்ப்பதற்காக கிராமத்து முன்னோடிகளுடனும், நலன் விரும்பிகளுடனும் இணைந்து செயற்பட்டார். களுதாவளை 3ம் குறிச்சியில் இவரது காலத்தில் "கணேசானந்தா" என்னும் வாசிகசாலையை அமைத்தனர். இது மக்களுக்கு நல்ல பயன்பாடாக இருந்தது.

களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம், களுதாவளை மகா வித்தியாலயம் அதாவது தற்போதைய தேசிய பாடசாலையாக விளங்குகின்ற பாடசாலை முதலியவற்றை எமது கிராமத்து முன்னோடிகளுடன் சேர்ந்து ஆரம்பித்தார். அன்பும், அமைதியும் நிறைந்த கௌரவ வண்ணக்கராகச் சேவை செய்தார். எனவே இப் பெரியார்களின் சேவைகளை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து இருப்பது மிகவும் அவசியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மக்கள் மனதில் நிறைந்த பெருமகனார்.



**சி. பத்மநாதன்**
போற்றிநாச்சி குடும்ப கௌரவ வண்ணக்கரும்
களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார்
ஆலய பரிபாலனசபையின் உபதலைவரும்-1

இப்புண்ணிய பூமியிலே மாந்தருள் நல்ல மனிதராகவும், புனிதராகவும், வாழ்வதென்பதும் அனைவராலும் மதிக்கப் படுவதென்பதும் பெருமைக்குரியதோர் விடயமாகும். அத்தகைய பெருமைக்கும் போற்றுதற்குரியவராகவும், நூற்றாண்டைக் கடந்தும் இன்றும் எமது மக்களால் நினைவுகூரத்தக்கவராகவும், பெத்தாக்கிழவி குடும்ப முன்னாள் கௌரவ வண்ணக்கர் திரு.சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்கள் திகழ்கின்றார் என்றால் மிகையாகாது.

களுதாவளைக் கிராமம் பழைமையும், பெருமையும் மிக்கதோர் பதியாகும். இக்கிராமத்தின் விடிவிளக்காக விளங்கியவர் திரு.சி.தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் ஆவார். இப்பெருமகன் 1907 ஆம் ஆண்டு அவதரித்தார். இவர் இளவயதிலேயே ஆன்மீக வாழ்விலும், பொதுவாழ்விலும் மிகுந்த நாட்டங் கொண்டவராக விளங்கினார் என்றும் இவை அவரது வாழ்வின் உயர்ச்சிக்கு வழியாக அமைந்தன எனலாம். ஆன்மீக வாழ்வில் பற்றுக் கொண்டிருந்த இவர் களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யும் பேறுபெற்றார். இதற்கமைய 1938 ஆம் ஆண்டு பிள்ளையார் ஆலய வண்ணக்கராக பதவியேற்று பணிபுரிந்தார். இவர் பதவி வகித்த காலம் இக்கிராமத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உன்னத காலம் என்றே கூறலாம். இவர் எமது கிராம மக்களால் மட்டுமன்றி ஏனைய மக்களாலும் மதிக்கத்தக்கவராக விளங்கினார். அவரது தோற்றப்பொலிவு, நிர்வாகத்திறன், பிறரை மதித்தொழுகும் உயரிய பண்பு என்பன அவரது தனித்துவமான அடையாளமாகும். அயற் கிராம மக்களும் களுதாவளைக் கிராமம் என்றால் தன்மன்பிள்ளை வண்ணக்கர் என்று பெயர் சொல்லும் அளவுக்கு அவர் மதிப்பும் மரியாதையும், கௌரவமும் மிக்கவராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கராகப் பணிபுரிந்த திருவாளர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் தமது சமகாலத்தில் பிள்ளையார் ஆலய வண்ணக்கராகப் பணி செய்த அனைவருடனும் ஒன்றுபட்டுச் செயற்பட்டார் என்றும் குறிப்பாக போற்றிநாச்சி குடும்ப வண்ணக்கர் என்று அழைக்கப்படும் திரு.சி.வ.செல்லப்பிள்ளை அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தமை பற்றியும் அறியக் கூடியதாகவுள்ளது. இக்காலகட்டத்தில் பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்டது. இதன்போது அனைத்து வண்ணக்குமாரும் ஆலயத் திருப்பணிகளில் தமது பங்களிப்பை நல்கினர்.

பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கர் அவர்கள் சிரேஷ்ட வண்ணக்கராக பணிபுரிந்த அதேவேளை போற்றிநாச்சி குடும்ப வண்ணக்கர் அவர்கள் பிள்ளையார் ஆலயத்திற்கு நேத்திக்கடனாக வருகின்ற ஆடுகள், மாடுகள் மற்றும் பொருட்கள் என்பவற்றை கைமாறிக் கொடுப்பவராகவும், கல்லடிப்பிள்ளையார் ஆலய காணிக்கை உண்டியலை பராமரிப்பவராகவும் இறைபணி புரிந்துள்ளமை எமது கிராம மக்களது ஒற்றுமைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இவைபோன்று பிள்ளையார் ஆலய வண்ணக்குமார்கள் அனைவரும் இறைபணியில் ஒன்றிணைந்து செயற்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. இதனோடு ஆலயத்தில் இடம்பெற்ற பூசைகள், விழாக்கள், உற்சவங்கள் என்பவற்றிலும் ஒருமித்த கருத்தினை கொண்டவர்களாக பங்கேற்றிருந்தனர் எனவும், நட்பு ரீதியாகவும், உறவு முறையிலும் பழகிக் கொள்வதும், சுகதுக்கங்களில் பகிர்ந்து கொள்ளுதலும் அவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமைக்கு சான்றாகும். முக்கியமாக பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கர் தெரிவின்போது போற்றிநாச்சி குடும்ப வண்ணக்கர் பக்கபலமாக நின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியவர் திரு. சி. தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் ஆவார். இவரது காலத்தில் ஆலயத்தில் பல்வேறு புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1945 ஆம் ஆண்டு ஆலய ஸ்தம்பமண்டபம் புனரமைக்கப்பட்டது. இதற்கான மரங்களைப் பெறுவதற்கு பல்வேறு இடர்பாடுகளையும், சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததென்பதை அறியக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனோடு ஆலயத்தின் முகடு, சுவர்கள் என்பன புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறவும் ஏற்பாடுகளை மேற்கொண்டனர் என்றும் மேலும் ஆலய மடம், வசந்தமண்டபம், தீர்த்தக்குளம், வைரவர் சந்நிதி என்பவை அமைக்கப்பட்டதுடன் ஆலய வீதிகளும் விஸ்தரிக்கப்பட்டன. ஆலயத்திற்கென மின்னிணைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. மேலும் ஆலயத்திற்கென எருது வாகனம், இரட்டைக் குதிரை வாகனம், திருவாசிகள், சிவன் பார்வதி, விநாயகர், முருகன் என்போரது உற்சவ கால எழுந்தருளி மூர்த்தங்கள் என்பனவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இக்காலகட்டத்தில் ஆலயத்திற்கான வாகனங்களை பெற்றுத்தருவதற்கும் இறைபணியிலே பங்குகொண்டு ஒத்துழைப்பினை நல்கவும் திரு.க.பொன்னையா சுவாமிகள் மற்றும் எமது கிராமத்து இறையன்பர்கள் என்போரும் உதவிபுரிந்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இதனோடு பிள்ளையார் ஆலயத்தில் 1956 ஆம் ஆண்டு முதன்முதலாக திருவிழாவும் இடம்பெற்றது முக்கியமானதோர் நிகழ்வாகும். இவ்வாறு பல திருப்பணிகள் அவரது காலத்தில் இடம்பெற்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

பொதுச்சேவைகளிலும் அர்ப்பணிப்போடு செயற்பட்ட பெருமைக்குரியவராகவும் அவரைக் காண்கின்றோம். அக்கால சூழ்நிலையில் எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் முன்னின்று பங்காற்றினார். அந்நியராதிக்கம் பரவியிருந்த அக்காலகட்டத்தில் சைவப் பாடசாலை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் எமது கிராமத்து முன்னோடிகளதும், பெரியோர்களதும் பங்கு பற்றுதலுடன் 1943 ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிசன் வித்தியாலயம் அமைக்கப்பட்டது. இவ்வகையில் அவரது பங்களிப்பு நினைவிற் கொள்ளத்தக்கதாகும். இவற்றோடு எமது கிராமத்தில் முதன்முதலாக வாசிகசாலை அமைவதற்கும் வித்திட்ட பெருமை இவரைச்சாரும். இவ்வுயரிய பணிக்கு இக்கிராமத்து முன்னோர்களும் கிராம முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட பல பெரியோர்களும் தமது பங்களிப்பினை நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் தோற்றம் பெற்றதே கணேசானந்தா வாசிகசாலையாகும். இதன்மூலம் எமது கிராம மக்கள் பயன்பெறக் கூடியதாக அமைந்தது. இதனோடு இக் காலகட்டத்தில் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றிருந்த காலம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தை ஸ்தாபித்தவர் திரு.கதிரேசர் சின்னத்தம்பி சுவாமிகள் ஆவார். இச் சுவாமிகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார் என்பதும் அவரோடு இணைந்து சமய, சமூகப் பணிகள் ஆற்றியவராக இவரைக் காண்கின்றோம்.


பெற்றோர்கள் ஆற்றுகின்ற தர்மங்களும், நற்செயல்களும் பிள்ளைகளையும் சாரும் என்பது போன்று அவரது மக்களும் கல்வியில் சிறந்தவர்களாகவும் மற்றவர்களால் மதிக்கத்தக்கவர்களாவும் விளங்குகின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது. அவரது மூத்தமகன் திரு.த.கனகசபை அவர்கள் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் முதல் மாணவன் என்ற பெருமைக்குரியவர் என்பதும் விவசாய ஆராய்ச்சி விரிவாக்கம் தொடர்பாக எமது பிரதேசத்தை பிரதிபலித்து அமெரிக்கா சென்றமையும் மட்டக்களப்பு மாவட்டத்தின் முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்கியமையும் நாம் பெருமைப் படத்தக்கவையாகும். மற்றும் அவரது மக்கள் உயர்ந்த நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய உயர்வுக்கும் சிறப்புக்கும் காரணம், அவர்களது தந்தையாரின் நெறிப்படுத்தலும் வழிகாட்டலுமே என்றால் மிகையாகாது.

இத்தகைய பெருமைக்குரிய பெருமகனார் எமது கிராம மக்களால் என்றென்றும் போற்றுதற்குரியவராகவும் விளங்குவார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அவரது திருநாமமும் இறைபணியும் ஞாலமுள்ளளவும் நிலைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக ஆளுமையுள்ள கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள்



**க. நாராயணபிள்ளை** (அரி ஓம்)
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய
கௌரவ வண்ணக்கரும்
உப செயலாளரும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச் சிறப்புக்களுடன் விளங்கும் தொன்மை மிகு சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் அமைந்திருக்கும் களுதாவளைக் கிராமம் பழம்பெரும் பதி என்றால் அது மிகையாகாது. இங்கு பல வரலாற்றுச் சிறப்புக்கள் இருக்கின்றன. களுதாவளைக் கிராமம் முன்பு இப்பகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிராமமாகத் திகழ்ந்திருக்கின்றது. கடந்த 1944 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் வன்னிமைமார்கள் பலர் இங்கிருந்துதான் ஆட்சி செய்து வந்து இருக்கின்றார்கள். இவர்கள் சிற்றரசர்கள் போன்று யானை வண்டி, குதிரை வண்டி முதலியனவற்றை வைத்துக் கொண்டு ஆட்சி செய்து இருக்கின்றார் கள். இவர்களில் பொன்னுச்சாமி வன்னியனார், சங்கரப்பிள்ளை வன்னியனார் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அதிலும் பொன்னுச்சாமி வன்னியனார் காலம் பொற்காலம் என்றால் அது மிகையாகாது. வன்னியனார் முந்நிலையில்தான் தொன்மை மிக்க களுதாவளை கொம்புச்சந்தி அம்மன் ஆலயத்தில் போர்த்தேங்காய் அடித்தல், கொம்புமுறி விளையாட்டு ஆடுதல், கொம்புத்தட்டு எடுத்தல், வடசேரி தென்சேரி தேர் இழுத்தல், சடங்கு வைத்தல், குளிர்த்தில் ஆடுதல் முதலிய கலை கலாசார பக்தி நிகழ்வுகள் இடம்பெற்று இருக்கின்றன. சுமார் ஒரு மாத காலம் இந்த நிகழ்வுகளால் களுதாவளைக் கிராமம் விழாக்கோலம் பூண்டிருக்கும். களுதாவளையில் பண்டுதொட்டு இருந்து வந்த வன்னிமையின் காரியாலயம் 1946ஆம் ஆண்டுக்குப் பின்பு பட்டிருப்புக்கு மாற்றப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது.

இந்த வன்னிமை முறை 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் பிரிவுக் காரியதிகாரி அதாவது டீ.ஆர்.ஓ. என்றும் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி அரசாங்க அதிபர் என்றும் தற்போது பிரதேச செயலாளர் என்றும் நியமிக்கப்பட்டனர். களுதாவளைக் கிராமத்தில் வன்னிமைமார் இருந்த இடம் வன்னியார் வீதி என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. வரலாற்றுப் புகழ்மிக்க களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் இக்கிராமத்து ஆறுகுடி மக்களாலும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. பெத்தாக்கிழவி குடும்பம், பேனாச்சி குடும்பம், சுரக்கா மூர்த்தி குடும்பம், போற்றிநாச்சி குடும்பம், செட்டிகுடும்பம், வள்ளிநாயகி குடும்பம் என்னும் ஆறு குடும்பங்களாகும். ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு வண்ணக்கர் நியமிக்கப்படுவர். வண்ணக்கருக்கு உதவியாக ஒவ்வொரு கடுக்கண்டவர் நியமிக்கப்படுவார். அதன் அடிப்படையில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் பெத்தாக்கிழவி குடும்பத்துக்கு கடந்த 1938 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வண்ணக்கராக சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டார். இப்பதவி குடும்பத்தின் மரியாதைக்குரிய பதவி என்பதால் கௌரவ வண்ணக்கராக மதிக்கப்பட்டார்.

கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களின் தோற்றப் பொலிவு சிறப்பானது. ஒரு சித்தரைப் போன்ற தோற்றம், சித்தர் என்றால் அறிவு நிரம்பப்பெற்றவர் எனப் பொருள்படும். வெள்ளை வேட்டி, சால்வை அணிந்து இருப்பார். அழகான தாடி அமைதியான முகம் சுறுசுறுப்பான நடை இவை அவரின் அணிகலன்களாகும்.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் ஆறு வண்ணக்குமார் அடங்கிய வண்ணக்குமார் சபையே முன்பு இயங்கி வந்தது. இறைபதம் அடைந்த கௌரவ வண்ணக்கர் சி.தன்மன் பிள்ளை அவர்கள் ஏனைய வண்ணக்குமார்களாலும், பொது மக்களாலும் சிரேஸ்ட கௌரவ வண்ணக்கராக மதிக்கப்பெற்றார். களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு பரிபாலன சபையாப்பு உருவாக்கப்பட்டு அந்த யாப்பு 10.06.1994 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதில் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர் - 1, உபசெயலாளர், உபதலைவர் - 2, ஆறு வண்ணக்குமார், திறப்புக்காரர், உறுப்பினர்கள் என 19 பேர் உள்ளடக்கிய பரிபாலனசபையாக அது விளங்குகின்றது. வண்ணக்குமார் சபையாலும், பரிபாலன சபையாலும் எமது கிராமத்தில் ஆலயப் பணி, சமூகப் பணி, கல்விப்பணி முதலியன முன்னெடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆலயத்துக்கு மின்சாரம் பெறப்பட்டது 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்து சமய கலாசார அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களின் உதவியுடன் ஆலயத்துக்கு தீர்த்தக் கங்கை அமைக்கப்பட்டது. ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் மருத மரங்கள் நடப்பட்டன. வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டன. களஞ்சியறை கொண்ட மடங்கள் கட்டப்பட்டன. பல அபிவிருத்திப் பணிகள் நடை பெற்றன. மேலும் பாடசாலை அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டன.

களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் ஆரம்பத்தில் கிடுகினால் கட்டப்பட்ட கோயிலாக இருந்தது. சின்னத்தம்பி சுவாமிகள் அக்கோயிலைப் பராமரித்து வந்தார். எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலில் அக் கோயில் அமைந்திருந்தது. காட்டுச் சூழலில் இருந்தமையால் மக்களால் காட்டுக்கோயில் என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டது. சித்தர்களும், ஞானிகளும் இறை வழிபாட்டுக்கு ஒன்று கூடுவார்கள். மூலஸ்தானத்தில் வைத்து வழிபட முருகப் பெருமானின் விக்கிரகம் ஒன்று தேவைப்பட்டது. சிவம் பண்ணப்பட்ட விக்கிரமாக இருந்தால் நன்றாக இருக்கும் என சின்னத்தம்பி சுவாமிகள் எண்ணினார்.

கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களும் கிராமத்து முன்னோடிகளும் சேர்ந்து "கணேசானந்தா" என்ற வாசிகசாலை ஒன்றை களுதாவளை - 3 ஆம் குறிச்சியில் அமைத்து இருந்தனர். இந்தச் சம்பவம் கடந்த 1938 ஆம் ஆண்டு காலப்பகுதியாகும். களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு முருகப் பெருமானின் விக்கிரகம் ஒன்று அவசியம் தேவை என சின்னத்தம்பி சுவாமிகள் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களிடமும் "கணேசானந்தா வாசிகசாலை" உறுப்பினர்களிடமும் கூறினார். அப்பொழுது களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பிரதம குருவாக இருந்து பூசை செய்துவந்த களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சிவஸ்ரீ குழந்தைவேல் குருக்கள் ஐயா கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர் ஆலயத்திலும் குருக்களாக பூசை செய்து வந்தார். அவரிடமும் இந்தச் செய்தி கூறப்பட்டது. அவர் சொன்னார் கொக்கட்டிச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் ஆலயத்திலும் மேலதிகமான விக்கிரகங்கள் சிவம் பண்ணப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அங்குள்ள நிருவாகத்துடன் தொடர்புகொண்டு அவர்களின் சம்மதத்துடன் விக்கிரகம் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறினார். விருப்பமானால் அந்தத் தொடர்புகளை ஏற்படுத்தித் தருகின்றேன் என்றார். இவர்களும் அவரது கருத்தை ஏற்றுக்கொண்டனர். சிவஸ்ரீ குழந்தைவேல் குருக்கள் ஐயா இரண்டு நிருவாகங்களுக்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார். கொக்கட்டிச்சோலை நிருவாகத்தின் சம்மதத்துடன் எமது நிருவாகத்தின் அதாவது "கணேசானந்தா வாசிகசாலை" உறுப்பினர் களுடன் கௌரவ வண்ணக்கர் சி. தன்மன்பிள்ளை அவர்கள் தலைமைதாங்கி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குப் பூசைப் பொருட்களுடன் சென்றனர். கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் நிருவாகமும் சிவஸ்ரீ குழந்தைவேல் குருக்கள் ஐயாவும் இணைந்து மடைப் பெட்டிக்குள் "ஐம்பொன்னால்" செய்யப்பட்ட முருகன் விக்கிரகத்தை பக்குவமாக வைத்து வழியனுப்பி வைத்தனர். கிடுகினால் கட்டப்பட்ட முருகன் ஆலயத்தில் அந்த ஐம்பொன் முருகன் விக்கிரகத்தை மூலஸ்தானத்தில் வைத்து வழிபட்டு வந்தனர். முருகப் பெருமானின் அருளாட்சியும் நிறைந்து காணப்பட்டது.

## களுதாவளை கணேசானந்தா வாசிகசாலை:

"கணேசானந்தா" வாசிகசாலை அமைத்து வழிநடத்தியவர் களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள், சின்னத்தம்பி கண்ணமுத்து ( களுதாவளை இராம கிருஷ்ண வித்தியாலய தலைமை ஆசிரியரும் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கரும்), சின்னத்தம்பி தம்பியப்பா விதானையார் அவர்கள். முருகப்பர் பழனித்தம்பி (களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய திறப்புக்காரர் அவர்கள்), சின்னத்தம்பி கிருஸ்ணப்பிள்ளை (களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கர் அவர்கள்), சின்னத்தம்மி இராசையா (களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கரும் சித்த வைத்தியரும்), தம்பிமுத்து நாகலிங்கம் (புதுமுன்மாரிச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டத்து வட்டை விதானையார்), தம்பிமுத்து கணபதிப்பிள்ளை (விஷ வைத்தியரும் புதுமுன்மாரிச்சோலை வட்டை விதானையாரும் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய கௌரவ வண்ணக்கரும்), குருநாதபிள்ளை சின்னத்தம்பி ( ஸ்ரோர்க் கீப்பர் எனச் சிறப்பாக அழைக்கப்பட்டவர்). குருநாதபிள்ளை முருகேசு அவர்கள், கதிரேசர் கந்தப்பர் அவர்கள் (யானை வண்டிக்காரர் என்றும் சிறப்பாக அழைப்பர்), கதிரேசர் சின்னத்தம்பி சுவாமி அவர்கள் (களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய ஸ்தாபகர்) சின்னத்தம்பி பூபாலபிள்ளை அவர்கள் (ஆக்கியோன் எனச் சிறப்பாக அழைக்கப்படுபவர்), முருகப்பர் ஆறுமுகம் அவர்கள், பரசுராமர் கிஸ்ணபிள்ளை அவர்கள், அமரரின் மைத்துனர்களான கந்தப்பர் சின்னத்தம்பி, கந்தப்பர் கனகரெத்தினம் ஆகியோருடன், கணபதிபிள்ளை பூபாலபிள்ளை அவர்கள், வதனக்குட்டி வயிரமுத்து முதலானோர் "கணேசானந்தா" என்னும் பெயருடைய வாசிகசாலையை அமைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் ஆகம விதியுடன் கூடிய கற்கோயிலாகக் கட்டப்பட்டு முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் அமையப் பெற்று கல்விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. ஐம்பொன் முருகப் பெருமானின் விக்கிரகமும் மூலஸ்தானத்தில் தற்பொழுதும் வழிபாட்டுக்காக இருக்கின்றது. மேலும் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்தில் சக்தி வழிபாடாக வீரம்மாகாளியம்மன் ஆலயமும் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். தொன்மையான ஆலயங்களுள் களுதாவளை-4 மண்டபத்துக்காடு வதனமார் பொல்லுக்காரன் பந்தல் ஆலயமும் கல்லடிப்பிள்ளையார் ஆலயமும் சிறப்புப்பெற்றுள்ளன. மேலும் நாகதம்பிரான் வழிபாட்டிற்கு வட்டிக்குளக்கட்டு அத்தியடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், தாழையடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், பனங்காடு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம், ஈஸ்வரன் ஆலயம் எனப் பல ஆலயங்கள் இருக்கின்றன. இவை பழமைச் சிறப்பு வாய்ந்தவை மேலும் கிறிஸ்தவ மெதடிஸ்த தேவாலயமும் இருக்கின்றது.

களுதாவளை 3 ஆம் குறிச்சிப் பகுதியில் பாடசாலை ஒன்று இருந்தது. அப்பாடசாலையில் ஆங்கிலக் கல்விக்கு முன்னுரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது. மாணவர் தங்கிப் படிக்கக்கூடிய விடுதி வசதிகளும் இருந்தன. தூரப் பிரதேசங்களில் இருந்து மாணவர்கள் வந்து விடுதியில் இருந்து தங்கிப் படித்தனர். ஆகையினால் இந்த வீதி பள்ளியார் வீதி என்றும் அழைக்கப்படுகின்றது. சைவப் பாடசாலை ஒன்று தேவை என்று கிராமத்துப் பெரியோர்களும் நலன் விரும்பிகளும் யோசித்தார்கள். கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களும் ஊரின் நலன் விரும்பிகளும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களின் முயற்சியின் பயனால் களுதாவளை தொன்மைமிகு கொம்புச் சந்தி அம்மன் ஆலயத்தின் அருகில் 1943 ஆம் ஆண்டு இராம கிருஷ்ண வித்தியாலயம் அமைக்கப்பட்டது. மாணவர்கள் பலர் அங்கு கல்வி கற்று பயன் அடைந்தனர்.

பின்பு பள்ளியார் வீதியில் இருந்த பாடசாலை களுதாவளை முதலாம் குறிச்சிக்கு இடமாற்றப்பட்டு மகா வித்தியாலயமாகத் திகழ்கின்றது. மேலும் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களிடம் பல திறமைகள் காணப்பட்டன. நீர் வெற்றிலைச் செய்கையில் நல்ல அனுபவம் பெற்று இருந்தார். நெற்செய்கையிலும் சிறந்த விவசாயியாக விளங்கினார். மேலும் சிறந்த ஆன்மீக வாதியாகவும் திகழ்ந்தார். களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் முன்பாக உள்ள நிலப்பரப்பை துரையின் காடு என்று அழைப்பர். இத்துரையின் காட்டுப் பகுதியில் அவருக்கும் அவரது உறவினர்களுக்கும் வெற்றிலைத் தோட்டங்கள் இருந்தன. களுதாவளை வட்டையில் அவருக்கு வயலும் இருந்தது. களுதாவளை திருநீற்றுக் கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்தின் பின்னால் உள்ள நிலப்பரப்பை "பருத்திச் சேனை" என்றும் அழைப்பர்.

களுதாவளை வட்டிக்குளக்கட்டு அத்தியடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் பழமையும் அருளாட்சியும் உள்ள தலமாகும். இவ்வால யத்துக்கு அனுசரணை வழங்கும் கடப்பாடு வண்ணக்குமார் சபைக்கும் உண்டு.அதனைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட பரிபாலன சபைக்கும் உண்டு. அதனடிப்படையில் இவ்வாலயத்தை களுதாவளை உதயதாரகை இந்துமன்றம் மிகவும் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆன்மீகம் என்பது சகல உயிர்களிடத்திலும் அன்புகாட்டுதல் அல்லது சகல உயிர்களையும் இறைவனுடைய குழந்தையாக ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதாகும். அந்த வகையில் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன் பிள்ளை அவர்கள் சாதி, மத பேதங்கள் பாராத ஒரு சிறந்த ஆன்மீக வாதியாகத் திகழ்ந்தார். ஆளுமை என்பது அடக்கு முறையால் வருவது அல்ல. எல்லோரையும் அன்பால் அரவணைப்பதே சிறந்த ஆளுமையாகும். இறைபதம் அடைந்த கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள் எல்லோரையும் அன்பால் அரவணைத்து ஆளுமை உடையவராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ 44 வருடங்கள் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு கௌரவ வண்ணக்கராக இறைபணி புரிந்தார். சுய விருப்பத்தின் பேரில் வண்ணக்கர் பதவியிலிருந்து விலகி அன்புடன் குடும்ப மக்களின் அனுசரணையுடன் கௌரவ வண்ணக்கர் பதவியை இ.வேலுப் பிள்ளை அவர்களுக்கு வழங்கி ஒரு மனித நேயமுள்ளவராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களது குடும்பம் கல்விச் சிறப்பில் சிறந்து விளங்கியது என்றால் அது மிகையாகாது. மூத்தமகன் திரு.த.கனகசபை அவர்கள் விவசாயப் போதனாசிரியராகப் பதவி வகித்து பதவி உயர்வு பெற்று மாவட்ட விவசாயப் பணிப்பாளராகத் திகழ்ந்தார். களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் கௌரவ வண்ணக்கராகச் சில வருடங்கள் சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக விளங்கினார். இளையமகன் திரு. த.சுந்தரலிங்கம் அவர்களும், திரு. த.அருள்மாணிக்கம் அவர்களும் வித்தியாலய அதிபர்களாக விளங்கி சிறந்த கல்விப் பணி புரிந்தார்கள். இரண்டு மகள்மார்கள் சிறந்த ஆசிரியைகளாகவும் திகழ்ந்தார்கள். மேலும் மகள்மார்கள் சிறந்த இல்லத்தரசிகளாகவும் விளங்குகின்றனர். மருமக்கள் பேரப்பிள்ளைகள் எனப் பலரும் கல்வியில் சிறந்து விளங்கி சேவையாற்றி வருகின்றனர். எனவே இவை அவரது தொண்டுக்கு இறைவன் கொடுத்த வரமாகும்.

மேலும் சில வரலாற்றுக் குறிப்புகளைக் கூறுவது பொருத்த மாகும். களுதாவளையில் உள்ள ம.தெ.எ.பற்று பிரதேச சபைக்கான அரை ஏக்கர் நிலத்தை இறைபதம் அடைந்த சி.தம்பியப்பா விதானையார் அவர்கள் கடந்த 1949 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கி இருந்தார்கள். இன்று பிரதேச சபைக் கட்டடம் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிராமச் சபை அதாவது ம.தெ.எ.பற்று பிரதேச சபைக்கான எமது கிராமத்தின் இரண்டு அங்கத்தவர்கள் போட்டி இன்றி ஏகமனதாக கிராம மக்களின் ஒற்றுமையுடன் தெரிவுசெய்யப்பட்டனர். களுதாவளை 1ம், 2ம் குறிச்சிக்கு இறைபதம் அடைந்த சி.கந்தவனம் அவர்களும், களுதாவளை 3ம், 4ம் குறிச்சிக்கு இறைபதமடைந்த த.வேதநாயகம் அவர்களும் ஏகமனதாக அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ம.தெ.எ.பற்று பிரதேச சபையின் தலைவராக இறைபதம் அடைந்த த.வேதநாயகம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். சுமார் 7 வருடங்கள் தலைவராகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய காலத்தில் 1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் களுதாவளை 1 ஆம் குறிச்சியில் பொதுநூலகம் அமைக்கப்பட்டது. அதற்கான காணி வாங்குவதற்கு அந்தக்காலம் எமது கிராமத்து நலன்விரும்பிகள் எமது ஊரில் வீடு வீடாகச் சென்று நிதி நன்கொடையாகப் பெற்றனர். நூல் நிலையம் இன்று மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றது. நூல் நிலையத்துக்கான காணியை ம.தெ.எ.பற்று களுதாவளை கிராமசபை அங்கத்தவர் திரு.சி.கந்தவனம் அவர்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது கிராமத்து மக்கள் விளையாட்டில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று சாதனை படைத்தனர். அதன் காரணமாக 1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ம.தெ.எ.பற்று பிரதேச சபையின் அனுசரணையுடன் பிரதேச சபைத்தலைவர் இறைபதம் அடைந்த த.வேதநாயகம் அவர்களின் காலத்தில் அப்போதைய விளையாட் டுத்துறை அமைச்சர் கே.பி.இரத்தினாயக்கா அவர்களின் உதவியுடன் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. இது இப்பிரதேசத்தின் பொது விளையாட்டு மைதானமாகவும் விளங்குகின்றது.

களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலம் இறைபதம் அடைந்த பொன்னையா சுவாமி அவர்களால் பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. வசதி குறைந்த மாணவர்கள் நல்ல பயன் அடைந்து வருகின்றனர்.

கிராமத்தின் முன்னேற்றம் கருதி களுதாவளை கொம்புச் சந்தி அம்மன் ஆலயத்தின் காணிகள் நன்கொடையாக வழங்கப் பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண வித்தியாலயத்துக்கு காணி நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கின்றது. நெசவு நிலையத்துக்கு காணி நன்கொடையாக வழங்கப்பட்டிருக்கின்றது. விவசாய உற்பத்தியாளர் சங்கத்துக்கும் காணி நன்கொடையாக வழங்கப் பட்டிருக்கின்றது. பால் பண்ணைக்கும் காணி நன்கொடையாக வழங்கப் பட்டிருக்கின்றது. அத்துடன் பிள்ளையார் ஆலயத்திற்கு திரு. க. அருட்பிரகாசம், திரு.இ.கந்தவனம் அவர்களின் பிள்ளைகள், திரு.இ.துரைராசா ஆகியோர் விலைக்கு வயற்காணி வழங்கினார்கள். திரு.மு.சின்னராசா அவர்கள் வளவுக்காணியை விலைக்கு வழங்கினார். திரு.க.இரத்தினசிங்கம் குடும்பத்தினர் விலைக்கு வளவுக் காணி வழங்கினர். திரு.க.சோமசுந்தரம் வண்ணக்கர் அவர்களும் திரு.அமரசிங்கம் பகீரதன் அவர்களும் நெற்காணி நற்கொடையாக வழங்கினர். களுதாவளை கலாசார மண்டபத்திற்கு திரு.க.கோபாலபிள்ளை சகோதரர்கள் காணி நன்கொடையாக வழங்கினார்கள். திரு.ஐயாத்துரை சுகிர்தா அவர்கள் தனது நெற் காணியை பிள்ளையார் ஆலயத்துக்கு வழங்கி அதற்குப் பதிலாக கோயில் காணியை எடுத்துக் கொண்டார்கள். இன்னும் பலர் இறை அர்ப்பணமாக இறைபணியில் ஈடுபட்டனர். திரு.மூத்தான்குட்டி சுந்தரப்பிள்ளை என்பவர் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு அரை ஏக்கர் மேட்டு நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1961 ஆம் ஆண்டு சின்னத்தம்பி சுவாமி அவர்கள் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்தையும், வளவுக்காணி ஆதனங்களையும், உபகரணங்களையும் ஆறு குடும்ப மக்களிடம் ஒற்றுமையாகச் செயல்படுமாறு கூறி தர்ம சாசனமாகக் கையளித்தார்.இவ்வாலயக் காணியில் அரை ஏக்கர் நிலம் விபுலானந்தா வித்தியாலத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. களுதாவளை விவேகானந்தா வித்தியாலயத்துக்கு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கர் இ.சீனித்தம்பி அவர்கள் நன்கொடையாக காணி வழங்கியுள்ளார்.களுதாவளை விபுலானந்தா கல்வி நிலையத்திற்கு அமரர். சீ.கிருஷ்ணன் ஆசிரியர் அவர்கள் காணியை நன்கொடையாக வழங்கி உள்ளார். இவர்களுடைய சேவை கல்விப்பயன்பாட்டுக்கு பெரிதும் உதவுகின்றது. களுதாவளை விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கௌரவ வண்ணக்கர் சீ.இராசலிங்கம் அவர்கள் காணி வழங்கியுள்ளார். களுதாவளை புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை வித்தியாலயத்துக்கு ஓய்வு பெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் திரு.ப.சிவலிங்கம் அவர்களும், ஓய்வு நிலையில் இருந்து அமரத்துவம் அடைந்த கிராம சேவையாளர் கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை குடும்பத்தினரும் காணி நிலம் வழங்கியுள்ளார்கள் என்பதுடன் இவர்கள் இக் காணிகளை நியாய விலைக்கு வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் களுதாவளையின் தெற்கு எல்லையில் திரு.ச.தவராசா அவர்களிடமிருந்து ஒரு காணித்துண்டு களுதாவளை பிள்ளையார் ஆலயத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் களுதாவளைக் கிராமத்தில் பொருளாதார மத்திய நிலையம், சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்லும் வீதிக்கு நவீன காப்பட் ரோட் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலை, சந்தை, ஒன்றுகூடல் மண்டபம், கலாசார மண்டபம், 7 பாடசாலைகளும் உள்ளன.வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை குடும்பத்தினர் வைத்தியசாலைக்கு நிலம் வழங்கினார்கள். பூநாச்சி என்பவர் பிள்ளையார் ஆலயத்துக்கு நிலம் நன்கொடையாக வழங்கினார். அதில் பாலர் பாடசாலை இயங்குகிறது. களுதாவளைக் கிராமம் பல வருடங்களுக்கு முன்பு நாட்டுக்கூத்தில் பெயர் பெற்ற கிராமமாகும். வில்வளைப்பு, தரும புத்திர நாடகம், இராம நாடகம், சராசந்தன்போர் நாடகம், வசந்தன்கூத்து, மேடை நாடகம் எனப் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று இருக்கின்றன. இவை களுதாவளை கொம்புச் சந்தி அம்மன் ஆலயத்தின் முன்னால் உள்ள மண் பிட்டியில் இடம்பெற்று இருக்கின்றன. மக்கள் பார்ப்பதற்கு அலை அலையாக வருவார்கள்.

## தனயனின் சமூகப் பணிகள்:

கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வர் திரு. த.கனகசபை அவர்கள் ஊரின் முன்னேற்றத்திற்காகவும் இப்பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர். அவர் இளைஞனாக இருந்த வேளையில் எமது கிராமத்தில் பொதுநூலகம் அமைப்பதிலும் விளையாட்டு மைதானம் அமைப்பதிலும் எமது கிராமத்து முன்னோடிகளுடன் இணைந்து செயற்பட்டு அப்பணிகளை நிறைவேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுதாவளை மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்பு வைக்க வேண்டும் என அக்கறை கொண்டு கிராமத்தின் சில பெரியார்களுடன் இணைந்து கடந்த 1972 ம் ஆண்டு காலப் பகுதியில்கொழும்பு வரை சென்று அப்போதைய கல்வி மந்திரி பதியுதீன் முகம்மத்திடம் இருந்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு வந்தார். அதனால் பல பட்டதாரிகள் உருவாகிக் கொண்டு வருகின்றனர். கிராமத்தின் நன்மை கருதி மது ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலம் அமைப்பதில் பொன்னையா சுவாமிகளோடும் எமது கிராமத்து முன்னோடி களுடனும் இணைந்து செயல்பட்டார்.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்குச் செல்லுகின்ற வீதிக்கு எமது கிராமத்தின் பெரியோர்களுடனும் நலன் விரும்பிகளுடனும் இணைந்து மருத மரங்கள் நட்டார்.இது இன்று அழகாகவும் குளு குளு சோலையாகவும் இருக்கின்றது.

களுதாவளை வயலுக்கு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் அமைப்பதில் கமக்காரர்களுடன் இணைந்து செயல்பட்டார். அவர் அமெரிக்காவிற்கு புலமைப்பரிசில் பெற்று விவசாயத் திட்டங்களை அறிவதற்கு அங்கு சென்றார். அதனால் அவரிடம் அமெரிக்காவின் சில விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

பின்பு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இப் பிரதேசத்துக்கு இயன்றளவு சேவை செய்துள்ளார். களுதாவளைக் கிராமத்தைப் பொறுத்தவரை தான் பிறந்த மண் என்ற வகையில் தன்னால் முடிந்த சேவைகளை வழங்கியுள்ளார்.

களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயப் பகுதிக்கு மின்சார பாவனையை அதிகரிக்கும் நோக்குடன் மின்மாற்றி அமைத்துக் கொடுத்தார். வட்டிக் குளக்கட்டு அத்தியடி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்துக்கு இவரின் சேவையால் மின்சாரம் கிடைத்தது.

களுதாவளை உபதபாற்கந்தோரைத் தரம் உயர்த்தியுள்ளார். களுதாவளை பொதுநூலகத்தின் நவீன கட்டடத்துக்கு இவரது பங்களிப்பு முக்கியமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ம.தெ.எ.பற்று பிரதேச சபைக்கும் நவீன கட்டடத்துக்கும் இவரின் சேவை அளப்பரியதாகவுள்ளது. களுதாவளைக் கிராமத்தின் பாடசாலைகளுக்கும் பல சேவைகளைப் புரிந்துள்ளார். தான் ஒரு விவசாயத் துறையைச் சார்ந்தவர் என்ற ரீதியில் விவசாயிகளுக்கு சிறந்த ஆலோசனைகளையும் வழங்கியும் வருகின்றார். மேலும் எல்லோரிடமும் அன்பாகவும், பண்பாகவும், எளிமையாகவும் பழுகுகின்ற சிறந்த குண இயல்பு அவருடைய மிகப் பெரிய தனிச் சிறப்பாகும்.

எனவே வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்துவதால் எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்வர். இதனால் நல்ல பிரஜைகள் பலர் உருவாகி சமுதாயம் வளம்பெறும் என்பது எனது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணியில் மாமனிதராக விளங்கிய கௌரவ வண்ணக்கர் சி.வ.தன்மன்பிள்ளை அவர்கள்



**இ. சசிகரன்**
சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய
கௌரவ வண்ணக்கரும்
பரிபாலன சபையின் உப தலைவரும் - 2.

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாநகரின் தென்பகுதியில் சுமார் 22 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இயற்கை எழில் கொஞ்சும் பழம்பெரும் பதியாக களுதாவளை அமைந்துள்ளது. இக்கிராமம் பல வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஒரு காலத்தில் வன்னிமைமார்கள் இங்கிருந்து கொண்டு இப் பிரதேசத்தை ஆட்சிசெய்து இருக்கின்றார்கள். வன்னிமைமார்கள் சிற்றரசர்களைப் போன்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயங் களும் வித்தியாலயங்களும் ஒரு கிராமத்தின் இரண்டு கண்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதன் அடிப்படையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களும் கல்வியை வளர்க்கின்ற வித்தியாலயங் களும் களுதாவளையில் இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் பல பெரியார்களும் இங்கு வாழ்ந்து சாதனைகள் படைத்துள்ளார்கள்.

அந்த வகையில் இறைபதம் அடைந்த கௌரவ வண்ணக்கர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவராக இருந்துள்ளார். அமரர் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பெத்தாக்கிழவி குடும்பத்தின் சார்பில் வண்ணக்கராக மிக நீண்டகாலம் சேவையாற்றி இருக்கின்றார். அவர் தன்னை இறைபணிக்கு மிகவும் சிறப்பாக ஈடுபடுத்தி இருக்கின்றார் என்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. ஒரு சிரேஷ்ட வண்ணக்கராகச் செயற்பட்டு இருக்கின்றார் என்பதையும் அறிய முடிகின்றது. ஏனைய கௌரவ வண்ணக்கு மார்களுடனும், ஒற்றுமையுடனும் செயற்பட்டு இருக்கின்றார். ஒவ்வொரு குடும்பங்களின் திருவிழாக்கள், பூசைகள் முதலியவற்றிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி சிறப்பித்து இருக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு கூடுதலான காலம் நடந்து சென்றே இறைபணியை மேற்கொண்டு இருக்கின்றார்.


களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தைப் பொறுத்தவரையில் 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏனைய கௌரவ வண்ணக்குமார்களுடனும் கௌரவ கடுக்கண்டவமார் களுடனும் இன்னும் பல ஊர்ப் பெரியார்களுடனும் கிராம மக்களுடனும் இணைந்து முதன்முதலில் ஆடித் திருவோண நட்சத்திர தினத்தை தீர்த்தமாக வைத்து திருவிழாக்கள் செய்யப்பட்டன. பின்பு காலத்துக்கு காலம் கும்பாபிஷேகங்கள் மேற்கொள்ளப்பட்டு ஆனி உத்தர நட்சத்திர தினத்தை தீர்த்தமாக வைத்து திருவிழாக்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடப்பட்ட அம்சமாகும். மேலும் அமரர் கௌரவ வண்ணக்கர் சி.தன்மன்பிள்ளை அவர்கள் ஏனைய வண்ணக்குமார்களுடனும் இணைந்து ஒற்றுமையுடன் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வந்தார். ஆலயத்துக்கு மின்சாரம் எடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயத்துக்கும் வண்ணக்குமார்களுடன் இணைந்து அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய முடிகின்றது. கல்விப் பணியிலும் சிறப்பாக ஈடுபட்டுள்ளார். அன்றைய காலகட்டத்தில் "கணேசானந்தா" என்னும் வாசிக சாலையை ஊரின் முன்னோடிகளுடன் இணைந்து உருவாக்கினார். இவ்வாசிக சாலையின் மூலம்பலர் பயன் அடைந்தனர். மேலும் களுதாவளை இராமகிருஸ்ண வித்தியாலயம், களுதாவளை மகா வித்தியாலயம் அதாவது தற்போதைய தேசிய பாடசாலையாக விளங்குகின்ற வித்தியாலயம் முதலியவற்றையும் வண்ணக்குமார் சபையுடனும் கிராமத்தின் முன்னோடிகளுடனும் இணைந்து அமைத்தார் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது. அவரது இறைதொண்டு சமூகத்தொண்டு என்பவற்றால், இறை அருளினால் அவரது பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர், முதலியோர்கள் கல்வி முதலிய துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். எனவே அன்னார் அவர்கள் இறைபணியால் சிறந்த மாமனிதராக விளங்கினார். ஆகவே அன்னாரது நாமம் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேச நிலவுடமை முறைமை



**கலாநிதி ச. ஜெயராஜா**
பீடாதிபதி,
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

மட்டக்களப்பு மாவட்டமானது தொன்மையான வரலாற்றையும், அவை சார்ந்த மரபுகளையும் கொண்டது. அம்மரபுகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரிய தனித்துவ அம்சங்களைக் கொண்டன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக இம்மாவட்டம் இருந்துள்ளது. போர்த்துக்கேயர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இட்ட பெயர் "அரிசி இராச்சியம்" என்பதாகும். இம் மாவட்டத்தின் வரலாற்று மரபுகளை ஆய்வுசெய்ய முற்படும் போது இப்பிரதேசத்தின் நிலவுடமை முறை, அது கொண்டுள்ள தனித்துவமான பொருளாதாரப் பண்புகள் என்பன ஆய்வு செய்யப்படுதல் அவசியமாகும். இதுவரை காலம் மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு பற்றிய ஆய்வு முயற்சிகளில் அம்மாவட்டத்தின் பாரம்பரிய நிலவுடமைமுறையும், அதன் தனித்துவமான பொருளாதார அம்சங்களும் வெளிக்கொண்டுவரப் படவில்லை.

பொதுவாகப் பிரதேசம் ஒன்றின் பொருளியல் அம்சங்களும் அதன் கட்டமைப்பும் அப்பிரதேசத்தின் வாழ்க்கைமுறை, தொழில், சமூகக் கட்டமைப்பு, சாதிமுறை, கலை, கலாசாரப் பண்புகள் போன்றவற்றினைத் தீர்மானிப்பவையாக உள்ளன. பிரதேசங்களின் வரலாற்றுத் தொன்மை இப்பண்புகளை மேலும் வலுவுடையதாக்கு கின்றன். இம்மாவட்டத்தின் பிரதானமான பொருளாதார உற்பத்தித் துறையாக நெல்விவசாயமே உள்ளது. இதனால், இம்மாவட்டத்தின் சமூக அமைப்பிலும் உற்பத்தி உறவுகள் பலமான தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விடவும், தனித்துவமான நிலவுடமை அமைப்பினை இப்பிரதேசம் கொண்டிருந்தது. விவசாயப் பொருளாதாரத்துடன் அது இணைந்து காணப்பட்டது. நிலவுடைமையாளர்களையும், அவர்களது நிலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யும் தொழிலாளர்களையும் உள்ளடக்கியதாக இவ்விவசாயச் சமூக அமைப்பு காணப்பட்டது. இம்மாவட்டத்தின் நிலவுடமை முறையுடன் இணைந்திருந்த அச்சமூகஅமைப்பு ஒரு காலகட்டத்தில் மிகவும் இறுக்கமானதாக இருந்தது. காலவோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களினால் இவ்வம்சங்கள் மாற்றத்துக்கு உள்ளாகியுள்ள போதிலும், இன்னும் சில இடங்களில் அவை நிலவுவதையும், பலவீனப்பட்டிருப்பதையும் காணமுடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சமூக, பண்பாட்டு வரலாற்றில் "மாகோன்" என்ற அரசனின் ஆட்சிக் காலம்பிரதான காலமாகக் குறிப்பிடப்படுகின்றது. இக்காலம் பல சமூக மாற்றங்களை ஏற்படுத்திய காலமாகும். இப்பிரதேச நிலவுடமைமுறையில் "போடியார்" என அழைக்கப்படும் நிலச்சுவாந்தர்கள் காணப்பட்டனர். அரசியல், நிலவுடைமை முறை என்பவற்றில் போடியார்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலமும், வேளாண்மையும் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக இருந்தனவென வரலாற்றுப் பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகின்றார். மட்டக்களப்பு மாவட்ட நெற்காணிகளின் உரிமையினை நோக்கும் போது தெளிவாகத் தெரியும் அம்சம் யாதெனில் பெருமளவான நெற்காணிகள் கோயில் நிலங்களாகக் காணப்பட்டமையாகும். இம்மாவட்டத்தினை ஆட்சி செய்த சிற்றரசுகளால் கோயிலுக்கு நிலங்கள் பெருமளவில் வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலவுடமை தொடர்பான கட்டமைப்பு வன்னிமைகள்உருவாக்கப்பட்ட பின்னரே தோற்றம் பெற்றது பொதுவாகவே ஈழத்தமிழர்களது வரலாற்றில் வன்னியர்களின் ஆட்சி பரந்தளவில் இருந்து வந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாணமை தொடக்கம் ஏறாவூர் வரை சிற்றரசுகளை நிறுவி வன்னியர்கள் ஆட்சி செய்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்னிமைகளின் சிற்றரசுகள் தோற்றம்பெற்ற பின்னரே இம் மாவட்டத்தில் தனிப்பண்புகளுடைய நிலவுடமை முறையும் தோற்றம் பெற்றுள்ளது. மட்டக்களப்பின் வரலாற்றில் பழங்குடிமக்கள் வாழ்ந்ததையும் அவர்கள் நிரந்தரமாக நிலங்ளை பயன்படுத்தக் கூடியவகையில் தமக்கென சிறிய அரசுகளை நிறுவி வாழ்ந்தனர் எனவும் மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் குறிப்பிடுகின்றது. அவ்வாறு எழுச்சி பெற்ற சிற்றரசுகளே வன்னிமைகளாக அமைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தின் நிலவுடமை முறையின் விசேட பண்பாகவுள்ள போடியார் வன்னியச் சிற்றரசுகளின் மூலமாகத் தோற்றம் பெற்றவர்களாகவே கருதப்படுகின்றனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் தொன்றுதொட்டுக் காணப்படும் நிலவுடமை முறையின் சிறப்பம்சம் அதன் தனிப்பண்பான "போடியார்-வேலையாள்" என்ற அம்சமாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் நிலவுடமை அமைப்புக்கு மாறாக போடியார் எனப்படும் நிலச்சுவான்களைக் கொண்ட தனிப்பண்புள்ள நிலவுடமை அமைப்பொன்று இப்பிரதேசத்தில் நிலைபெற்றிருந்தது. போடியார் எனும் பட்டத்தினைக் கொண்டிருந்தோர் அதிக நிலபுலன்களையும், மந்தைகளையும் வைத்திருந்தனர். போர்த்துக்கேயர் மட்டக்களப்பு மாவட்டத்தினை ஆட்சிசெய்த காலத்தில் போடியார் முறை வழக்கிலிருந்தமைக்கான சான்றுகள் எதுவுமில்லை. ஒல்லாந்தர் காலத்திலேயே போடியார் முறையின் அமைப்பு இருந்தமைக்கான தெளிவான ஆதாரங்கள் உள்ளன என வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சியின் போது மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த நிலபுலன்கள் எல்லாம் ஏழு போடிகளுக்கு உடமையாக்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நிலச்சுவான்களாகக் காணப்பட்ட போடியார்கள் நிருவாக அதிகாரம் பெற்றவர்களாகவும் இருந்தனர்.

மட்டக்களப்பின் நிலவுடமை முறையும் அதனோடிணைந்த போடியார் மரபும், எவ்வாறு ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறுபட்டு அமைந்துள்ளதுவோ அதுபோலவே அதன் ஊழிய முறையும் வேறுபாடானதாகும். போடியாரின் நிலங்களில் வேலை செய்யும் ஊழியக்குடிகள் இங்கு காணப்பட்டன. வயல் வேலைகளுக்கான ஊழியர்களாக நிலமற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஊழியர்களுக்கான கூலிமுறையும் வேறுபட்டதாகவே அமைந்திருந்தது. போடியாரின் விவசாய நடவடிக்கை முழுவதற்கும் பொறுப்பாக அனுபவமும், ஆற்றலுமுள்ள "முல்லைக்காரன்" ஒருவன் நியமிக்கப்படுவான். நெற்சாகுபடி செய்யப்படும் வயல்போடியார் பங்கு, முல்லைக்காரன் பங்கு, ஊழியக் குடிகளுக்கான பங்கு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விவசாயம் செய்யப்படும். போடியாரின் பங்குவயலில் விளைந்த நெல்முழுவதும் போடியாருக்குச் சொந்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடியாருக்குச் சொந்தமான ஏனைய பங்கு நிலத்திலிருந்து கிடைக்கும் விளைவு முழுவதும் நிலவுடமையாளராகிய போடியாருக்கு உரியதாக இருக்கவில்லை. ஏனைய பங்குகளில் கிடைக்கும் விளைச் சலில் ஒரு பகுதியை போடியார் தனது பங்காகப் பெற்றுக்கொண்டார். பங்குகளில் விவசாயம் செய்வோர் போடியாரின் வயலையும் இலவசமாக சாகுபடி செய்து கொடுத்தல் வேண்டும். வயல்களில் வேலை செய்யும் கூலியாட்களுக்கான வேதனமும் பணவடிவில் அல்லாது உற்பத்திப் பொருளாகவே வழங்கப்பட்டது. இப்பிரதேச நிலச்சுவான்களான போடியார்கள் தமது நிலத்தில் பயிரிடும் கூலியாட்களை அடிமை நிலைக்குக் கொண்டு செல்லவில்லை. பங்குப் பயிரிடல் முறையே பிரதான விவசாய செய்கை முறையாக இருந்தது. போடியாரினது நிலத்தினைப் பயிரிடும் செய்கையாளன் தவிர கூலியாட்களுக்கு விளைவின் ஒரு பகுதி வழங்கப்பட்டமை மட்டக்களப்பு நிலவுடமை முறையின் ஒரு சிறப்பம்சமாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களினது நிலவுடமைமுறையினை நோக்கும்போது, மன்னனே நிலத்துக்கான முழு உரிமையினை கொண்டிருந்தான். குடிமக்கள் மன்னனுக்கு வழங்கும் வேலைகளின் பொருட்டு மன்னனால் நிலம் வழங்கப்பட்டிருந்தது. நிலத்தினைப் பயன்படுத்தும் உரிமையினை மட்டுமே மக்கள் பெற்றிருந்தனர். மக்களுக்கு உபகாரமாக வழங்கப்பட்டிருந்த நிலத்தினது அதிகாரங்கள் மன்னனிடமே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் மட்டக்களப்புப் பிரதேசத்திற்கே உரித்தான நிலவுடமை முறையில் அவ்வாறு மன்னனின் கட்டுப்பாடு இருக்கவில்லை. நிலவுடமையா ளராக மக்களே காணப்பட்டனர். மன்னனது நிலத்தின் மீதான அதிகாரம் குறைவாக அல்லது இல்லாமலேயே இருந்தமை இதன் சிறப்பம்சமாகும்.

அன்னியர் ஆட்சியிலும் நிலம் முழுமையாக ஆட்சியாளரால் உடமையாக்கப் படவில்லை. நிலவுடமையுடைய போடியார்களிட மிருந்த நிலத்திற்கான வரியினையே அன்னிய ஆட்சியாளர்கள் பெற்றிருந்தனர். இலங்கையின் சிங்களப் பிரதேசங்களின் நிலவுடமை போலல்லாமல் நிலத்திலிருந்து கிடைக்கும் விளைவின் ஒரு பகுதியினை மட்டுமே மக்கள் வரியாகச் செலுத்தினர். இதுவே மட்டக்களப்புப் பிரதேச நிலவுடமை முறை இலங்கையில் தனித்துவமான முறையாக இருந்தமைக்கான காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையின் தமிழ் பிரதேசங்களான யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிரதேசங்களிலும் நிலவுடமை முறைகள் காணப்பட்டன. ஆனால் அப்பிரதேசங்களில் மட்டக்களப்புப் பிரதேசத்திலிருந்த போடியார் என்ற சிறப்பம்சம் இருக்கவில்லை. யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களில் உயர்சாதி வர்க்கத்தினரே கூடிய நிலவுடமையினை கொண்டிருந்தனர். அவ்வுயர்குலத்து நிலப்பிரபுக்கள் இறுக்கமான சாதிமுறையினது அம்சங்களைப் பேணிப் பாதுகாத்தமையே அதன் சிறப்பம்சமாகக் கொள்ளலாம். எனினும், மட்டக்களப்புப் பிரதேச நிலமானிய முறையில் முற்குகர் எனப்படும் சாதிமரபில் போடியார் என அழைக்கப்பட்ட நிலப்பிரபுக்கள் இருந்தபோதிலும் ஏனைய சாதிமரபிலும் போடியார்கள் காணப்பட்டனர். அதாவது, சாதிமுறையின் இறுக்கமான தன்மை மட்டக்களப்புப் பிரதேச நிலவுடமை முறையில் செல்வாக்குச் செலுத்தவில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் மட்டக்களப்புப் பிரதேசத்தினது நிலவுடமை அமைப்புக்களிலும் மாற்றங்கள் தென்படலாயின. 1956ம் ஆண்டின் பின்னர் குடியேற்றத் திட்டங்கள் மூலம் உலர்வலய பிரதேச விவசாய அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்ட போது மட்டக்களப்புப் பிரதேச நிலவுடமை முறையும் சிதைவுறத் தொடங்கியது. அதிகரித்து வந்த சனத்தொகை வீதத்திற்கு ஏற்ப காணிப்பகிர்வினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உணரப்பட்டதனாலும் நிலவுடமை முறை சிதைவடைந்து சென்றது. அவ்வாறு சிதைவடைந்து சென்ற போதிலும் ஒரு சில போடியார்கள் கூடிய நிலவுடமையினைக் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 1972 ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்தச் சட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலவுடமையமைப்பில் கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. 25 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணிகளைத் கொண்டிருந்த போடியார்கள் இச்சட்டத்தின் மூலம் தமது காணிகளை இழந்தனர். எனினும் போடியார்கள் தமது நெற்காணிகளை பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் பகிர்ந்து கொடுத்ததன் மூலம் தமது நிலவுடமையினைப் பாதுகாத்துக் கொண்டனர். இத்தகைய நிலவுடமை அமைப்பு இம்மாவட்டத்தின் சமூக, பொருளாதார அம்சங்களில் செல்வாக்கினையும் செலுத்தி வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சி. வ. தன்மன்பிள்ளை வண்ணக்கர் தொடர்பான எனது நினைவுகள்



**ப. குணசேகரன்**
பிள்ளையார் ஆலய முன்னாள் வண்ணக்கர்,
ஓய்வுநிலைப் பொறியியல் உதவியாளர்,
களுதாவளை.

அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்கள் எமது கிராமத்தில் வாழ்ந்த பெரியார்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். தனது இளமைக் காலத்திலேயே கணேசானந்தா வாசிகசாலை என்னும் அமைப்பில் செயற்பட்டு அக்கால இளைஞர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த உழைத்தவர்களுள் ஒருவராகத் திகழ்ந்துள்ளார்.

பின்னர் எமது சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வண்ணக்கராகத் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாக நாற்பது வருடங்களுக்கும் மேலாகத் தொண்டாற்றிய பெருமை கொண்டவர். எமது கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்களுள் ஒருவரான இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய முன்னாள் தலைமை ஆசிரியர் அமரர் சி.கண்ணமுத்து வண்ணக்கர் மற்றும் சி. செல்லப் பிள்ளை வண்ணக்கர் போன்றோருடன் இணைந்து எமது ஆலயத்தின் வளர்ச்சிப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்தவர். அவர் வண்ணக்கராகப் பணியாற்றிய இறுதிக் காலப் பகுதியில் நானும் ஒரு சில பொதுக்கூட்டங்களுக்கு ஆலயத்தில் சமுமளித்திருக்கின்றேன். கூட்டங்களில் அவர் அதிகமாகப் பேசுவதில்லை. அமைதியாகவும் அடக்கமாகவும் இருந்தே காரியங்களைச் சாதித்த வல்லவர். அவர் இவ்வாலயத்தில் நான் வண்ணக்கராக வருவதற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னரேயே ஓய்வுபெற்றுவிட்டதால் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அவர் ஓய்வு பெற்றபோது ஒரு சிலர் அவரது இடத்துக்கு வண்ணக்கராக வருவதற்கு எண்ணம் கொண்டிருந்தபோதிலும், இவர் தான் வண்ணக்கராக தெரிவு செய்யப்பட்ட வேளையில் தன்னுடன் போட்டிக்கு நின்று தெரிவு செய்யப்படாமல் போன இ.வேலுப்பிள்ளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை வரவழைத்து தனது வண்ணக்கர் பதவியை அவருக்கு பெற்றுக் கொடுத்தார். அவரது அந்தச் செயல் என்னை மிகவும் கவர்ந்தது. தனது மனிதாபிமான பண்பினை நாற்பது வருடம் கடந்த பின்பும் அவர் வெளிக்காட்டினார். இப்போதுள்ளவர்களிடம் அவ்வாறான பண்புகளைக் காண முடிவதில்லை.

எனது தந்தையார் அமரர் மு.பழனித்தம்பி அவர்களும், அமரர் சி.தன்மன்பிள்ளை அவர்களும் ஒரே குடிமரபு வழியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் கிட்டத்தட்ட ஒரே வயதுடையவர்கள். அமரர் சி.தன்மன் பிள்ளை அவர்கள் வண்ணக்கராக செயற்பட்ட வேளையில் மிக நீண்டகாலம் எனது தந்தையார் ஆலயத்தின் திறப்புக்காரராகப் பணியாற்றினார். குடி நடவடிக்கைகளிலும் ஆலயப் பணிகளிலும் ஆலய விழாக்களிலும் இருவரும் தோளோடு தோள் நின்று செயல் பட்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் மிகவும் நெருங்கிய நட்புறவுடனும் திகழ்ந்தார்கள். எனது தந்தையார் ஆரம்ப காலம் தொடக்கம் தனது இறுதிக்காலம் வரை தமிழ்த்தேசியத்தின்பால் பற்றுறுதியுடன் திகழ்ந்தவர். இருவருக்கும் வேறு வேறு கொள்கைப் பிடிப்புக்கள் இருந்தபோதிலும் அது அவர்களது தனிப்பட்ட நட்புக்கு இடையூறாக இருந்ததில்லை.

நான் சிறுவயதில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு வகுப்புக்களில் கற்றபோது பாடசாலைவிடும் நேரத்திற்கு தந்தையார் என்னை வீட்டுக்கு அழைத்துவர வருவதுண்டு.



அமரர் முருகப்பர் பழனித்தம்பி (திறப்புக்காரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவ்வேளைகளில் அவர் வண்ணக்கரின் வீட்டுக்கும் சென்று வரத் தவறுவதில்லை. அவ்வாறு நான் தந்தையாருடன் அவர்களின் வீட்டுக்குச் செல்லும்போது திருமதி.வாலயப்பிள்ளை தன்மன்பிள்ளை அவர்கள் சாப்பாடு தந்து உபசரித்து வழி அனுப்புவது இன்றும் என் நினைவில் உள்ளது. திருமதி. வாலயப்பிள்ளை தன்மன்பிள்ளை அவர்கள் சிறந்த உபசரிப்புப் பண்பு மிகுந்தவர். அவரும் எனது தாயாரும் மிகுந்த நட்புறவு கொண்டு வாழ்ந்தவர்கள்.

அமரர் சி. தன்மன்பிள்ளை அவர்களது நினைவாக இவ்வாறான புத்தகமொன்றை ஆக்கி வெளியிடுவதற்கு அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் எடுத்துள்ள இம்முயற்சி காலத்தின் கட்டாய தேவையாகும். இதற்காக அவர்களனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு எமது கிராமத்தில் வாழ்ந்து பலபணிகளைச் செய்த பெரியார்களனைவரதும் வாழ்க்கை வரலாறுகளை ஆவணமாக்கு வதற்கு அனைவரும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கண் களுதாவளைப்
பிள்ளையாரை
மனதில் நினைத்தவனாய் ....



# எங்கள் வழிகாட்டி பற்றி

## க. இராசலிங்கம்

களுதாவளை சுயம்புலிங்க ஆலய முன்னாள் தலைவரும் வண்ணக்கரும்.

எம்மை விட்டுச் சென்றாலும் இக் கிராமத்திற்காக செய்த சேவை இன்றுதன்னும் நிலைத்து, பேசப்பட்டு, புகழ்பூத்து, மணம் பரப்பிக் கொண்டிருக்கும் திரு.சி.தன்மன்பிள்ளை ஐயா அவர்களைப் பற்றி நினைவு கூருவதில் அடியேன் நான் உளம் மகிழ்கின்றேன்.

இவரோடு சிறு பிராயம் தொடக்கம் ஒன்றிணைந்து சில தொண்டுகளைச் செய்தவன் என்ற வகையில் அவர் குணத்தில், யானையைப் போன்ற அமைதியும், நரியின் தந்திரமும், புலி போன்ற பாய்ச்சலும் பொருந்தியவராகத் திகழ்ந்தார் என்றால் மிகையாகாது.

சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பழனித்தோம்புதர் வண்ணக்கராக இருந்த காலப்பகுதியில் தோம்புதோரின் பேரனாகிய வேலுப்பிள்ளை அவர்களுக்கும் (வாத்தியார்) தன்மன்பிள்ளை ஐயாவிற்கும் இடையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் மேலதிகமாக ஒரு வாக்கினைப் பெற்று இவ்வாலயத்தின் வண்ணக்கராக தெரிவு செய்யப்பட்டமை இக்கிராம மக்கள் இவர் பால் கொண்ட அன்பும் நம்பிக்கையும் அவர் சேவையுமே காரணமாகும்.

தான் வண்ணக்கராக பொறுப்பேற்று முதன் முதலாக ஆலயத்திற்குச் செல்லும்போது பொன்னையா ஓவிசரால் வடிவமைக்கப் பட்ட மூஷிக வாகனத்தை ஊர் மக்கள் புடைசூழ மேளதாள கச்சேரி முழங்க வாணவேடிக்கையுடன் எடுத்துச் சென்ற பெருமை இவருக்கே உரியது. இன்றும் இம் மூஷிகத்தை ஆலயத்தில் காணலாம்.

இவருடைய ஆரம்ப காலத்தில் ஆலயம் சிறியதாக இருந்தது. அதனை பாலஸ்தானம் செய்து புனருத்தாரணம் செய்வதற்காக உலாத்தல் மரம் ஒன்று தேவைப்பட்டது. பல இடங்களுக்குச் சென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காமையினால் ஐயா அவர்கள் கவலையுற்று இருந்தபொழுது அவரின் கனவில் குருக்கள் வடிவம் தாங்கி வந்து "கடலில் பெரிய மரம் ஒன்று அடைந்து வருகிறது போய் எடு" எனப் பணிவிடையானது. இக் கிராம மக்களை அழைத்துச் சென்று எடுத்து இவ்வாலயத்தை புனருத்தானம் செய்தார்.

எமது கிராம மக்கள் ஒவ்வொரு வருடமும் மண்டூர், சித்தாண்டி போன்ற ஆலயங்களுக்குச் சென்று உற்சவ தீர்த்தத்தில் கலந்து கொண்டு தமது பிணியை நீக்கி வந்தனர். இதனைக் கண்ணுற்ற ஐயா தமது கிராம மக்கள் சிரமப்படுவதை நீக்குவதற்காக 1956 இல் எமது சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்திலும் திருவிழா செய்து இறுதியில் தீர்த்தம் செய்வதற்கு வித்திட்டவர். திருவிழாவின்போது உள்வீதி வலம் வருவதற்காக ஏற்கனவே இருந்த மூஷிக வாகனத்திலும், ஆலய நிதியில் எருது வாகனத்தையும் வடிவமைத்து சித்தாண்டியில் இருந்து மயில் வாகனத்தையும் தருவித்து ஆலய உற்சவத்தினை ஆரம்பித்து வைத்தவருமாவார்.

அது மட்டுமன்றி பழுகாமத்தைச் சேர்ந்த பரதேசிக் குருக்கள் ஆச்சாரிய அபிஷேசம் பெற்று சபாசா அபிஷேகம் பெற்றதும் ஐயாவின் காலத்திலேயாகும். இவ்வாலயத்தில் முதலாவது நிகழ்வும் இதுவேயாகும்.

அது மட்டுமா ஆரம்ப காலத்தில் களுதாவளை திருநீற்றுக் கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் கொத்துக் குழையினால்தான் இருந்தது. இவ் ஆலயத்தினை சின்னத்தம்பி சாமியாருடன் இணைந்து கிடுகினைக் கொண்டு வேய்ந்து ஒரு ஆலயமாகத் தோற்றம் பெறச் செய்து வெள்ளிதோறும் பூஜை செய்வதற்கும் தனது பங்களிப்பைச் செய்தவரும் இவரே.

மேலும் செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய நிருவாகக் கூட்டத்தை தலைமை தாங்கி நடாத்தும் ஆற்றல் கொண்டவர். இவை தவிர ஏனைய குடும்ப வண்ணக்குமாருக்கும் குடிமக்களுக்கம் இடையே ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளித்து தீர்ப்பளிக்கும் நடுநிலை கொண்ட வல்லவராகவும் திகழ்ந்துள்ளார்.

ஆலயத் தொண்டு மட்டுமன்றி சிறந்ததொரு சமூகத் தொண்டராகவும் இருந்தவர். களுதாவளை R.K.M. பாடசாலை கட்டுவதற்கு நிதி திரட்டுவதற்காக விபுலானந்தா சபைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கல்லடி) உதவியுடன் எமது கிராமத்தில் 1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல தடவையில் எண்ணெய்ச்சிந்து பாடி இப் பாடசாலையை கட்டியெழுப்புவதற்கு பெரும் பங்காற்றியவர். மேலும் இக்கிராமத்தில் மட்டுமன்றி ஏனைய கிராமங்களில் மரணம் எய்தினாலும் அவ்வீட்டுக்குச் சென்று உடனிருந்து உறவாடி ஆறுதல் வார்த்தை கூறும் இரக்க சிந்தனையாளர்.

மேலும் இக்கிராமத்தின் ஏனைய பொதுச்சேவை அனைத்திற்கும் அவரது இல்லத்திலேயே அவரது தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு முடிவெடுக்கப்படும். தனது தந்தையின் இறுதிச் சடங்கின்போது தலைமுடி இறக்கப்பட்டு பின்பு முடி வளர்த்து கொண்டை முடித்து சவரம் செய்யாமலே தாடி வளர்த்து "தாடி வண்ணக்கர்" என்ற புனைப்பெயர் பெற்ற மன வைராக்கியம் கொண்டவர்.

பல வருடங்கள் ஐயாவுடன் இணைந்து ஆலயச் செயற் பாடுகளில் ஈடுபட்டதாலையோ தெரியவில்லை அவர் பாணியை அடியொற்றி நானும் சிலகாலம் ஆலயத்தை நிருவகிக்கும் வல்லமையைப் பெற்றேன். இதுவும் தன்மன்பிள்ளை ஐயாவையே சாரும்.


இவ்வாறாக 40 வருடங்களுக்கு மேல் ஆலயத் தொண்ட னாகவும், சமூகத் தொண்டனாகவும் தமது வாழ்நாளை அர்ப்பணித்தது மட்டுமன்றி தன் இல்லாளுக்கு ஏற்ற துணைவராகவும், தான் ஈன்றெடுத்த குழந்தைகளுக்கு சிறந்ததொரு தந்தையாகவும் நல்வழிகாட்டியாகவும் இருந்த ஒரு மாமனிதர் என்றே கூறலாம்.

இவருடைய சேவையும் பணியும் இன்றும் இனிவரும் காலங்களிலும் மங்காப் புகழோடு நிலைபெற்றிருக்கும் என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பரிப்பில்லாத அமைதியான தலைவர் அமரர் சி.வ.தன்மன்பிள்ளை வண்ணக்கர்



**க. வேதநாயகம்**
களுதாவளை பிள்ளையார் ஆலய
முன்னாள் செயலாளரும்
முன்னாள் வண்ணக்கரும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும்"

இது பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர் வாக்கு. இக்குறளுக்கு உதாரண புருஷராக வாழ்ந்தார் அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்கள் அன்றைய காலம் தொடக்கம் இன்றைய காலம் வரை எல்லோருக்கும் அருளும், கீர்த்தியும் வழங்கிக் கொண்டிருக்கும் அருள்மிகு புண்ணிய பூமி களுதாவளை தன்னிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என அமையப் பெற்ற களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தினை நீண்ட காலம் நிருவகித்ததோடு, ஊரின் ஒற்றுமைக்கும் அபிவிருத்திக்கும் முன்னின்று உழைத்த ஆளுமைத் தன்மை கொண்டவரே அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை என்றால் அது மிகையாகாது.

எமது கிராமத்தின் தலைமை ஆலயமான சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் பூசை வேளைகளில் தவறாது அமரர் அவர்களை காண்பதோடு ஆலய உள்வெளி வளாகத்தில் தானும் தன்னோடு இணைந்தவர்களை கொண்டும் சரியைத் தொண்டு செய்வதில் எச் சந்தர்ப்பத்திலும் பின்வாங்காத சுபாவம் கொண்டவராகவும் நிமிர்ந்த நன் நடையும், நேர்கொண்ட பார்வையும் காரியமான பேச்சும் நெஞ்சுவரை நீண்டு வளர்ந்த தாடி, மீசையோடு கூடிய இரக்க குணம் மிக்கவராகவும் வெளி உடல் அமைப்பில் அகத்திய முனிவர் போன்ற தோற்றம் கொண்டவராக காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் 1938 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பெத்தாக்கிழவி குடும்பம் சார்பான வண்ணக்கராகவும் வண்ணக்குமார் சபை தன்னின் முதன்மை வண்ணக்கராகவும் செயற்பட்ட 40 வருட காலம் ஆலய வளர்ச்சியில் பொற்காலம் எனலாம். கிராமத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை முன்னின்று வழிநடத்தியவராகவும் ஆலய திருப்பணிகளுக்காக தன்னால் இயன்ற கைங்கரியங்களை செய்ததோடு உள்ளூர் கிராமத்தவரையும் வெளிக்கிராமத்த வரையும் இணைக்கும் பாலமாக செயற்பட்ட செயல் வீரராவார்.

இவரின் மூப்பின் அடிப்படையிலே சுகவீனம் அடைந்திருந்த காலப்பகுதியில் தன்னோடு வண்ணக்கர் பதவிக்கு போட்டியிட்ட அமரர் இ.வேலுப்பிள்ளை அவர்களை தனக்குப் பின்னர் பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கராக நியமித்தமை தனது சிறந்த தயாள குணத்தை காட்டும் அம்சமாக காணலாம். அமரர் அவர்கள் மூன்று சகோதரிகளுடன் 1907 ஆண்டு பிறந்து பின்னர் வாலயப் பிள்ளையை திருமணம் செய்து சிறந்த இல்லறத்திற்கு உதாரணமாக இருந்து மழலைச் செல்வங்களுடன் சிறப்பாக வாழ்ந்தார். இவர் தனது காலத்தில் தொழிலைச் சிறப்பாகச் செய்ததோடு வண்ணக்கர் பணியிலும் தொண்டாற்றினார்.

இவரின் எச்சங்களில் மூத்தமகன் விவசாய போதனா சிரியராக இருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சிறப்பு பயிற்சிக்காக கிராமத்திலிருந்து சென்றமையோடு பின் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளராகவும் மக்களோடு இணைந்த அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் விட்டுச்சென்ற கைங்கரியங்களாலும் செயல்களாலும் மாவட்ட முதன்மை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். ஏனைய இருவரும் ஆசிரியராக இருந்து 01 ஆம் தர அதிபராக இறுதிவரை இருந்து ஓய்வு பெற்றவர்களுள் திரு.த.சுந்தரலிங்கம் அவர்கள் கொங்கொங் நாட்டிற்கு புலமைப்பரிசில் பெற்றதோடு மாலைதீவிற்கும் கற்பித்தல் பணிக்கு சென்றிருந்தமை சிறப்புக்குரியதோடு தனது பெண் பிள்ளைகளின் வாழ்க்கையானது சிறப்பாக அமைய வழி செய்ததோடு இத்தனைக்கும் மேலாக இவரது பேரப்பிள்ளைகள் சிறப்பான பதவிகளில் பணியாற்றுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைக்கும் வித்திட்ட பெருந்தகை அமரர் சி.வ. தன்மன்பிள்ளை என்றால் சாலப் பொருத்தமானது.

செய்யும் தொழிலை தெய்வமென நினைத்து திறம்படச் செய்தவர். வெற்றிலைச் செய்கையோடு இணைந்ததாக வேளாண்மைச் செய்கை தன்னையும் இருகண்களென மதித்துச் செய்ததோடு இவ்விரு தொழில்களுக்கும் தொழில் தருனராக வேலையாட்களை வைத்திருந்ததோடு அவர்களும் இவரின் குடும்பத்தினரோடு அந்நியோன்யமாக செயற்பட்டதோடு இவர்களின் இன்ப துன்பங்களிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

அமரர் அவர்களின் சகோதரியின் பேரப்பிள்ளைகள் மாகாண சபையில் செயலாளராகவும், புள்ளிவிபர திணைக்கள பணிப்பாளராகவும், ஆசிரியர்களாகவும் சிறப்பாக சேவையாற்று கிறார்கள். அவருடைய மூத்த பேரன் மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். அத்தோடு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வண்ணக்கராகவும் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.இளைய பேரன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவி வகிக்கின்றார்.

அமரர் அவர்களின் தன்னலமற்ற சேவையினால் மக்களின் நன்மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றிருந்தார். அரசியல் ரீதியாகவும் மதிப்பும் மரியாதையுமிருந்தது. அவர் எடுத்த கருமம் எதுவாக இருந்தாலும் அதனை உடனடியாகவும் சிறப்பாகவும் செய்வதில் கண்ணும் கருத்துமாகவிருப்பார். அவருடைய அர்ப்பணிப்பான பணி நம்மனைவருக்கும் கிடைத்தது பெரும் பாக்கியமே.

அமரரின் எளிய வாழ்க்கை, ஆர்ப்பரிப்பு இல்லாத, செயற்பாடுகள், அனைவரையும் அணைத்து செயற்படும் பண்பு, தெய்வ பக்தி, அனைவருக்கும் முன் உதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க அவர் நாமம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நினைவில் அமரர் சி. வ. தன்மன்பிள்ளை முதன்மை வண்ணக்கர்



**க. தங்கவேலாயுதன்**
ஓய்வுநிலை கிராம அபிவிருத்தி
உத்தியோகஸ்தர், சமூகநல பயிற்றுனர்

அமரர் எம்மை விட்டுப் பிரிந்து முப்பது ஆண்டுகள் கழிந்துவிட்டது. ஆனாலும் களுதாவளைக் கிராமத்தில் இன்றும் வண்ணக்கர் என்றால் மக்கள் மனதில் தோன்றுபவர் அமரர் தன்மன்பிள்ளைதான். அவருடைய தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள், முயற்சிகள் என்றும் மறக்கக்கூடியவையல்ல. மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒருங்கிணைந்த முயற்சியினாலே இக் கிராமம் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளன. ஒருவருடைய சேவையை நாம் பாராட்ட வேண்டும். அவரை நாம் நித்தமும் நினைவிலிருத்த வேண்டும். அதன் காரணமாகவே அடியேன் இக் கட்டுரைக்கு நித்திய நினைவில் என தலையங்கமிட்டுள்ளேன். அவர்கள் எங்கள் மனதில் என்றென்றும் நித்திய நினைவிலிருப்பாரென்பதில் எதுவித ஐயமுமில்லை.

களுதாவளைக் கிராமம் மிகச் சிறப்பையும் கீர்த்தியையும் பெறுவதற்கு முக்கிய காரணம் இக் கிராமத்திலெழுந்திருக்கும் சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயமாகும். எமது சைவ சமய வழிபாட்டில் முதல் முதற் கடவுளாக நாம் கணிப்பது நமது பிள்ளையாரையேயாகும். கிழக்கிலங்கை வங்க கடலோரம் அமைந்துள்ள இக்கிராமம் வடக்கே தேற்றாத்தீவையும் தெற்கே களுவாஞ்சிகுடி கிராமத்தையும் கிழக்கே வங்க கடலையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் கொண்டுள்ளது.

தாமே தனக்கு பொருத்தமான புண்ணியபதியாக மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற முப்பெரும் சிறப்புக்களும் அமைந்த எவ்வித ஆசூசமில்லாத பரிசுத்த புண்ணிய பூமியில் அமைதியான அற்புதமான சூழலிலே சுயம்புலிங்கப் பிள்ளையாராகத் தோன்றி அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொடக்கம் அருள் பாலித்து வருகின்றார். ஆரம்ப காலத்தில் களுதாவளைக் கிராம மக்களே தரிசித்த பிள்ளையார் இன்று தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவிக் கிடப்பதை நாம் காண்கிறோம்.

அண்மையில் அதி சிறப்பாக நடைபெற்ற ருத்தர் தாண்டவத்துடன் கூடிய மகாயாக குண்டலத்தின் செவ்வியை இமயமலைச் சாரலிலிருந்து வந்த முனிவர்கள் ரிஷிமார்கள் விசேட குருமார் ஒன்றிணைந்து நடத்திய இப் பெருவிழாவின் மகிமையை கூர்ந்து நோக்கும்பொழுது அதுவும் சுயம்புலிங்கப் பெருமானின் அருளாகும். இதில் இலட்சோப இலட்சம் மக்கள் கலந்து அருள் பெற்றுள்ளார்கள். அண்மையில் நடைபெற்ற யாகத்தின் பொழுது (முழு நாட்களும்) மூன்று வேளையிலும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஒரு விசேட நிகழ்வாகும். எதுவித குறையுமின்றி ஆயிரக் கணக்கான மக்கள் பங்கு கொண்டார்கள். பெரியவர், சிறியவரென்றோ, வசதி படைத்தவர், வசதி குறைந்தவர் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாகக் கலந்து ஒற்றுமையாக இவ் நிகழ்வை நடாத்தினார்கள். கிராம மக்களின் கடின உழைப்பினால் நடாத்தப்பட்ட இந் நிகழ்ச்சியை பாராட்டாதோர் எவருமில்லையெனக் கூறலாம். இச் செய்திகள் உலகளாவிய ரீதியில் சென்றடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமரர் பழனித்தம்பி திறப்புக்காரர் அறிமுகம் :

சுயம்புலிங்கப் பெருமானின் கருணை வெள்ளத்தில் அள்ளிப் பருகும் அரிய வாய்ப்பு எனக்கு இளம் வயதிலே கிடைத்திருந்தது. அமரர் பழனித்தம்பி முன்னாள் ஆலய திறப்புக்காரர் அவர்களின் தயவே இதற்கு காரணமாகும். நாங்கள் வருடம் இருமுறை வெள்ளிக்கிழமை பொங்கலுக்குச் செல்வது வழமை. 1946 ஆண்டளவில் கல்வி பயிலும் பொழுது நாங்கள் ஒருமுறை கோவிலுக்கு வந்தோம். அப்பொழுது வெள்ளிக் கிழமைகளிலே மாத்திரம் நடைபெறும் பூசைக்கு ஆயத்தமாகின்ற வேளையில் அமரர் பழனித்தம்பி அவர்கள் கோவிலுக்குள் அழைத்துச் சென்றார். நீங்கள்தான் இன்று தேவாரம் பாடவேண்டுமென்று கூறினார். எனக்கு திடீர் அதிர்ச்சியாயிருந்தது. நான் கோவிலில் ஒருநாளும் தேவாரம் பாடவில்லையெனக் கூறினேன். இங்கே பாடுவதுதான் சரி நீங்கள் பாடுங்கள் என்றார். நான் உடனே "திருவே என் செல்வமே" என்ற தேவாரத்தையும் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளையும் பாடி முடித்தேன். அமரர் சந்தோஷமடைந்து எனது தோளில் தட்டி பாராட்டியதுடன் எனது பெற்றோர்களிடமும் கூறி எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள்.

## சுவாமி பொன்னையா அறிமுகம் :

சுவாமி பொன்னையா அப்பொழுது அவர் சமாதான நீதவானாகவும், கி. ச. அங்கத்தவராக, வட்டை விதானையாராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அமரர் பொன்னையா தனது நெருங்கிய உறவினரென்றும் களுதாவளை இ.கி.ச. பாடசாலை ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரென்றும் கோவிலுக்கு பல நன்கொடை களை வழங்கியவரென்றும் எனக்கு கூறினார். அமரர் தன்மன்பிள்ளை அவர்கள் எனக்கு குரு போன்றவர். என்னுடைய ஆசான் என்றாலும் பொருந்தும்.

களுதாவளை ஒரு பழம்பெரும் பசுமைக் கிராமம் இக்கிராமம் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர்தான் திரு.தன்மன்பிள்ளை அவர்கள். இளம் பிராயத்திலே ஊர்ப்பற்றும் சமயப் பற்றம் தேசப்பற்றும் நிறைந்த இளைஞராகத் திகழ்ந்தார். மகனே நீ என்றென்றும் சுயம்புலிங்கப் பெருமானை நினைத்தபடி இரு என்று தோன்றாத் துணையாக இருந்து அவருக்கு அறிவூட்டியது போன்று அவரது ஆரம்ப வாழ்வு அமைந்திருந்தமை சிறப்பு அம்சமாகும். வயது முதிர்ந்த பின் அவரது தோற்றத்தை நோக்கும்போது முழுக்க முழுக்க ஒரு தெய்வீகம் சார்ந்ததாகவே காணப்பட்டது. அவரின் சாதாரண தோற்றம் யாழ்நகர் நல்லூர் கந்தசாமி கோவில் தேர்முட்டியடியில் தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட அன்புமிக்க யோகசாமி அவர்களின் தோற்றத்தையே ஒட்டியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அமரர் அவர்கள் எப்பொழுதும் புன்முறுவல் பூத்தவராகவே காணப்படுவார். அவருடைய உரையாடல் எளிமையாகவும் அமைதியாகவும் இனிமையாகவுமிருக்கும் எப்பொழுதும் எளிமையான உடைகள்தான் அணிவார். வேஷ்டி சால்வையும்தான் என்றும் வேறு உடைகள் அணிந்ததை காணவில்லை.

நான் ஒருமுறை கதிர்காம யாத்திரை சென்றிருந்த பொழுது சுவாமி பொன்னையா அவர்கள் என்னை அழைத்தார். அவர் காவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை அணிந்திருந்தார். நான்தான் அவருடைய காவியுடையில் முதன்முதலில் எமது பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தித்தது எனக் கூறி மகிழ்ந்தார். அத்தோடு வண்ணக்கரின் சிரேஷ்ட புத்திரர் த.கனகசபை பற்றி விசாரித்தார். அவர் தன்னுடைய உறவுமுறை மைத்துன ரென்றும் கூறினார். தான் துறவறம் பூண்ட விடயத்தை கூறும்படியும் தெரிவித்தார். அத்தோடு தான் பல திட்டங்கள் வைத்திருப்பதாகவும் அதனைச் செவ்வனே செயற்படுத்த வேண்டுமெனவும் கூறினார். தான் ஊருக்கு வருவது பற்றியும் கூறினார். சுவாமி பொன்னையா அவர் ஊருக்குத் திரும்பியதும் திரு.த.கனகசபை, திரு.வே.முருகமூர்த்தி போன்றவர்களின் ஆதரவோடு திருஞானசம்பந்தர் குருகுலத்தை நிறுவினார். களுவாஞ்சிகுடி பிரதேச மக்களுடைய பூரண ஆதரவும் கிடைத்தது. அப்பொழுது கடமை புரிந்த எமது பிரதேச்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் அவர்களின் அனுசரனையும் ஆதரவும் ஒத்துழைப்பம் கிடைத்தது. இன்று குருகுலம் ஒரு ஸ்தாபனமாக திகழ்கிறது. அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் சேவை என்றும் அழியாது என்றும் மக்கள் மத்தியில் நித்திய நினைவில் இருக்கும் இருக்க வேண்டும் அதுவே எனது பிரார்த்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனதில் நிறைந்த மகான்



சைவப்புலவர்
**இ. கோபாலப்பிள்ளை**

தெய்வீக நிலையில் உயர்ந்து அனைவராலும் மதிக்கப் படுபவரும், என்றென்றும் போற்றுதற்குரியவராகவும் விளங்கிய களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய முன்னாள் கௌரவ வண்ணக்கர் திருவாளர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை அவர்களை ஒரு மகானாக, ஞானியராக, தீர்க்கதரிசியாக பார்க்கின்றோம். இப்பெருமைக்குரியவரை நினைவு கூர்வதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

களுதாவளை என்னும் இப்புண்ணிய பதி பெரியோர்களை, சான்றோர்களை உலகுக்கு உவந்தளித்து பெருமை கொள்கின்றது. இவ்வகையில் தர்மத்தின் வடிவமாக சீர் பெறு சின்னத்தம்பி கண்ணம்மை நோற்ற தவப்பேறாய் இருளகற்றும் உதயஞாயிறாய் குலம் தழைக்க வந்துதித்த திருமகனார் தன்மன்பிள்ளை அவர்கள் ஆவார். அப்பெருமகனார் நாம் வாழ்ந்த காலத்தில் இப்பதியிலே வாழ்ந்தவர் என்பதையிட்டு பெருமை கொள்கின்றோம். அமைதி, அடக்கம், அருள் நிறைந்த பார்வை, ஞானியர் போன்றதோர் திருவுருவம் என்பவை அவரது அடையாளம் அப்பெருமகனார் ஆலய முன்றலிலே அமர்ந்திருக்கும் நிலை என்மனக்கண் முன் இன்றும் நிழலாடுகின்றது. அப்பெருமகனை அறிந்துகொண்டது முதல் அவர் பெருமதிப்புக்குரியவர் என்பதை உணர்ந்தேன்.

எங்களது மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் உரிய திருவாளர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்களை ஒரு நல்ல மனிதராகவே பார்க்கின்றோம். ஒருவர் வாழ்கின்ற நன்னெறிமுறைகளே அவர்களை சமூகத்தில் நல்வர்களாகவோ, பிறரால் மதிக்கத்தக்கவர்களாகவோ உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கின்றது இதற்கு உதாரண புருஷராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர். அவரது பொறுமை, பணிவு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பவை அவர்சார்ந்து நின்ற ஆன்மீக வாழ்வுக்கு படித்துறையாக அமைந்தன இப்பெருமகனார் நின்றொழுகிய சீரிய நெறிகளே இன்றுவரை அவரை நல்லவர் என்று எல்லோராலும் மதிக்கப்படும் நிலைக்கு உயர்த்தியது என்றால் மிகையாகாது.

இப்பெருமகனார் ஆலயம் சார்ந்தும். இக்கிராமம் சார்ந்தும் செய்த சமய சமூகப் பணிகள் என்றென்றும் மறக்க முடியாதவையாகும். இன்று களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குகின்றது என்றால் அதன் பெருமைக்கு வித்திட்ட பெருமை திருவாளர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்களையே சாரும். நான் பிள்ளையார் ஆலயத்தினை அண்மித்து வாழ்ந்தமையும், பிள்ளையார் மீது எனக்கிருந்த பக்தியும் பிள்ளையார் ஆலயத்தின் வரலாற்றை எழுதவேண்டிய சந்தர்ப்பமும் இக்கிராமத்தின் வரலாறு பற்றியும் ஆலயத்தின் சிறப்புபற்றியும் அறிய வேண்டியிருந்தது. இதன் பயனாக இப்பெருமகனார் செய்த திருப்பணிகள் பற்றியும் தெரிந்து கொண்டேன். இவை பற்றி எமது முன்னோர்கள், பெரியோர்களுடன் அளவளாவி மேலும் பல்வேறு விடயங்களையம் புரிந்து கொள்ள முடிந்தது.

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சிக்கு இப்பெருமகனார் ஆற்றிய பணிகள் காலமுள்ளளவும் நினைவில் கொள்ளத்தக்கவையாகும். இவர் பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டவேளை இக்கிராமத்திலும் இப்பிரதேசத்திலும் பொன்னுச்சாமி வன்னியனாரது நிர்வாகம் காணப்பட்டது. இதனோடு அக்காலச் சூழ்நிலையில் இவரது பணிதனை மேற்கொள்வதற்கு பக்க பலமாக பல இறையன்பர்கள் செயற்பட்டனர். குறிப்பாக இவரது மருமகன் முறையான பொன்னையா சுவாமிகள் மற்றும் கொங்கமுத்து சுவாமிகள், சி. தம்பி யப்பா விதானையார் செல்லப்பிள்ளை வண்ணக்கர் கார்த்திகேசு வண்ணக்கர், சி.கண்ணமுத்து வண்ணக்கர் ஆக்கியோன் சீ.பூபாலபிள்ளை, ப.கிருஷ்ணபிள்ளை, சின்னத்தம்பி, மு.பழனித்தம்பி (திறப்புக்காரர்) போன்றவர்கள் இறைபணிக்கு மட்டுமன்றி சமூகத் தொண்டுகளிலும் முன்னின்று உழைத்தனர். இவரது காலத்தில் பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்டது. ஆலய தம்ப மண்டபம் புனரமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய தம்ப மண்டபம் புனரமைக்கப்பட்ட வேளை அவரது கனவிலே இதற்கான மரங்கள் கடலில் வந்து அடையும் என அசரீரியாக கேட்டதாகவும், அங்கு சென்று பார்த்த வேளை மரம் கரையொதுங்கியதாகவும், இம்மரமே ஆலயத்திற்கு பயன்பட்டதாகவும் வரலாறு உள்ளது. இவ்வுண்மைச் சம்பவம் மட்டக்களப்புச் சைவக்கோயில்கள் என்ற நூலிலும் பதிவாகியுள்ளது. அதனோடு களுதாவளைப் பிள்ளையார் பற்றிய எனது ஆக்கங்களிலும், நூல்களிலும் இதனை உறுதிப்படுத்தியுள்ளேன். இதனூடாக இப்பெருமகனாரின் பக்தி மட்டுமல்ல விநாயகப் பெருமானது அருளாட்சியும் புலனாகின்றது எனலாம்.

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் இவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளில் வசந்தமண்டபம் புனரமைக்கப் பட்டமை ஆலய விதானம், சுவர் என்பன புனரமைத்தமை, ஆலயமடம், தீர்த்தக்கேணி என்பவை அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஆலயத்தின் மேல்விதானம் கூரை என்பவை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதனோடு ஆலயத்திற்கென எழுந்தருளி விக்கிரகங்கள் எருது, மயில், குதிரை ஊர்திகளும் பெறப்பட்டன.

முருகேசு ஆச்சாரியார் ஆலயத்திற்கென இரண்டு திருவாசிகளை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆலய புனருத்தாரணம் மற்றும் ஆலய மடம் மணித்தூண் என்பனவற்றை திருத்தம் செய்வதற்காக திரு.செ.இரத்தினம் (மேசிலார்) திரு.சி.சோமசுந்தரம் (மேசிலார்) என்போர் பெரும் பங்களிப்பினை இக்காலத்தே வழங்கியிருந்தனர்.

திரு.சி.சோமசுந்தரம் அவர்கள் எனது பெரியப்பா அவர் திரு.தன்மன்பிள்ளை வண்ணக்கர் பற்றி மிகப் பெருமையாகப் பேசுவார். இருவரும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கர் தெரிவு மற்றும் ஆலய புனரமைப்பின்போதும் ஆலய திருவிழாக்கள், பூசைகள் என்பவற்றின் போதும் உடனிருந்து பணிபுரிந்தமை பற்றியும் ஆலய புனரமைப்புக் காக களுதாவளை மக்கள் வாழ்கின்ற தூர இடங்களுக்கு எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று நிதியைப் பெற்று வருவதற்கு எத்தகைய சிரமங்கள் பட்டார் என்பதை கூறுவார். இவ்வாறு இப்பெருமகனார் ஆலயத்தின் உயர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டவர் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. இவரது காலத்தில் முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனோடு ஆலயத்திற்கென மின்சார இணைப்பினையும் உயரதிகாரிகளின் உதவியைப் பெற்று கொடுத்தார். இதன்போது தன்னுடன் ஆலயத்தில் பணிபுரிந்த இறையன்பர்களது பங்கும் பேருதவியாக அமைந்தன. இவ்வாறு ஆலயத்தின் சிரேஸ்ட வண்ணக்கராக ஆலயத் திருப்பணிகளையும், ஆலய நிர்வாகத்தினையும், ஆலய பரிபாலத்தினையும் மேற்கொண்டு வந்துள்ளமை அவரது தனித்துவமான சிறப்பெனலாம்.

இவற்றோடு எமது கிராம மக்களை ஒன்றிணைத்து செயலாற்றினார். இவரது காலத்தில் ஆலயத்திற்கும் எமது கிராமத்துக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் காணப்பட்டன. எமது கிராமத்தில் பிள்ளையார் ஆலயம் சிறந்து விளங்கியது போன்று இக்காலகட்டத்தில் திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலயம் ஆரம்ப வளர்ச்சி நிலையில் இருந்தது. இவ்வாலயத்தின் உருவாக்கத்தில் முன்னின்ற திரு.கதிரேசு சின்னத்தம்பி சுவாமிகளுடனும் ஒன்றுபட்டு ஆலயத்தின் உயர்ச்சிக்கு பங்களிப்பை நல்கினார். இதனோடு களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் அம்சமாக வீதியோரப் பிள்ளையாராக வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கல்லடிப் பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியிலும் இவர் முன்னின்று பணியாற்றினார். குறிப்பாக இக்கால கட்டத்தில் உடையார் என்றழைக்கப்படும் சி.செல்லபிள்ளை வண்ணக்கர் மற்றும் திரு.ஆ.வேலுப்பிள்ளை என்போருடன் ஒன்றிணைந்து ஆலயங்களின் வளர்ச்சிக்கு பங்காற்றினார்கள்.

எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய தொண்டுபுரிந்தவராக அவரைப் பார்க்கின்றோம். தூர நோக்குடைய சிந்தனை கொண்டவராக அவர் செயற்பட்டார் என்பதற்கும் இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் சான்றாகும். அந்தக்கால சூழ்நிலையிலே தம்மைப் போன்று ஆர்வமுள்ள சமூகத் தொண்டர்களின் பங்களிப்புடன் எமது ஊரில் கணேசானந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகசாலையை அமைப்பதற்கு முன்னின்று பங்காற்றினார் எனவும். இதனூடாக இக்கிராமத்தில் சைவப்பாடசாலை ஒன்றை அமைக்கவும் ஏற்பாடுகளை மேற்கொண்டவரென்றும் இராமகிருஸ்ண மிசன் அமைப்பின் உதவியுடன் எமது ஊரின் மத்தியில் இராமகிருஸ்ண வித்தியாலயம் அமைக்கப்பட்டமையும் இதன்மூலம் இக்கிராம மக்கள் பெரும் பயனைப் பெற்றமையும் இவரது உயரிய பணியெனக் கொள்ளலாம். இப்பாடசாலை இராமகிருஸ்ணமிஷன் சுவாமிகளால் 1938ஆம் ஆண்டு கல் வைக்கப்பட்டு 1943 ஆம் ஆண்டு பாடசாலையின் திறப்புவிழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் முதல் மாணவனாக பதிவில் இடம்பெற்றவர் முன்னாள் மட்டக்களப்ப மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.த.கனகசபை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றுவரை இப்பாடசாலை தனித்துவமானதோர் பாடசாலையாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனோடு இக்கிராமத்தின் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் இப்பெருமகனார் பங்காற்றியவராகச் சிறப்பிடம் பெறுகின்றார். குறிப்பாக களுதாவளைக் கிராமம் பூர்வீகமாக குடிமுறைகளைக் கொண்டு விளங்குகின்றது. இறைவன் சந்நிதானத்தில் யாவரும் சமம் ஆகும். எமது கிராமத்தின் குடிமுறைமைகளின் தனித்தவத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணியவராகவும் அவர் போற்றப்படுகின்றார்.

மனித வாழ்க்கையில் ஒருவர் செய்த தானதர்மங்களும் புண்ணியமான செயல்களும் நன்மையையே தரும். இதற்கிடையே தர்ம வாழ்வியல் நெறிநின்று மனிதகுலம் உயர்வடைய பணிகள் புரிந்த இம்மகானது சந்ததியினரும் புகழோடும் சிறப்போடும் வாழ்கின்றமையை நாம் காணக்கூடியதாகவுள்ளது. களுதாவளை என்றால் திருவாளர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் என்ற நாமத்தை குறிப்பிட்டு கேட்பதோடு அப்பெயரைச் சொல்லும் அளவிற்கு அவரது புகழ் பரவியுள்ளது என்றால் அவர் வாழ்ந்த செவ்விய வாழ்க்கையேயாகும். இம்மண்ணிலே பிறந்து நூற்றாண்டைக்கடந்தும் இவ்வாறு ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்தும் மக்கள் மனதிலே நிறைந்திருக்கும் அம்மகானது திருநாமம் இவ்வுலகிலே என்றென்றும் நிலைபெற இறைவனை மெய்யன்போடு பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலம் கருதாத் தந்தை

**த. சுந்தரலிங்கம்**
ஓய்வுநிலை அதிபர்



"ஓம் ஆம் கணபதிவாவா, நவ்வும் பவ்வும் நடுவாகி
ஓங்காரம் சிரசாகி, ஐயும் ரீயும் நாதமாகிய
விக்னேஸ்வராயா வா, வா வந்து
என்முன் நிற்கவே சுவாமி"

**அறிமுகம்:**

தந்தை அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் அவர்கள் பிள்ளையாரின் அருளால் களுதாவளையில் பிறந்து வளர்ந்து பல அரும் பெரும் கருமங்களைச் சாதித்து சிறந்த ஆன்மீகவாதியாகவும், வழிகாட்டியாகவும், பூரண ஆளுமையுடன் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தவர். அவரால் ஆற்றப்பட்ட விலைமதிப்பற்ற ஆலயப்பணிகள், கல்விப்பணிகள் மற்றும் சமூகப் பணிகள் நம் மக்களால் தொடர்ந்தும் கொண்டு செல்லப்படுவதால் எமது கிராமம் நிறைவான வளர்ச்சியும், அபிவிருத்தியும் பெற்று மாவட்டத்தில் முதன்மை நிலையில் திகழ்கின்றது. அவரது அடக்கம், அமைதி, ஒழுக்கம், நேர்மை தன்னலம் கருதாத்தன்மை, தீர்க்க தரிசனம், தலைமைத்துவம் ஆகிய நற்பண்புகளால் உயர்ந்து மாமனிதராகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது.

**ஆலயப்பணிகள் :**

தமது இளமைப் பருவத்தில் இருந்து சமய ஈடுபாடும், தூய நோக்கங்களும் கொண்ட இவர் களுதாவளை பிள்ளையார் கோயில், முருகன் கோயில், மெதடிஸ்த ஆலயம் ஆகியவற்றில் பல பணிகளை மேற்கொண்டுள்ளார். அத்துடன் செட்டிபாளையம் கண்ணகை அம்மன், திருக்கோயில் முருகன் கோயில்களில் அவர் பணிகள் தொடர்ந்துள்ளன. 1938 ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ அரை நூற்றாண்டுகாலம் பிள்ளையார் கோயிலில் தலைமை வண்ணக்கராகவும் கிராமத்தின் தலைவராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சேவை செய்துள்ளார். அவர் ஆலயத்தின் வண்ணக்கராக தேர்ந்தெடுக்கப்படும் போதுகோயில் நாட்டு ஓடு வேயப்பட்ட ஒரு சிறிய கட்டிடம் ஆகும். வெள்ளிக்கிழமை மட்டும் பகல் பூசை நடைபெறும். அக்காலப்பகுதியில் அவர் புதிய கட்டடங்கள், மண்டபங்கள் அமைக்கப்பட வேண்டும். தினப் பூசை நடைபெறவேண்டும். என்றே பிள்ளையாரை மனமுருகி வேண்டி வந்தார். காலப்போக்கில் அவரது பிரார்த்தனைகள் வேண்டுகோள்கள் செம்மையான முறையில் நிறைவேறின.

ஏனைய வண்ணக்குமார்களின் ஒத்துழைப்பும் மக்களின் ஆதரவும் காரணமாக 1945ஆம் ஆண்டில் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இங்கு அமைக்கப்பட்ட பெரிய மண்டபத்திற்கு நேரான இருபத்தைந்து அடி நீளமான மரம் உலாத்தல் பொருத்துவதற்கு தேவைப்பட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில் மிகவும் அளவான அழகான மரம் கடலில் அடைந்து வந்து சேர்ந்தது. இந்நிகழ்வை ஒரு அற்புதம் என்றே மக்கள் நம்பினார்கள். அவர் ஆலய தூண்களில் நாயன்மார்களின் படங்களை வரைய வேண்டும் என விரும்பி இருந்தார். ஆயினும் அது கைகூடவில்லை. ஆனால் பிற்காலத்தில் அவரது பேரன் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் (மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் தலைமை வண்ணக்கராக தொண்டு புரிந்த காலத்தில் கிராம மக்களினது ஒத்துழைப்புடன் நாயன்மார்களின் கற்சிலைகளை இந்தியாவிலிருந்து பெற்று பிரதிஷ்டை செய்தார்கள். தற்பொழுது சைவ சமய பாட ஆசிரியர்கள் மாணவர்களை அழைத்து வந்து இச்சிலைகளை காண்பிக்கிறார்கள்.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆலயத்தின் பிரதம குருவாக சிவஸ்ரீ எஸ்.சந்திரசேகர குரு அவர்கள் சிறப்பாக தொண்டு புரிந்தார். அவர் மிகவும் சிறந்த அறிவாளி, சோதிட விற்பன்னர், நல்ல பண்பாளர் ஆகையால் எனது தந்தையாரும் கிராம மக்களும் அவரை மிகவும் மதித்து நடந்ததுடன் அவரிடம் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் ஆசீர்வாதத்தையும் பெற்றனர். இன்றும் கூட ஆலய நிர்வாகிகள் வண்ணக்குமார் அவரது ஆலோசனையுடனேயே சகல கோயில் கருமங்களையும் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களின் இரண்டாவது மகன் திரு. சுந்தரலிங்கம் அவர்களின் பலாலி ஆசிரியர் கலாசாலை நண்பர்களுடன் அமரர் தன்மன்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதியோடு கந்தனும் :**

தனது முழுநேரத்தையும் பிள்ளையார் கோயில் கடமைகளில் செலவிட்ட போதிலும் எப்பொழுதும் முருகன் ஆலயத்திலும் தொடர்புடையவராகவும், வேண்டிய ஆலோசனைகளையும் ஆதரவையும் வழங்குபவராகவும் இருந்தார். முருகன் கோயில் செங்கற்களால் கட்டப்பட்டு கூரையும் அமைக்கப்பட்ட நிலையில் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த சைவ அன்பரும் அம்பாறையில் கடமையாற்றியவருமான நாகரத்தினம் (கிளாக்கர்) தந்தையாரிடம் ஆலோசனை பெற வந்தார். அவர் அதிர்ஸ்ட இலாபச் சீட்டின் மூலம் பெற்றுள்ள பணத்தின் ஒரு பகுதியை கோயில் தொண்டில் செலவிடவும் அதனை எவ்வாறு செய்ய முடியும் என வினாவினார். தந்தையாரோ அவரை அம்பாறையில் உள்ள ஓட்டு தொழிற்சாலையிலிருந்து ஓடுகளை வாங்கி முருகன் ஆலய கூரை அமைக்க வழங்குமாறு கூறினார். அதனை அவர் செம்மையாக செய்து முடித்தார். இதே போன்று ஒரு முறை சிவஸ்ரீ குழந்தைவேல் குருக்கள் களுவாஞ்சி குடியைச் சேர்ந்தவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் பிரதான குருவிடமிருந்து ஒரு அழகிய முருகன் விக்கிரகத்தை பெற்றுக்கொடுத்தார்.

களுதாவளை மெதடிஸ்த ஆலயம் எங்கள் வீட்டுக்கு அண்மையில் அமைந்துள்ளது. அதற்கு அண்மையில் குருமனையும் உள்ளது. குருமனையில் தங்கியிருக்கும் குருமாரோடு நெருங்கிய தொடர்பை பேணியதுடன் அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் ஒத்தாசைகளையும் தனது இளமைப்பருவம் இருந்தே நல்கி வந்தார். அவர்களும் ஆசீர்வாதத்துடன் நல்ல அறிவுரைகளையும் வழங்கி வந்தார்கள். பிற்காலத்தில் கோயில் அமைந்துள்ள வீதிக்கு தேவாலய வீதி (Church Road) என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**கல்விப் பணிகள் :**

அமரர் அவர்கள் கல்விப்பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இருந்தார். சுவாமி விபுலாநந்தர் சிவானந்த வித்தியாலயத் துடன் இணைந்ததாக ஏழை மாணவர்களுக்காக குருகுலம் ஒன்றை அமைத்தார். அப்போது அந்தப் பிரதேசம் வரட்சியான வனாந்தரம் போன்று இருப்பதை கண்டு மிகவும் வேதனைப்பட்டார். உடனடியாக எமது மக்களின் ஒத்துழைப்புடன் இரண்டு இரட்டைக்கரத்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் அவர்களின் இரண்டாவது மகன் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் ஹொங்கொங் கல்வி நிறுவனமும் மக்காவோ பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்திய இலங்கை அதிபர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வில் கலந்துகொண்டபோது மக்காவோ பல்கலைக்கழக மாணவர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய வாழை குட்டிகளையும் முருங்கைத் தடிகளையும் ஏற்றிச்சென்று நடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். இதன் பலனை குருகுல மாணவர்கள் நன்கு அனுபவித்தார்கள். சுவாமி விபுலானந்தர், சுவாமி நடராஜனாந்தஜீ, சுவாமி ஜீவானந்தஜீ ஆகியோர் மிகவும் நன்றி உள்ளவர்களாக இருந்தார்கள். இந்நிகழ்வு ராமகிருஷ்ண மிஷனுக்கும் நமக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது என்றால் மிகையில்லை.

1942 - 1943 களில் சைவப் பாடசாலை ஒன்றை அமைப்பதில் முன்னோடியாக இருந்தார். இந்த முயற்சியில் ஈடுபடும்போது சுவாரஸ்ய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பொன்னையா சுவாமி அவர்கள் திருகோணமலை துறைமுகத்தில் ஓவர்சியராகக் கடமையாற்றிய வேளையில் அவரை தொடர்பு கொண்டு பாடசாலை அமைக்க பணம் சேகரிக்கும் நோக்கில் புகையிரதத்தில் பயணம் மேற்கொண்டனர். பயணத்தின்போது கல்லோயா சந்தியில் இறங்கினர். அக்காலத்தில் அந்த இடம் பயங்கர காடாக இருந்தது உணவு வசதிகள் இல்லை அங்கு வரும் புகையிரதங்களில் படைவீரர்கள் பயணித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் சேர்ந்து பயணிக்க பயம். எனினும் ஏறத்தாழ 24 மணித்தியாலம் காத்திருந்த பின்னர் வேறு வழியில்லாததால் புகையிரதத்தில் ஏறினர். பயணத்தில் இவர்கள் பயந்தது போல் நடைபெறவில்லை மாறாக படைவீரர்கள் இவர்களை ஆதரித்து உணவுப் பண்டங்களான பிஸ்கற், கேக், சோடா முதலியவற்றை வழங்கினார்கள். நீண்ட நேரம் பசியுடன் இருந்த களைப்பு நீங்கி பயணமும் வெற்றியாக முடிந்தது. வித்தியாலயம் திறக்கப்பட்டபோது எனது தமையன் தன்மன்பிள்ளை கனகசபை அவர்களின் பெயர் முதலாவதாக பதியப்பட்டது.

1951ஆம் ஆண்டில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை அமைப்பதிலும் ஊக்கம் செலுத்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் உதவி பெறப்பட்டது. இங்கு நீண்ட காலமாக இருந்த மெதடிஸ்த வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டது. இவ்வித்தியாலயம் எமது மாவட்டத்தில் சிறந்ததோர் தேசிய பாடசாலையாக திகழ்கின்றது. இவற்றுக்கெல்லாம் மேலாக பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான உதவிகளை, தனது வீடு வளவு, நெற்காணி ஆகியவற்றை அடைமானமாக வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் பெற்று அளித்தார்கள். அவர்கள் அனைவரும் கடன்களை உரிய முறையில் அடைத்து விட்டமை சிறப்பம்சமாகும். இப்பணியில் தாயாரின் ஒத்துழைப்பு போற்றுதற்குரியதாக அமைந்திருந்தது.

## எளிமை, அடக்கம், அமைதி :

எப்பொழுதும் அழகான தூய வெண்ணிற வேஷ்டியும் சால்வையும் அணிந்திருப்பார். அவரது வசீகரமான முகமும் கருணை நிறைந்த கண்களும் அழகிய தாடியும் கொண்ட நல்ல உடற்கட்டமைப்பு அவருக்கான ஆள் அடையாளமாக அமைந்திருந்தது. இவரது தோற்றத்தைக் கண்ட முன்னாள் கல்வி அமைச்சர் தகாநாயக்க அவர்கள் எப்பொழுதும் சுவாமிஜி என அழைப்பார்கள். அவர் வேண்டி நிற்கும் கருமங்களுக்கு முன்னுரிமை வழங்கி செய்து கொடுப்பார். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் பண்டிதர் பூபாலபிள்ளை அவர்களை பண்பற்ற முறையில் அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைக்கு இடமாற்றம் செய்து விட்டார்கள். தந்தையார் ஆசிரியர் இருவரையும் அழைத்துக்கொண்டு கொழும்பு சிராவஸ்தியில் கல்வி அமைச்சர்களை சந்தித்து விடயத்தை விளக்கினார். உடனடியாகவே இடமாற்றத்தை ரத்து செய்து மட்டக்களப்பு வாழ் சைவ, தமிழ் பெருங்குடி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.



அமரர் தம்பிராசா அண்ணன் அவர்களின்
திருமண வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் தலைமை வண்ணக் கராக தொண்டு புரிந்த போதிலும் எப்பொழுதும் கோயில் ஓரமாக ஒதுங்கி நின்று இறைவனை வழிபடுவார். வெளியிடங்களில் இருந்து வரும் பக்தர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுப்பார். இந்த பழக்கம் தற்பொழுதும் கடைபிடிக்கப்படுகின்றது. அதி காலையிலும் மாலையிலும் அடிக்கடி ஆலயத்துக்கு சென்று அங்கு கோயில் பணிகளில் ஈடுபடுவோருக்கு உதவிகளும் ஆலோசனைகளும் வழங்குவார். ஆலயத்தில் இருக்கும் போதெல்லாம் அமைதியாக இருப்பார் ஆயினும் மிகவும் கவனமாக சகல பணிகளையும் கண்காணிப்பார்.

**உடல் நலமும் உள நலமும் :**

தினமும் பல கிலோமீட்டர்கள் நடப்பதனாலும், வெற்றிலை செய்கை, வேளாண்மைச் செய்கை ஆகியவற்றில் ஈடுபடுவதனாலும் நல்ல உடல்நலம் உடையவராக இருந்தார். வாழ்நாளில் மருந்துகள் அருந்தியது இல்லை. தடுப்பூசிகள் அல்லது ஊசி மருந்துகள் ஏற்றியதில்லை என்பது எமக்கு வியப்பைத் தரும் விடயமாகும்.



தம்பி அமரர் அருள்மாணிக்கம் அவர்களின்
திருமண வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விட அவரது உடல் நலம் மிகவும் சிறப்பானது அதற்குக் காரணம் அன்னாரது தீவிர கடவுள் நம்பிக்கையாக இருக்கலாம். அத்துடன் எங்கள் தாயாரின் கரிசனையும் உதவி ஒத்தாசைகளும் அவரது உடல், உள நலத்தை பேணுவதில் பெரும் பங்களிப்பை செய்திருந்தது.

## விஞ்ஞான கணித அனுபவ அறிவு :

எமது கிராம மக்கள் மட்டுமன்றி களுவாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, செட்டிபாளையம் போன்ற கிராமங்களை சேர்ந்தவர்களும் மரங்களின் கனவளவு, பரப்பளவு ஆகியவற்றை கணிப்பதற்கு தந்தையாரின் உதவியை நாடி வருவார்கள். அவர்களுள் கணித விஞ்ஞான ஆசிரியர்களும் அடங்குவார்கள். $\pi = 3\frac{1}{7}$ அல்லது $\frac{22}{7}$ என்ற சூத்திரத்தை மட்டம் தட்டி இலகுபடுத்தி $\pi = 3$ எனக்கொண்டு நொடிப்பொழுதில் கனவளவு, பரப்பளவு ஆகியவற்றைக் கணித்து கொடுப்பார். 1960 - 1970 களில் அவரது கணிப்பின்படி வீடு கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் எண்ணிக்கையைக் கொண்டு மொத்த செலவை குறிப்பிடுவார். அவரது கணிப்பின்படி 25,000 செங்கற்கள் பயன்படுத்தப்படும் ஒரு வீட்டிற்கு மொத்த செலவு ஏறத்தாழ 25,000 என்பதாகும். அவர் கட்டிய ஒருவீடு மூன்று அறை, மண்டபம், குசினி கொண்டது. பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கை 22,500 செலவும் 22 ஆயிரத்து 500 ரூபாயாக அமைந்ததை நேரில் கண்டோம். அத்தோடு பிளேட் போடுவதற்கு ஒரு சதுர அடிக்கு 10 ரூபாய் செலவாகும் என்பதும் அவரின் அனுபவ அறிவு ஆகும்.

1940 காலப்பகுதியில் பிள்ளையார் கோயில் வீதியில் இருந்த கிணறு ஒன்றை பிடுங்கி அதே நிலையத்தில் புதிய கிணற்றை அமைக்க விரும்பினார். ஆயினும் பழைய கிணற்றின் அடிக் கொட்டினைப் பிடுங்குவதில் சிரமம் காணப்பட்டது. அவர் நெம்புகோல் சில்லும் அச்சாணியும் ஆகிய விஞ்ஞான முறை சார்ந்த எளிய பொறிமுறைகளை பயன்படுத்தி வெற்றி பெற்றார். இவரின் விஞ்ஞான - கணித அனுபவ அறிவை அறிந்திருந்த சுவாமி விபுலானந்த அடிகளார் மட்டக்களப்பு கல்லடிப் பாலம் அமைக்கப்படும் போது இவரை அழைத்து அங்கு பயன்படும் விஞ்ஞான நுணுக்கங்களை தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவரிடம் படித்த அறிவுடன் அனுபவத்தால் படிந்த அறிவும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிர பக்தியும் தீர்க்கதரிசனமும் :

1960களில் ஒரு திங்கட்கிழமை அதிகாலை நானும் எனது நண்பரும் (திரு.சி.தம்பிராசா வங்கி முகாமையாளர்) கடற்கரைக்குச் சென்றோம். கடலில் ஒரு பெரிய மரம் அடைந்து வருவதைக் கண்டோம். வீட்டிற்கு வந்ததும் தந்தையாரிடம் இது பற்றிக் கூறியதும் தனது சகல வேலைகளையும் ஒதுக்கி தள்ளிவிட்டு சிலரை உதவிக்கு அழைத்துக் கொண்டு கடலை நோக்கிச் சென்றார். செல்லும்போது மூன்று மரமாவது வேண்டும் பிள்ளையார் கோயிலுக்கு மட்டுமன்றி முருகன் கோயிலுக்கும் மரம் வேண்டும் எனக்கூறிச் சென்றார்.

நான் வந்தாறுமூலை அரசினர் மத்திய கல்லூரிக்கு சென்று விட்டேன். அதே தினத்தில் மூன்று மரங்கள் கடலில் அடைந்து விட்டன. பெரிய மரங்கள் ஆகையால் கடற்கரையிலேயே வைத்து மரத்தை அரிந்து வாகனங்களில் ஏற்றினர். இந்த அதிசயத்தை கேள்வியுற்ற சைவ அடியார்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வந்து பார்வையிட்டனர். எனது வித்தியாலய விஞ்ஞான கணித ஆசிரியர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருவாளர்கள் இராமதிலகம், பூபாலசிங்கம், செல்லத்துரை, வேலுப்பிள்ளை ஆகியோர் என்னையும் அழைத்துக் கொண்டு வந்து பார்த்ததுடன் ஆலய பூஜையிலும் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு மரமும் தந்தையார் ஒரு பக்கம் நின்றால் மறுபக்கம் தெரியாத அளவு விட்டம் உடையவை.


தந்தையார் தனது வாழ்நாளில் தன்னலம் கருதாது பிறர் நலம் கருதியே சகல கருமங்களையும் பணிகளையும் செய்தார். இறைவன் அருளாலும் அவரின் ஆசீர்வாதத்தாலும் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் சகல பாக்கியங்களும் பெற்று சீராகவும் சிறப்பாகவும் வாழ்கின்றோம் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதாஞ்சலி :

# அன்பின் நிலைகொண்டு வாய்மைதனை ஓம்பிவாழ்ந்து பணிசெய்த சமய சமூக மேலாளர் தன்மன்பிள்ளை



**ப. சிவலிங்கம்** JP

-களுதாவளையான்-

களுதாவளை பிள்ளையார் ஆலய முன்னாள் நிருவாகசபை உறுப்பினர், ஸ்ரீமுருகன் ஆலய வண்ணக்கர், இந்து இளைஞர் மன்றத் தலைவர் ஓய்வு பெற்ற நிருவாக அலுவலர்.

ஓம் எனும் பிரணவத்தின் ஓர் உருவேகணநாதா
தாமாக வநந்தமர்ந்த சுயம்புருக் களுவையானே
தேமதுரத் தமிழாலே வண்ணக்கர் தன்மன் பிள்ளைதனை
பாமாலையால் பாட வந்தெனக்கு கட்டுரையே

புத்தகமதில் பூவில் உறைந்து புலவோரின்
வித்தகம் தனை வெளிப்படுத்தி அவர் புத்தியிலே
நர்த்தனமாடுகின்ற நாயகியே கலைவாணி
உத்தமன் பிள்ளை பற்றி ஓதவே துணைநில்லே

வாவியும் வங்காள விரிகடலும் வளமாக்கும்
ஏரியும் எழில் குளமும் எங்கும் ஏற்றமுறச் செய்யும்
வாரி வழங்கும் நெல்வயல் வாழை பயிரினமும்
பாரி வள்ளலென் பரிந்தளிக்கும் களுதாவளையே

கற்றவர்கள் கருணையுடன் களித்திடும் களுவைநகர்
உற்றவரும் மற்றவரும் உவந்து வாழும் கலைக்கூடம்
நற்றவத்தோர் அருளாட்சி நடனமிடும் புனிதபூமி
குற்றமற்ற கோயில் பல பெற்றுயர்த்த திருத்தலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் பல கண்டுயர்ந்த பழம் பதியாம் களுதாவளை
தலம் புகழ வாழ்ந்த சின்னத்தம்பி தம்பதியார்
நலமெலாம் நிலைக்க தன்மன்பிள்ளை நாமம் பூண்டு
துலங்கிடச் சிறப்பெலாம் தூயவன் பிறந்தனரே

நிலமகளின் பொறுமையை நித்தியமாய் அணிந்தே
நாமகளின் அருளினால் கலைகள் பல தெரிந்தே
பூமகளின் கருணையினால் பொலிந்திடு செல்வம் பெற்றே
மலைமகளின் பார்வையினால் மருள் அச்சம் நீங்க வாழ்ந்தார்.

குவலயம் புகழ வாழ்ந்த வாலயப்பிள்ளை மணமகளாய்
தெய்வத் துணையால் திருமணம் செய்திணைந்தே
எய்யும் துயர் ஏதும் அணுகாத இல்லறத்தை
பையவே அனைத்துப் பார்புகழ வாழ்ந்தனரே

கலை கலாசார சமூக மேம்பாட்டுக் கருத்துடனே
அலையாய் இளைஞர்களை அணிதிரட்டி கணேசானந்தா
நிலையமதை வாசிக சாலையுடன் இயக்கி
பலபலவாய் பணி செய்து பொதுப்பணியில் புகுந்தனையே

பெத்தாக் கிழவி குடும்ப பிள்ளையார் கோயில் வண்ணக்கராகி
உத்தமன் இவனுக்கு உவமை இல்லை என்றவாறு
சித்தமெல்லாம் சேவை சிறந்திடவும் களுதாவளை
குற்றமற்ற கீர்த்திகூடி நிலைபெறவும் செயற்பட்டார்.

ஆலயத்தின் முன்மண்டபம் அணிஅணியாய் அமையவும்
சாலச் சிறந்ததங்கு மடந்தனைக் கட்டிடவும்
சூழசுற்று மதில் வசந்த மண்டபம் இணையவும்
சீலமுற இவர் செய்த சேவையின் பங்களிப்பை என்னென்போம்.

கச்சிதமாய் திகழ்ந்த பிள்ளையார் ஆலயத்தே
உற்சவமாய் வருடந்தோறும் திருவிழா தீர்த்தமும்
மெச்ச ஊர் எல்லாம் முதன் முதலில் ஆரம்பிக்க
இச்சை நிறைந்து எல்லோருடனும் செயற்பட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலின் சிறப்பையும் கல்வியின் உயர்வையும் உணர்ந்தே
உற்ற எம் ஊர் மக்களை ஓர் அணியில் கூட்டியே
பக்கபலமான நிதியினைப் பல இடமும் திரட்டி
குற்றமற்ற இராமகிருஷ்ண வித்தியாலயம் தொடங்கியதே

அன்று கிராமத்தே அளப்பெருங் கல்லூரி ஒன்றினை அமைத்தல்
நன்றென்பதை உணர்ந்து மக்களுடன் இணைந்து உழைத்தாயே
இன்று அது தேசிய பாடசாலையில் சேர்ந்தே சேவை தருகின்றதே
என்றும் உன் புகழ் நிலைத்திருக்க இதுவும் ஒரு கருமமன்றோ

நல்ல கணவனாய் நாடு புகழும் தந்தையாய்
சொல்லரிய மூவர்க்கும் துணை நிற்கும் சுந்தரனாய்
கள்ளமற்று இனம் காத்து எல்லோர்க்கும் காவலனாய்
இல்லறத்தின் இலக்கியமாய் இணைந்ததே இவர் வாழ்க்கை

வேறு

நியமம் தவறா கடமையாவும் நேர்மையாக நிறைவு செய்தே
கயமை மனதில் கடுகளவும் சேரா உண்மைதனை கொண்டே
பயமேயற்ற துணிவுடனே இறைவன் பணியே மிகையாக
தயவு அன்புதனில் தோய்ந்த தலைவர் ஒருவர் இவர் ஆனார்

பத்தி பரிவு பொறுமையுடன் வாய்மை எல்லாம் அணி செய்ய
வெற்றியுடனே கோயிலையும் வேண்டும் கிராம வளத்தினையும்
சித்தி பெறவே தனைத்தந்தே சிறந்த சேவை செய்தமையால்
நித்தயமாய் எம்மனத்தே இறையுருவாய் இருந்தாரே

கோயில் திருப்பணிக்கு கடல் மரம் அடைந்த வேளை
போய் அதனை இளைஞரிடம் இவரே புகன்றிடுவார்
தோய்ந்த அருள் உணர்வுடன் அனைவரும் தரைசேர்ப்பார்
வாய்ப்பான மரமெல்லாம் வந்து சேரும் ஆலயத்தே

கருணை பொலியும் அருள் கண்பார்வை எமை கவரும்
இருமை வினையகற்றும் விபூதி இலங்குமுகமும் அருள் அளிக்கும்
அருமையாய்க் காற்றில் அசைந்திடுதாடி அழகு சுரக்கும்
பெருமையினைப் பறைசாற்றும் வெள்ளை வேட்டியும்
சால்வையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை காலணி அறியா அவர் பாதம் ஆலயமடையும்
பதி தன்னைப் பரிசீலித்தே பணியாளரைப் பார்வையிடும்
சரியாக மாலையிலும் சுறுசுறுப்பாய் மீண்டும் கோயில் வரும்
கதியாக கணநாதன் தனைக் கலந்த கருணையனே

## வேறு

ஊரிலே பிரச்சினைகள் உருவெடுத்தால் பொதுக்கூட்டம் கூட்டி
நேரிலே அனைவருக்கும் தீர்க்கும் வகை தெரியக்கூறி
ஆரின் கருத்தையும் அகற்றாது அன்பாய்க் கேட்டு
ஆரிய தீர்வினை செயற்படுத்திய தலைவன் நீ அன்றோ

ஆன்மீகத் தொண்டு இராமகிருஷ்ண அற்புத நிறுவனத்தின்
மேன்மையுறு சுவாமி ஜி மேலும் உயர் ஞானிகளுடனே
தேன்பால்போல் தித்திக்கச் சேர்ந்தே இருந்தவரே
வேதாகம கருத்துரையை ஆலயத்தே ஆற்றச் செய்தாயே

பூவென்றால் செந்தமிழில் தாமரை பூவினையே குறிக்கும்
பாலென்று பகர்ந்தாலோ பசுவினது பாலினையே அழைக்கும்
மேலோட்டமாக வண்ணக்கர் என வழக்கில் அழைப்பதோ
ஆல்போல் வேரூன்றி எம்மனத்தே அணி செய்யும்
உங்களையே ஐயா
வண்ணமெனில் அழகு நக்கன் சிவன் நாமமாகும் அரன்
வண்ணமாய் மிளிர்வோனே வண்ணக்கர் ஆவாரே
எண்ணமெலாம் சிவன் வடிவாய் ஏற்றமுற இருந்தோனாய்
திண்ணமாய் கூறுவோம் எங்கள் தன்மன்பிள்ளை
வண்ணக்கர் திகழ்ந்தாரே

பேராளன் கனகசபை பாராளுமன்ற உறுப்பினர் மூத்தமகன்
மேலான சுந்தரர் மகாலிங்கம் அதிபர்களாய் மலர்ந்த மக்கள்
சீரான பரமேஸ் இராசேஸ் ஆசிரியருடன் சேர்ந்த
சிவனேசம் மகேஸ்
பூவான அரசு சுகுணா இல்லறத்தில் பொலிவுற்ற புத்திரிகள்

வழிவந்த முத்தான அவர் மக்கள் குடும்ப உறுப்பினரோ
எழில் சிந்தும் வைத்தியர் ஏற்றமுறு அரச பதவியணி அலுவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிர்கின்ற சட்டத்தரணி மன்னுபுகழ் கல்விப் பணிப்பாளர்
நலியாதுழைக்கும் ஆசிரியர் நற்பொதுபணி நாட்டத்தாரே

மேலான இல்லற வாழ்வால் மாண்புற செயல்களாலும்
மாறாப் புகழ் பரப்பி உன் வித்து நல் விருட்சமாய் வளர்ந்ததே
ஊனான உன் உடம்பு அக்கினியாய் ஓய்ந்தாலும்
பேரான உன்புகழ் உடம்பு மாறாது வாழ்கிறதே

உள்ளும் புறமும் வாய்மையினை உவந்து அணிந்த
உத்தமனாய்
கள்ளமற்ற ஒழுக்கத்தை கண்ணாய் காத்த குணாளனாய்
எள்ளி நகைத்து எழியோரை ஒதுக்க எண்ணாப் பெரியோனாய்
சொல்லற்கரிய இல்லறம் சுடராய் ஒளிர வாழ்ந்தாரே

சித்தமதில் கரவு சேராத உள்ளத்தாய்
வித்தான வாய்மை மாறாத வண்ணத்தாய்
வற்றாத அன்பிலே வாழ்ந்தே இணைந்திருந்தாய்
முத்தான சேவைகளை முழுமையாய் தந்துநின்றாய்

பாவங்களை ஒதுக்கித் தவ ஞானத்துடன் வாழ்ந்தாய்
தேவைகளைக் குறைத்து தொண்டு சேவைதனில் திளைத்தாய்
நோவையெலாம் சகித்து ஒழுக்க நேர்மைதனைக் காத்தாய்
சோர்வையெலாம் துரத்தி அவா சேரா உளம் கொண்டாய்

ஆயுள் உள்ள மட்டும் ஆலயத் தொண்டனாய் நின்றாய்
வாய்ச்சொல் மனம் செயலால் வாரணனை வணங்கி நின்றாய்
நேயமுடன் இல்லறத்தை நேர்மையுடன் கொண்டாய்
தூய்மையுடன் வண்ணக்கராய் துலங்கியே புகழ் பூத்தாய்


தெய்வத்தின் மறு உருவாய் சேர்ந்தே வாழ்ந்து இருந்தவரே
ஐயா உந்தன் இணையில்லா செயல்களெல்லாம் நிலைத்திருக்க
பையவே விடுத்து எமைப் பரமனடி சேர்ந்தாலும் புகழ்
பெய்யும் உந்தன் நல் எச்சங்களில் வாழும் ஐயா வாழியவே.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்துள் எல்லாம் நிறைந்து நிற்கும் உத்தமர்



கலாபூஷணம்
**ஆ. அரசரெத்தினம்**

அன்பாளரும் அடக்கமுடையவருமான வண்ணக்கர் என்ற பெயருக்கு மிகவும் பொருத்தமானவருமான உயர்திரு அமரர் தன்மன்பிள்ளை அவர்களுக்கும் எனக்கும் மிக நெருக்கமான உறவிருந்தது. இன்றைக்கும் அவரது பிள்ளைகளை வண்ணக்கரின் பிள்ளைகள் என்ற அறிமுகத்துடன் இந்த பகுதி மக்கள் அறிந்து கொள்வார்கள். எனக்கும் அமரருக்குமிடையே இந்த நெருக்கமான உறவு ஏற்படுவதற்கு இருவரிடமுமிருந்த சில ஒருமைப்பாடுகள் காரணமாகலாம். உண்மையைச் சொல்லப் போனால் இவருக்கு வெற்றிலைத் தோட்டம், நெல்வயல், பிள்ளையார் கோவில் என்ற மூன்று இடங்களில்தான் வேலை என்றால் எனக்கும் அவ்வாறுதான். எங்களின் வயல் ஒன்று அமரரின் வயல் அருகேயிருந்தது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

என்னுடைய மாமனார் அமரர் க.வ.பொன்னுத்துரை அவர்கள் பேனாச்சிகுடி கௌரவ வண்ணக்கராக சில காலம் கடமையாற்றியவர். இவரும் அமரர் அவர்களும் மிகவும் நெருங்கிய உறவினர்கள். இருவரிடமும் இறுக்கமான உறவும் புரிந்துணர்வும் காணப்பட்டது. கோவில் விடயம், ஊர் விடயங்கள் சம்பந்தமாக பேசுவதற்கு திரு. தன்மன்பிள்ளை அவர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். அவரும் மாமனாரும் மிகவும் அன்பாவும் சந்தோஷமாகவும் கலந்துரையாடுவார்கள். அதைப் பார்த்து சந்தோஷமடைவேன். அவர்களின் சம்பாஷணைகளில் வெளிப்படும் தகவல்களை நான் மிகவும் கவனமாகக் கேட்டுக் கொள்வேன். சிலவேளைகளில் நானும் கலந்துகொள்வேன். இருவரும் மிகவும் அன்னியோன்னியமாக பழகுவார்கள். கோவில் கூட்டங்கள், ஊர் மக்களின் கூட்டங்கள் அனைத்திலும் தலைமை தாங்கி நடத்த வேண்டிய பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கிருந்தது. அவர் அதிகம் பேசமாட்டார் மற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ளுவார். சந்தர்ப்பம் வரும் போது ஓரிரு வார்த்தையில் மிகவும் பொருத்தமான பதில் வழங்குவார். கூட்டங்களில் ஏற்படும் சர்ச்சைகளை சாதுரியமாக செயற்பட்டு தீர்த்து வைப்பார்.

கூட்ட இறுதியில் சகலராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுகளையெடுத்து சகலரையும் திருப்திப்படுத்துவார். 43 வருடகால சேவையின் பின்னர் தானே பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அவரைப் பற்றி எழுதுவதாகயிருந்தால் எத்தனையோ விடயங்களை குறிப்பிடலாம். தற்போதைய சூழ்நிலையில் எனது மனதில் பதிந்த ஓரிரு விடயங்களை எழுதியிருக்கின்றேன்.

பிள்ளையார் கோவில் வண்ணக்கராக மிக நீண்ட காலம் பதவி வகித்தவர்களுள் இவரையும் குறிப்பிடலாம். இவரோடு உடன் இணைந்து செயற்பட்டவர்களுள் போற்றிநாச்சி குடும்ப வண்ணக்கராக பதவிவகித்தவர் சி.செல்லப்பிள்ளை அவர்கள். இவரும் ஒன்றாகவே இணைந்து செயற்பட்டவர்கள். ஒரு காலத்தில் கோவிலுக்கு முன் மண்டபமொன்று கட்டுவதற்காக 24 அடி நீளத்தில் ஒரு உலாத்தல் தேவைப்பட்டது. அதற்காக பழுகாமத்தில் இருந்த மரம் வெட்டிவிற்கின்ற ஒரு குழுவினரிடம் இந்த விடயத்தினைக் கூறி அதற்கான அளவிலான ஒரு மரத்தினை கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களும் இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அலைந்து திரிந்து ஒரு மரத்தினை கண்டுபிடித்தனர். பொருத்தமான ஒரு நாளில் தாவளவண்டில் கட்டி மரத்தைக் கொண்டு வந்தனர். அதனைக் கொண்டுவரும் போது பழுகாமத்தைச் சேர்ந்த வனபரிபாலன திணைக்களத்தினுடைய அதிகாரி ஒருவர் கண்டுபிடித்துவிட்டார். அவர்கள் களுதாவளைப் பிள்ளையாருக்கு உரிய மரம் என்று சொல்லியும் அவர் கேட்கவில்லை. இதனால் விரக்தியுற்ற அவர்கள் இச் செய்தியினை மரத்தை கொண்டுவரச் சொன்ன களுதாவளைப் பிள்ளையார் ஆலய வண்ணக்குமாரான சி.வ.தன்மன்பிள்ளை, சி.வ.செல்லப்பிள்ளை ஆகிய இருவரிற்கும் செய்தியை தெரியப் படுத்தினர். இவர்களும் அக்காலத்திலே ஆற்றைக் கடப்பதற்கு இருந்த வள்ளத்தில் ஏறி அங்குசென்று வனபரிபாலன திணைக்கள அதிகாரியான அவரிடம் விடயத்தைக்கூறி கெஞ்சி மன்றாடி கேட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனர். அவர் ஒன்றுக்கும் மசியவில்லை. தங்களுடைய இடுப்பிலே கிடந்த வெள்ளி அரைநாண் கொடிகளை கழற்றி கையூட்டாக் கொடுத்தும் அவர் இணங்கவில்லை. இந்த விடயம் பழுகாமத்திலுள்ள உடையாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அவரும் களுதாவளைப் பிள்ளையாருக்குத்தானே என்று சொல்லியும் விடாப்பிடியாக அந்த அதிகாரி மறுத்து விட்டாராம். வண்ணக்குமாரான இருவரும் மிகுந்த கவலையோடு திரும்பி வந்தார்களாம். பழுகாமத்தில் உடையாரின் வீட்டுக்கு பக்கத்திலிருந்த பாழ் வளவிற்குள் அந்த மரம் கிடந்து அழிந்து போனதாகவும் தடுத்து நிறுத்திய அந்த திணைக்கள அதிகாரிக்கு பிள்ளையாரின் திருவருள் சக்தியினால் தீராத வருத்தம் ஏற்பட்டதாகவும் நாட்டுவைத்தியம் மேலைத்தேய வைத்தியம் என்பவைகளினாலும் குணப்படுத்த முடியாமல் களுதாவளைப் பிள்ளையாரின் திருவடித் தாமரைகளை பற்றிப்பிடித்துக் கொண்டு கோவிலடிக்கு வந்து வழிபாடு செய்துதான் நோய் குணப் பட்டதாகவும் கவலையோடு வந்த வண்ணக்குமார் இருவரின் கனவிலும் தோன்றிய பிள்ளையார் கவலைப்படாதீர்கள் எனக்குரிய மரம் கடலிலேயே வருகிறது போய் அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று பிள்ளையார் சொல்லியபடி சில நாட்கள் கழித்து குறிப்பிட்ட அளவு நீளமும் உறுதியுமான மரமொன்று கரையொதுங்கிய தாகவும் அதனை கண்டெடுத்தவர்கள் அங்கு வைத்தே அறுத்து கொண்டுவந்து வேலையினை பூர்த்தி செய்ததாகவும் மேசிலாரும் அந்த கட்டிட வேலை செய்பவருமான அமரர் சின்னத்தம்பி சோமசுந்தரம் அவர்கள் கூறினார்கள்.

## மற்றவர்களை மதிக்கின்ற பண்புக்குக் கிடைத்த பரிசு :

மேலும் தெரியவருவதாவது மட்/செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் வரலாறு என்ற புத்தகத்தில் 168ம் பக்கத்தில் செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர்கள் என்கின்ற ஒரு பட்டியலில் சி.வ.தன்மன்பிள்ளை அவர்களின் பெயரும் இடம்பெற்றிருப்பதை காணலாம். மேலும் இவருடைய மகனான த.கனகசபை அவர்களும் இவருக்கு பின்னால் தலைமை வகித்துள்ள மையை அறியக்கூடியதாக இருக்கின்றது. உயர்வாக மற்றவர்களை மதிக்கின்ற பண்பாளர் களுக்கு உயர்ந்தவர்களுடைய அவையிலே மதிப்பளிப்பார்கள் என்பதை இவ்விடயங்கள் தொட்டுக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் களுதாவளைக் கிராமத்தில் இப்போது ஆறு குடும்பங்கள் கோவில் நிருவாகத்திற்கு பொறுப்பாளிகளாக நிருவாகஞ் செய்கின்றனர். இவர்களுள் வள்ளிநாயகி குடும்பம் புதிதாக இணைக்கப்பட்ட குடும்பமாகும். 1956 ஆம் ஆண்டு திருவிழா ஆரம்பிக்கப்பட்ட போது இவ்வூரில் இருந்த இவர்களுக்கும் உரிமை வேண்டுமென்ற பிரச்சினை எழுந்தது. தன்மன்பிள்ளை அவர்களின் மனைவியும் இந்தப் பிரிவினுள் அடங்குவதனால் அவரது பிள்ளைகளுக்கும் இந்தப் பிரச்சினை இருந்தது. அதனை தீர்ப்பதற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அப்போது அக் குடும்பத்திற்கு வள்ளிநாயகி குடும்பம் என்று பெயரும் வைத்து அமரர் கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களை வண்ணக்கராகவும் வைரமுத்து கணபதிப்பிள்ளை அவர்களை கடுக்கண்டவராகவும் நியமித்திருக்கின்றார்கள்.

## முதன்முதலாக கிராமசபைத் தலைவர் பதவி (அக்கிராசனர் பதவி)

இவற்றோடு கிராமசபைத் தலைவர் பதவிக்கு களுதாவளைக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் ஊர் மக்களிடையே காணப்பட்டது. அக்காலத்தில் இருந்த நியதியின்படி ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்த ஒருவர்தான் அப்பதவிக்கு பொருத்தமானவர் என்ற கருத்தும் நிலவியது. இக்கிராமத்துக்கு இரண்டு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களுள் அமரர் த.வேதநாயகம் அவர்கள்தான் பொருத்தமானவர் என்று முடிவெடுக்கப்பட்டது. அந்தக் காலத்தில் S.U.எதிர்மன்னசிங்கம், S.M.இராசமாணிக்கம் என்பவர்களிடையே பாராளுமன்ற தேர்தல் போட்டி நிலவியது. அந்தக் காலப்பகுதியில் த.வேதநாயகம் என்பவர் இராசமாணிக்கம் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளராக இருந்தமையால் பல தடவைகள் கிராமசபைத் தேர்தலில் போட்டியிட்டும் வெற்றிபெற முடியவில்லை. இதனால் மன உளைச்சல் அடைந்த கிராமமக்கள் இதனை சமாளிப்பதற்கு தன்மன்பிள்ளை அவர்கள்தான் சரியான ஆள் என்று கணிப்பிட்டு அதற்கான பூர்வாங்க ஆலோசனைக் கூட்டமொன்றினைக் அமரர் சி.வ.தன்மன்பிள்ளை அவர்களது வீட்டிலேயே கூட்டினர். இப்போது ஒரு பிரச்சினை அக் கூட்டத்தினிடையே கிளம்பியது. வேதநாயகம் அவர்கள் இராசமாணிக்கம் பாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை எப்படி தெரிவுசெய்வது என்ற ஒரு சலசலப்பு கூட்டத்தினிரிடையே கிளம்பியது. அங்கே இருந்த பரசுராமர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் வேதநாயகம் அவர்களை நான் அழைத்து வருகின்றேன் என்று சொல்லி அவரும் இன்னும் சிலருமாச் சேர்ந்து சென்று வேதநாயகத்தை கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். அவரிடம் விடயங்களைச் சொல்லி புரியவைத்தனர்.

இத்தோடு பிரச்சினை முடியவில்லை. இதற்கு முன்பு வெற்றிபெற்று இருக்கின்ற அமரர் சி.தம்பியப்பா, அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா இவர்களையும் சமாளிக்க வேண்டுமே என்ற கருத்தும் மேலெழுந்து நின்றது. உடனடியாக க.பொன்னையா அவர்களை அழைப்பித்து கேட்கவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர் பொன்னையாவுக்கு இவ்விடயங்களைக் கூறி அவரை அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக அவரது வெற்றிலைத் தோட்டத்திற்கு சென்றுவிட்டார்கள். எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களை தேடியவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியில் உளவாளிகள் மூலம் விடயத்தை அறிந்து கொண்ட சிலர் வெற்றிலைத் தோட்டத்திற்கு சென்று பொன்னையாவை அழைத்து வந்தனர். இரவு 10.00 மணிக்கு மேலிருக்கும், பொன்னையா வந்தபின்னர் தன்மன்பிள்ளை அவர்கள் அவரை தனியாக அழைத்துச் சென்று இரகசியமாகப் பேசி சரிக்கட்டி விட்டார். அவர்கள் இருவருமாக கூட்டத்தினரி டையே வந்து பொன்னையா சம்மதித்து விட்டார் என்று சொன்னதும் கூட்டத்தினர் கைகளைக் தட்டி ஆரவாரம் செய்தனர். அப்பொழுதும் அங்குகொரு பிரச்சினை எழுந்தது. வட்டவிதானை யாகவும் பிள்ளையார் கோவில் வண்ணக்கருமாகவும் இருந்த சீனித்தம்பி இராசலிங்கம் அவர்களும் 1 ஆம், 2 ஆம் குறிச்சிக்கு பிரதேச சபைக்குரிய வேட்புமனு பெற்றிருந்த அவரும் இச் சந்தர்ப்பத்தில் நானும் இருக்கின்றேன். எனக்கும் ஒரு வாய்ப்பினைத் தாருங்கள் என்று அவரும் ஒரு கோரிக்கையினை முன்வைத்தார். சபையினர் ஒரே குடும்பத்திற்குள் இரண்டு பேரை நியமிக்க முடியாது என்று ஆட்சேபனை தெரிவித்தனர். இதன்போது சின்னக்குட்டியருடைய தத்தியிலிருந்துதான் 1 ஆம், 2 ஆம் குறிச்சிக்கு உடைய பிரதிநிதியை தெரிவுசெய்ய வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறுதான் அமரர் சின்னக்குட்டியர் கந்தவனம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறுதான் போட்டியின்றி கந்தவனமும் வேதநாயகமும் தெரிவு செய்யப்பட்டு அயற்கிராமமான தேற்றாத்தீவுக் கிராமத்திலிருந்து உறுப்பினர்களாக வரக்கூடிய சின்னத்தம்பி, வீரசிங்கம் இவர்களோடு மாங்காட்டிற்கு தெரிவு செய்யப்படக்கூடிய கணபதிப்பிள்ளை முருகேசு என்பவரையும் சேர்த்துப் பிடித்து கிராமசபைக்கு தலைவராக வேண்டுமென்ற முடிவு அக்கூட்டத்திலே எடுக்கப்பட்டது. அவ்வாறே கிராமசபைத் தலைவராக த.வேதநாயகம் அவர்களை தெரிவு செய்தனர். இதனால்தான் கோவிந்தன் வத்தை என்று அழைக்கப்பட்ட தற்பொழுது திருஞானசம்பந்தர் குருகுலம் இருக்கின்ற இடத்தை அமரர் வேதநாயகம் அவர்கள் மூலமாக பெற்றுக் கொண்டனர்.

## பொன்னுச்சாமி வன்னியனாரின் வலம்புரிச் சங்கு:

ஒரு திருத்தவேலை ஆலயத்தில் நடைபெற்று அதனுடைய நினைவாக மண்டலாபிஷேக பூசை சங்காபிஷேகமாக நடைபெற்ற போது இவ்வூரில் வன்னிமையாக இருந்த பொன்னுச்சாமி வன்னிமையாரிடம் ஒரு வலம்புரிச் சங்கு இருப்பதாக அறிந்து வைத்திருந்த சி.வ.தன்மன்பிள்ளை அவர்கள் அவரிடம் சொல்லி அந்த சங்கை கொண்டுவர செய்திருந்தார். சங்காபிஷேகம் முடிந்த பிறகு அவரும் வண்ணக்கரும் நானும் ஆலயத்தின் பின்புறமாக கதைத்துக் கொண்டிருக்கும்போது அந்த வலம்புரிச் சங்கை ஆலயத்திற்கு சொந்தமாகத் தாருங்களேன் என்று ஒரு கோரிக்கையை வன்னியனாரிடம் முன்வைத்தேன். அதற்கு வன்னியனார் உங்களுக்கு தேவைப்படும் போது என்னிடம் கேட்டால் நான் கொண்டுவந்து தருவேன் என்று பதிலளித்தார். இதனைக் கேட்ட நான் இந்த சங்கு களுதாவளை கடற்கரையில் ஒதுங்கியதாகவும் உயிரோடு இருந்த இந்த சங்கினை என்னுடைய அம்மாவின் அப்பாவாகிய குமாரவேலு என்பவர் கண்டெடுத்ததாகவும் அவருக்கு என்னுடைய அம்மாவின் அம்மா வேலாயுதர் மனோன்மணி என்பவரோடு குருமண்வெளியைச் சேர்ந்த கருணைரெத்தினம் என்பவருடைய அம்மாவிற்கு தொடர்பு இருந்தமையால் இச்சங்கினை களுதாவளை யில் வைத்திருப்பதை விட குருமண்வெளியில் வைத்திருப்பதே பொருத்தமானதும் பாதுகாப்பானதும் என்று கருதியே குமாரவேலு ஓடாவியார் கடற் தண்ணீரை எடுத்துக் கொண்டுபோய் ஒரு சருவப்பானையில் தண்ணீரை நிரப்பி அதனுள்ளே சங்கினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு வைத்திருந்தாராம். இதனை என்னுடைய அம்மம்மா சொல்லி தெரிந்து கொண்டேன். இந்தக் கதையைச் சொல்லி அவரிடம் இப்பொழுதாவது தருவீர்களா என்று கேட்டமைக்கு சொன்ன பதில் "தரமாட்டேன்... நீங்கள் சொல்லும் போது நானோ என்னுடைய குடும்பத்தில் ஒருவரோ உங்களுக்கு இச் சங்கினை கொண்டுவந்து தருவார்கள்" என்பதாகும். அதன்பின் அவர் பாதுகாப்பாக வைத்திருக்கும் திருநீற்றுப் பையினுள் அந்த சங்கினை வைத்து மறைத்து இடுப்பிலே செருகிக் கொண்டார். அன்றுதான் நான் முடிவெடுத்தேன் இதற்கு ஒரு மாற்றுவழி தெரிவுசெய்யப்பட வேண்டுமென்று. அன்றே ஆலயத்தின் பிரதமகுருவான பிரம்மஸ்ரீ. சோ. கு. சந்திரசேகரம் குருக்கள் அவர்களிடம் கூறி அவர் மூலமாக ஒரு சிறிய வலம்புரிச் சங்கொன்றினை கோவில் பணத்திலே கொள்வனவு செய்து கொண்டோம்.

அமரரின் உறவினர்கள் எனது ஆக்கமும் தங்களின் மலரில் இடம்பெற வேண்டுமெனகோரி என்னிடம் விடுத்த கோரிக்கையை என்னால் மறுக்க முடியவில்லை. அமரர் அவர்கள் ஓய்வாக வீட்டிலிருந்த காலத்தில் நான் அவரை அடிக்கடி சந்தித்து அளவளாவி பல விடயங்களையும் அறிந்து கொண்டேன். அவரைப் பற்றி எழுதுவதாகயிருந்தால் எவ்வளவோ எழுதலாம். ஆனால் இன்றைய சூழலில் எனது மனதில் பட்ட ஒருசில நிகழ்வுகள் மாத்திரம் எழுதவிளைந்திருக்கின்றேன்.

இறுதியாக 43 வருடங்காளாக பெத்தாக்கிழவி குடும்ப வண்ணக்கராகவும் மற்றவர்களை மதிக்கின்ற மற்றவர்களால் மதிக்கப்பட்ட உயர்ந்த மனிதராகவும் உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நிறைந்து நிற்கும் உத்தமர் அமரர் சி.வ.தன்மன்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் என்னையும் ஒரு மனிதனாக மதித்து என் வீடு வந்து இவ்விடயங்களை அலசி ஆராய்ந்து எழுத உதவிய முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட விவசாய பணிப்பாளருமாகிய திரு.த.கனகசபை அவர்களிற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தன்னையே தீபமாக்கி
தரணிக்கு ஒளிகொடுத்த
தன்னிகரில்லாத் தெய்வம்
தன்மன் பிள்ளை திருவடிக்கு
நன்மனத்தாய் இம்மலரை
சமர்ப்பணம் நாம் செய்கிறோமே!



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 | 06 |
| ௳ | ௳ |
| 06 | 12 |
| ௵ | ௵ |
| 1906 | 1988 |

ஞானதீபங்கள் ஒளிகாட்ட - இங்கு
நாளும் விடியல்கள் வழிகாட்டும்.

## அமரர் சின்னத்தம்பி தன்மன்பிள்ளை

(முன்னாள் களுதாவளைப் பிள்ளையார் ஆலய அறங்காவல் சபைத்தலைவரும், பெத்தாக்கிழவி குடும்பப் பெருந்தலைவரும்)

### அவர்களின் நினைவாக


இலங்கேசன் இந்துமன்றம்
வன்னியார் தெரு – மட்/களுதாவளை.

அமரர் தன்மன்பிள்ளை வண்ணக்கர் நினைவாக கவிஞர் தேனூரான் அவர்களால் ஆக்கப்பட்டு களுதாவளை இலங்கேசன் இந்து மன்றத்தினரால் தெய்வ சிந்தனை என்னும் நூல் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கழுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் அமரர் சி. தன்மன்பிள்ளை வண்ணக்கருடனும் அதற்குப்பின்னரும் வண்ணக்கர்களாக பணிசெய்து அமரர்களானோர்




அமரர் சி. வ. தன்மன்பிள்ளை



அமரர்
இ. வ. வேலுப்பிள்ளை




அமரர்
சி. வ. கனகரெத்தினம்




அமரர் சி. வ. இராசரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர்.
சி. வ. கண்ணமுத்து




அமரர்.
பெ. வ. கணபதிப்பிள்ளை



அமரர்.
க. வ. பொன்னுத்துரை




அமரர்.
சி. வ. சிவசுப்பிரமணியம்




அமரர்.
சு. வ. கனகசூரியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்.
இ. வ. சீனித்தம்பி




அமரர்.
சி. வ. செல்லப்பிள்ளை



அமரர்.
ஞா. வ. சண்முகம்



அமரர்.
சி. வ. இராசையா
சித்த ஆயுர்வேத வைத்தியர்




அமரர்.
பெ. வ. சுப்பிரமணியம்


அமரர்.
சி. வ. கிருஷ்ணபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர்.
சு. வ. இரத்தினசிங்கம்



அமரர்.
நெ. வ. இராசையா



அமரர்.
க. வ. சோமசுந்தரம்



அமரர்.
இ. வ. கோபாலபிள்ளை



அமரர்.
சீ. வ. இராசலிங்கம்



அமரர்.
இ. வ. தியாகவினோதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் வண்ணக்குமார்கள்

பெத்தாக்கிழவி குடும்பம்

த . குஞ்சித்தம்பி
க . விதானை
மூ . விதானை
க . விதானை
க . வாத்தியார்
க . பழனித்தம்பி - தோம்புதோர்
இ . வேலுப்பிள்ளை (தற்காலிகம்)
சி . தன்மன்பிள்ளை
இ . வேலுப்பிள்ளை
சி . இராசரெத்தினம்
க . இராசலிங்கம்
கா . வேலாயுதபிள்ளை
க . பாஸ்கரன்
வே . மகேஸ்வரன்
க . வேல்வேந்தன்
கா . வேலாயுதபிள்ளை
க . பாஸ்கரன்

பேனாச்சி குடும்பம்

பூ . காளிக்குட்டி
கு . பரமக்குட்டி(விதானை)
பொலிஸ் தலைமை சின்னகுட்டி (விதானை)
க . கண்ணமுத்து
சி . கண்ணமுத்து
பெ . கணபதிபிள்ளை (தற்காலிகம்)
க . பொன்னுத்துரை
சி . சிவசுப்பிரமணியம்
சு . கனகசூரியம்
ப . குணசேகரம்
க . ஞானசேகரன்
சி . பூபாலசிங்கம்
க . வேதநாயகம்
வே . குணாளன்
இ . கோபாலபிள்ளை
வே . குணாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரக்காமூர்த்தி குடும்பம்

சுண்டர் பொலிஸ் தலைமை மூத்ததம்பி

சுண்டர் பொலிஸ் தலைமை கார்த்திகேசு

சுண்டர் தோம்புதோர் பரசுராமப்பிள்ளை

கா . இளையபெருமாள்

ம . வீரக்குட்டி

க . கந்தப்பெருமான்

கா . வீரக்குட்டி

பரமக்குட்டி பொலிஸ் தலைமை பெரியதம்பி

க . கார்த்திகேசு

இ . சீனித்தம்பி

கி . தம்பிராசா

வ . கனகரெத்தினம்

போற்றிநாச்சி குடும்பம்

கு . காசிப்பிள்ளை

த . கணபதி

பூவர் எனும் கணபதிப்பிள்ளை

ஆறுமுகம் விதானை

சி . செல்லையா

சி . செல்லப்பிள்ளை

ஞா . சண்முகம்

சி . குலசேகரம்

கே . விநாயகலிங்கம்

சி . குலசேகரம்

சி . பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டி குடும்பம்

செ . கணபதிப்பிள்ளை
வே . அழகிப்போடி
வே . கோலிப்போடி
வே . சின்னக்கண்ணப்பர்
இ . கணபதிப்பிள்ளை
க . பொன்னையா
சி . இராசையா
பெ . சுப்பிரமணியம்
சி . கிருஸ்ணபிள்ளை
சு . இரத்தினசிங்கம்
நெ . இராசையா
ச . நாகராசா
பொ . இராசரெத்தினம்
ச . நேசராசா
க . நாராயணப்பிள்ளை


வள்ளிநாயகி குடும்பம்


க . சோமசுந்தரம்
த . கனகசபை
இ . கோபாலபிள்ளை (தற்காலிகம்)
சீ . இராசலிங்கம்
க . ஜெகநாதன்
சோ . திருநாவுக்கரசு
இ . தியாகவினோதன்
இ . சசிகரன்
பே . ரவிசூடி
இ . சசிகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தன்மன்பிள்ளை அவர்களின் தகனக்கிரியையின் போது.....











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்பெருமான் ஆலயம் பற்றிய வரலாற்றுப் பதிவுகள்

புராதனக் கோவில்கள் 9.

## களுதாவளை பிள்ளையார் கோவில்.

'திருவருள்'

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் நோக்கிச் செல்லும் பாதையில் சுமார் 15 மைல்களுக்கப்பாலுள்ள களுதாவளை என்னும் கிராமத்தின்கண் இவ்வாலயம் இருக்கிறது.

கண்டியிலே நாயக்க மன்னர்களின் செங்கோல் நடைபெற்ற காலையில் ஓர்நாள் இந்தியாவிலிருந்து காளிதாசும் அவரது மனைவியுமாக கதிர்காமத்தைத் தரிசிக்க வந்தார்கள். வரும்வழியிலுள்ள களுதாவளை என்னும்கிராமத்தின் அருகேயுள்ள குளக்கரையில் தங்கிவிட்டார்கள்.

அங்கிருந்து கொண்டு அவர்கள் கொண்டுவந்த லிங்கத்தை வைத்து பிரதிஷ்டை செய்துகொண்டு வந்தார்கள். இவர்கள் வழிபட்ட லிங்கத்தின் மாண்பு சுற்றுவட்டாரங்களிலும் பரவியது. அதனால் மக்கள் அடிக்கடி வந்து தம் குறைகளை லிங்கத்துக்கு முறையிட்டார்கள். அக்குறைகளை இறைவன் நிவிர்த்தி செய்தார். இதன்பயனாக இறைவனின் புகழ் திக்கெட்டும் பரவியது.

அக்காலையில் நாய்ப்பட்டிமுனை என்னும் இடத்தில் இருந்து மன்னனின் பிரதிநிதியாக கடமை ஆற்றியவன்னிமை லிங்கத்தைக் கொண்டுவரும்படி காளிதாஸிற்கு கட்டளை இட்டார். அதன்படி புறப்பட அவர்கிளம்பியபோது "என்னைக்கொண்டு போக வேண்டாம்" என்ற அசரீ[illegible]யினால் [illegible] ருகுளிதோண்டி பு[illegible]

osite www.australiaawardssrilanka.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளது. மேலே 13-விநாயகர் விக்கிரகங்கள் வைக்கப்பட்டு மூலஸ்தானம் சிறப்பாகத் திகழ்கிறது. இவ்விக்கிரகங்கள் அடியார்களும் பக்தர்களின் நன்கொடையே.

ஏககாலத்தில் 13 விநாயகரை ஒரே தடவையில் வணங்கக்கூடியதாக இருப்பது ஈழ வளநாட்டில் ஓர் மகத்தான செயலேயாகும். மூலஸ்தானத்தின் மேலே மச்சு அமைக்கப்பட்டுள்ளது. இதில் கணக்கற்ற நாகங்கள் வதிகின்றன. இவைகள் எவரையும் தீண்டாது விநாயகருக்கு காவலாக இருக்கின்றன.

மூலஸ்தானத்தை சிறக்கவைக்க உள் வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீதி தூய்மையாக இருப்பது போற்றக்கூடியது. எதிரே பலிபீடமண்டபம், தம்பமண்டபம், சந்தனமண்டபம், வெளிமண்டபம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன: முன்னே மடாலய ரீதியாக ஓர் முகப்புமண்டபம் இருக்கிறது. இதனை உடைத்து சிறந்த கோபுரம் எழுப்புவதாக இதன் பாரபரிப்பு காரரான திரு தன்மப்பிள்ளை அவர்கள் முயற்சி எடுக்கிறார். அன்னாரின் தொண்டு போற்றக்கூடியதே.

கோவிலில் தினமும் மதியப்பூஜை நடைபெறுகிறது. இப்பூஜை ஒருநாளாவது கோவில் கலக்காற் செய்யப்படுவதில்லை; எப்படியும் யாராதல் பூஜைசெய்விக்க வருவார்களேயானால் விநாயகரின் அருள்தான் எம்மட்டு.

…லம் கிழக்கு இலங்கை மக்கள் அனைவராலும் போற்றப்படு… அதுமட்டுமல்… …களாலும் போற்றப்படுகி…



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு சைவக் கோயில்கள் என்னும் வரலாற்றுப் பதிவிலிருந்து எம்பெருமான் ஆலயம் பற்றிய பகுதி

மூலஸ்தானத்தை நடுவாகக் கொண்டு உள்வீதி அமைக்கப்பட்டுள்ளது. பலிபீடம், தம்பமண்டபம், சந்தனமண்டபம், வெளிமண்டபம் என்பவையும் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் முன்னே மடாலய விதிக்கமைந்த கோயில் முகப்பு மண்டபம் இருக்கின்றது. இம்முகப்பு மண்டபத்தை உடைத்து சிறந்த கோபுரம் ஒன்று எழுப்புவதற்காக கோயில் பராமரிப்புக்காரரான திரு. தன்மம்பிள்ளை வண்ணக்கரும், அவர் தலைமையில் அமைந்த மற்றைய வண்ணக்குமாரும் சிரமமெடுத்து வருவதாகத் தெரிகிறது. இம்முயற்சி நிறைவேறப் பெறின் மட்டக்களப்பு மக்கள் செய்த தவப்பேறெனலாம்.

தற்காலம் ஆனிமாதம் உத்தரநட்சத்திரத்தில் தீர்த்தோற்சவமும், அதற்கு முன்னர் ஒன்பது திருவிழாக்களும் நடைபெறுவதுண்டு. விழாக்கள் அனைத்தும் பெரும்பாலும் கிராம மக்களின் ஒற்றுமையால் அவர்களாலேயே நடாத்தப்பட்டு வருகின்றன. கோவில் தலைமைக்காரரும், ஆறு குடும்பத்தாரும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்கள். பெத்தா கிழவி குடும்பம், பேனாச்சி குடும்பம், சுரக்காமுத்தி குடும்பம், போத்தாச்சி குடும்பம், செட்டி குடும்பம், வள்ளிநாயகி குடும்பம் (வந்தார் குடும்பம்) என்பன அக்குடும்பங்களாகும். ஆறாவதான வள்ளிநாயகி குடும்பம் என்பது சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகும்.

வாரம் தோறும் கோயிலில் வெள்ளிக்கிழமை மாத்திரம் பூசனை நடைபெற்றது. அன்று பக்கத்து ஊரவர்களும் வந்து பொங்கலிட்டு பூசனை செய்வார்கள். சில வருடங்களுக்கு முன்னர் தினப்பூசை செய்யும் வழக்கம் நிலை நாட்டப்பட்டது. இந்தப் பூசனையில் ஒரு நாளாவது கோயில் கணக்கால் பொங்கல் நடத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எப்போதாவது, யாராவது இந்தப் பொங்கல் பூசனைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

களுதாவளை வினாயகர் கோயில் கிழக்கில் விசேடம் பெற்ற ஒன்று. அதற்கு நேர் எதிரில் ஒரு மைலுக்கு அப்பாலுள்ள குளத்தோரத்தின் மீதும், இராசபாட்டை ஓரமாகவும் ஒரு வினாயகர் கோயில் அமைப்பு உண்டாகி இருக்கின்றது. எந்த ஊருக்குச் செல்லும் வண்டியும் அந்த இடத்தில் நின்று தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்திச் செல்லும் வழக்கம் இன்னும் நிகழ்ந்து வருகின்றது. அவ்வாறு களுதாவளைப் பிள்ளையார் பிரசித்தமாக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் வினாயகரை வழிபடுவது முயற்சியானதே. ஆனால் மட்டக்க ளப்பைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் சிலரும் இவ்வழிபாட்டில் ஈடுபாடு கொண்டுள்ளமையை நாம் காணலாம். ஒரு முஸ்லிம் வியாபாரி, தனது குழந்தை ஊமையாக இருப்பது கண்டு செய்யாத வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தார். தெய்வக் குற்றமென்று பல நேர்கடன்கள் செய்தும் பார்த்தார். இறுதியில் களுதாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு அக் குழந்தையைக் கொண்டு வந்து, கோயில் வீதியில் சுவாமி முன்னிலையில் கிடத்தி, பின்னர் குழந்தையைப் பேசுவித்தார். உடனே பிள்ளை வாய் திறந்து கதைக்கத் தொடங்கிற்று, என்பர். இப்படி அற்புதங்கள் பல களுதா வளைப் பிள்ளையாரால் நிகழ்ந்து வரக் காணுகின்றோம். கோயிலில் நேர்த்திக் கடனாகத் தமது பிள்ளைகளைப் பெற்றார் கொண்டு வந்து விற்று வாங்குவதை ஒவ்வொரு மத்தியானப் பூசையின் போதும் இங்கு காணலாம்.

கோயிலுக்கு மானியமாக பதின் மூன்று ஏக்கர் விளை நிலங்கள் இருக்கின்றன. இந்த விளைநிலங்களின் வருவாயைக் காட்டிலும் பொதுமக்கள் செலுத்தும் காணிக்கை மிக மிக அதிகம் என்று சொல்லலாம். இவற்றை விட, செலவின்றி கோயிலுக்கு வேண்டிய மரங்கள் கோயிலுக்கு நேரே கடலில் வந்து அடைகின்றன. களுதாவளைப் பிள்ளையாரின் ஆணையின்றி வேறுயாரும் அசைக்கவும் முடியாதபடியான பெரிய மரங்களாகவே இருப்பதை நாம் நேரில் அண்மையில் கூடக்கண்டுள் ளோம்.

வண்ணக்கர் குழு எடுத்துக் கொள்ளும் பெருமுயற்சிகள் யாவும் ஊர்மக்களது பொது முயற்சியாகவே கருதப்பட்டு வரவேற்கப்படுகின்றன. அவையாவும் நிறைவேறி இக்கோவிலால் மட்டக்களப்பு நாடு மிக்கோங்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**வித்துவான் வீ.சீ. கந்தையா B.O.L**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TELEPHONE:
MINISTRY OF EDUCATION
PERMANENT SECRETARY: 3148
OFFICE: 5331 — EXTN 137

Ref. No. D 59/33/48

The Ministry of Education,
(P. O. Box 500)

Colombo, 18th Sept. 1948

Sir,

Junior School for Kaluthavalai.

With reference to your petition forwarded through S.U. Ethirimanasingham Esq. M.P. I have the honour to inform you that as there are no pupils in the Post Primary classes of BT/Kaluthavalai T.M.S. and BT/Padirippu Junior School is less than two miles from the place, the Department considers a Junior School to be unnecessary.

I am, Sir,
Your Obedient Servant,

for Permanent Secretary to the
Ministry of Education.

S.V.Thanmanpillai Esq.,

CP/-

அரசினர் கனிஷ்ட பாடசாலை ஒன்றினை (தற்போதைய களுதாவளை மகாவித்தியாலயம் தே.பா) ஆரம்பிப்பதற்காக களுதாவளை சமூகத்தினரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு கல்வி அமைச்சின் செயலாளரால் 18.09.1948 இல் சி.வ.தன்மன்பிள்ளை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பதிற்கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாருதி அச்சகம், களுதாவளை. - 077 8842223, 075 3355995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org